

# சக்தி

சர்வதாரி - பங்குனி

விலை 8 அணா

# பொருள் அடக்கம்

மலர் 15 : இதழ் 12


| | | |
|---|---|---|
| சரோஜினி தேவி | தலையங்கம் | 1 |
| காலச்சுழல் | துறிப்புகள் | 3 |
| பெர்னாட்ஷாவுடன் ஒரு பேட்டி | சார்லஸ் ஹாம்ப்லெட் | 5 |
| நான் விரும்புவது | சரோஜினி தேவி | 7 |
| குட்டிக் கதைகள் | எட்வின் அர்னால்டு | 9 |
| சரோஜினி | லட்சுமி அம்மாள் | 17 |
| பொருந்தா மணம் | என். பி. வி. ராஜகோபால் | 20 |
| கடவுளும், காதலும் | ல. சண்முக சுந்தரம் | 24 |
| படங்கள் | ... ... | 33—40 |
| என் சரிதை | டி. என். ராஜரத்தினம் | 41 |
| சந்தேக வாதம் | வி. சக்கரை செட்டியார் | 48 |
| நடிகை | இலியா இரென்பர்க் | 50 |
| டால்ஸ்டாய் | 'டாஸ்' | 56 |
| சரித்திரமும் நோயும் | 'லக்ஷ்மி' | 58 |
| சுதந்திரமும் சுபிட்சமும் | கண. முத்தையா | 66 |
| நாட்டுப் பாடல்கள் | சு. ரா. ஆதிமூலம் | 68 |
| புத்தக உலகம் | மூவர் | 70 |


அட்டைப் படம்: பி. ரங்கநாதன், சென்னை

சர்வதாரி பங்குனி

சக்தி



Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
1 LB. NET
மிகவும்
ருசிகரமானது
மாத்திரமல்ல-
இது
நல்லது
புஷ்டியளிக்கும் பதார்த்தங்கள் நிறைந்தது
போர்ன்-வீடாவில் 95 சதவிகிதம் எலும்பு வளர்ச்சிக்கும் ஜீவசக்தி யளிப்பதற்குமான சத்துகள் இருக்கின்றன. தவிர அது ருசியாகவும் ஜீர்ணத்துக்கு தூண்டுகோலாகவும், எளிதில் ரத்தத்துடன் சேர்ந்து புஷ்டி தருவதாகவும் இருப்பதால் குறிப்பாக கர்ப்பிணிகளுக்கும் வியாதிக்குப்பின் குணமடையும் தருவாயிலும் இன்றியமையாத உணவாக விளங்குகின்றது.
காட்பரீஸ்
போர்ன்-வீடா
கால்ஷியம் விடமின்கள் நிறைந்தது
காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி

## லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

| | | |
|---|---|---|
| 5,00,000 நூற்கும் கதிர்கள் | ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல். | நம்பர் 80 வரை நூல்கள் |

o

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

o

## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்




தரையைச் சமப்படுத்தும் புல்டோஸர்

மிகவும் சிரமப்பட்டு மண்வெட்டி கடப்பாறை இவைகளைக் கொண்டு நிதானமாகக் காடுகளையழித்து தரையைச் சமப்படுத்தும் அதே வேலையை குறைந்த நேரத்தில் திருப்திகரமாகப் புல் டோஸர், ஸ்டீம் ரோலர் இவைகளைக் கொண்டு செய்ய முடிகிறது.

மண்வெட்டி, புல் டோஸர், கடப்பாறை ஸ்டீம் ரோலர் ஏதானாலும் சரி. கட்டிட நிர்மாண வேலைகளின் முன்னேற்றத்துக்கு உதவுவது எஃகே.

வருங்காலத்திலும் இம்முன்னேற்றத்தின் முன்னணியில் நிற்பது டாடா எஃகே.

டாடா எஃகு

**தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல், கம்பெனி லிமிடெட்.**

தலைமை சேல்ஸ் ஆபீஸ்:

23B, நேத்தாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா

## பொன் விழாவின் பொலிவு......




பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

# ஜீவாம்ருதம்

ஆரோக்யத்தின் சிகரம் ஆனந்தத்தாண்டவம். சுகவாழ்வும் ஆரோக்யமும் அனைவருக்கும் அத்தியாவசியமானது. அரை நூற்ருண்டுக்கு மேலாக மானிட வர்க்கத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியும் மாசற்ற தேகாரோக்யமும் அளித்துவரும் பண்டித டி. கோபாலாச்சார்லுவின் ஜீவாம்ருதம் பொன் விழாவின் பொலிவுடன் விளங்குகிறது.



**ஆயுர்வேதாஸ்ரமம் லிட்**
(ஸ்தாபிதம் 1898)
**மதராஸ் 17**



## காந்திஜி நூல்கள்

○

| | |
|---|---|
| மாணவருக்கு | ரூ. 5 0 |
| பெண்களுக்கு | ரூ. 3 12 |
| ஹிந்துமுஸ்லிம் பிரசினை | ரூ. 6 0 |
| சமஸ்தானப் பிரசினை | ரூ. 6 0 |
| நமது மொழிப் பிரசினை | ரூ. 2 8 |

(தபால் செலவு தனி)

○

## புதுமைப் பதிப்பகம் லிமிடெட்,

**காரைக்குடி**

சர்வதாரி
மலர் 15

# சக்தி

பங்குனி
இதழ் 12

மெய்ப் பொருள் காண்பது அறிவு

## சரோஜினி தேவி

இம்மாதம் 2-ம் தேதி ஐ. மா. கவர்னரான ஸ்ரீமதி சரோஜினி தேவி நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். இந்திய சரித்திரத்தில் இது ஒரு பெரும் துக்க நாளாகும். தேச விடுதலைக்கும் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் பாடுபட்ட தியாகிகளில் சரோஜினியும் தலை சிறந்தவர்; மேலும் இந்தியப் பெண் சமுதாயத்துக்கும் சரோஜினி ஒரு உதாரணமாகவும், தியாக உருவமாகவும் வாழ்ந்து வந்திருக்கிறார். ஸ்ரீமதி சரோஜினியின் மரணத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது நமது பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு, "எனது தலைமுறையின் மன்னர்களும், தளபதிகளும் மறைகின்றார்கள்....எனது இதயம் பாழடைந்தது போல், எனது ஆத்மா வைதவ்யம் பூண்டது போல் எனக்குப் படுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். சுதந்திரப் போரில் தலைமை வகித்த காந்தியடிகள் சென்ற வருடம்தான் பிரிந்து சென்றார். நேரு கூறுவது போல், நமது தலைவர்கள் ஒவ்வொருவராக மறைகிறார்கள். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் தேசத்துக்கு மிக முக்கியமான ஒரு விஷயத்தை நமது தலைவர்கள் மனத்தில் கொள்வது நல்லது. எல்லா நாட்டுத் தேசத் தலைவர்களும் தமது காலத்துக்குப்பின் தம்மைப் போல் போராற்றலுடன் தலைமை தாங்க, பிரதிநிதிகளை சிருஷ்டிப்பது வழக்கம். லெனின் ஸ்டாலினைத் தயார் செய்துவிட்டுப் போனார். இன்று ஸ்டாலின் மாலடோவைத் தயார் செய்து கொண்டிருக்கிறார். அதுபோலவே சர்ச்சிலுக்குப்பின் அந்த ஸ்தானத்தை வகிக்க ஈடன் இருக்கிறார். சக்தி வாய்ந்த தலைவன் என்று ஒருவன் இல்லா விட்டால் தேசத்தின் ஏகோபித்த சக்தி சிதறுண்டு போகும். நாமோ சுதந்திரப் போராட்டத்திலேயே அறுபதுக்கு மேற்பட்ட ஆண்டுகளைக் கழித்துவிட்டோம். ஆனால், அந்த வேளையில் நமது தலைவர்கள் தமது செல்வாக்கை நிலை நிறுத்திக்கொண்டார்களே யன்றி, தமக்குரிய அரசியல் வாரிசுகளைப் பிறப்பித்து விடவில்லை. அப்போது அதற்கு அவசியம் இல்லாதிருக்கலாம். ஆனால், இன்றும் அந்தக் குறை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. நமது தலைமுறையின் மன்னர்களும், தலைவர்களும் மறைந்து

வரும் இவ்வேளையில், நமது தலைவர்கள் எதிர்காலத்தில் தேசத்தின் ஏகோபித்த சக்தியை நடத்திச் செல்ல, தகுந்த தலைவர்களை தயார் செய்ய வேண்டியது முக்கியமாகும், இவ்விஷயத்தில், தலைவர்கள் மட்டுமல்ல, பொது மக்களும் தேசத்தின் தேவையை உணர்ந்து பொறுப்புணர்ச்சியோடும், தன்னலமற்ற தன்மையோடும், தியாக புத்தியோடும் பாடுபட்டால்தான் எதிர்காலத்தில் ஒரு மகாத்மாவும், ஒரு சரோஜினியும் நம்மிடையே தோன்ற முடியும். இந்தியப் பிரஜைகள் ஒவ்வொருவரும் காந்திஜி, சரோஜினி, நேரு முதலிய தலைவர்களைப் போல பொறுப்புணர்ச்சி, ஞான திருஷ்டி, தியாக புத்தி ஆகியவை நிறைந்து விளங்குவதைத்தான் இந்தியாவின் லட்சியமாகக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நமது மறைந்த தலைவர்கள் நம்மிடையே என்றும் அமரர்களாக விளங்குவார்கள்.

மரணமே, சற்று நில்!
எனது மானுடத் தேட்டங்கள்
யாவும்
கை கூடும் வரை,
எனது அபிலாஷைகளும்
கனவுகளும்
துயரங்களும் சாந்தியடை
யும் வரை,
மரணமே! நான் சாக
மாட்டேன்

என்று ஸ்ரீமதி சரோஜினி தேவி பாடிச் சென்றார். அவரது கனவை, மானுடத் தேட்டத்தை, நிறைவேற்றுவதும், சரோஜினி தேவியை அமரராக்குவதுமே நமது கடமை.

# காலச்சுழல்

## மத்திய, மாகாண பட்ஜெட்டுகள்:

1949—50 வருடங்களுக்குரிய அரசாங்க வரவு செலவுத் திட்டங்கள் சமீபத்தில் வெளியாகியுள்ளன. மத்திய சர்க்கார் பட்ஜெட்டிலும் மாகாண சர்க்கார் பட்ஜெட்டிலும் வரவும் செலவும் கட்டிவரவில்லை; இரண்டிலும் துண்டு விழுந்திருக்கின்றன. ஆனால் இந்தத் துண்டு விழும் தொகையை நிரப்ப சர்க்கார் புதுப் புது வரிகளை விதிக்கப் போகிறார்கள். அரசாங்கத்தின் செலவு தொகையை மக்கள் ஏற்றுக்கொள்வது நியாயம்தான் என்றாலும் வரிச்சுமை மக்களது தாங்கும் சக்திக்கு உட்பட்டதா யிருக்க வேண்டும். இன்றைய விலைவாசியில் ஜனங்களின் வாழ்கைத்தரம் மிகவும் படுமோசமான நிலையில் இருக்கிறது. இந்த நிலைமையில் சர்க்கரை, மிளகாய் முதலியவற்றின்மீது வரி அதிகரிப்பும், தபால் தலைகளின் விலை கூடுதலும் மறைமுகமாகவும், நேர்முகமாகவும் பொது மக்களை வெகுவாகப் பாதிக்கும். அதே வேளையில் சர்க்கார், மூலதனத்தின் மீதுள்ள வரிகளை நெகிழ்த்தி யிருப்பது பணக்காரர்களுக்குச் சாதகமானதாகும். பெரும்பாலோருடைய சௌகரியத்தைக் கவனிப்பதுதான் ஜனநாயகமே அன்றி சிறுபான்மையோர் நலனைக் கவனிப்பது ஜனநாயகமல்ல. துண்டு விழும் நிதியைச் சரிக்கட்ட, சர்க்கார் மக்களைப் பாதிக்காதபடி, பெரிய தன வியாபாரிகள் மீது வரிகள் போட்டிருந்தால், பொது மக்களுக்கு நன்மையாக இருந்திருக்கும். ஆங்கிலேயர் தேசப் பாதுகாப்புக்காக 60 கோடி ரூபாய் ஒதுக்கியதை எதிர்த்த நமது தலைவர்கள் இந்தியாவுக்கு எந்தவித ஆபத்தும் இல்லாத இந்த வேளையில் 156 கோடி ரூபாய் ஒதுக்கி யிருப்பது அதிகப்படியான தொகையேயாகும். ஆகவே சர்க்கார் தங்கள் பட்ஜெட்டுகளை மீண்டும் நன்றாகப் புனராலோசனை செய்து மக்களுக்கு நலம் செய்வார்களென நம்புகிறோம்.

## பாரதி பாடல்கள்:

கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களை யெல்லாம் தேசியச் சொத்தாக்கவேண்டும் என்ற அபிப்பிராயத்தை முதன் முதலில் ஸ்ரீ. ப. ஜீவானந்தம் பாரதி மண்டப விழாவில் பிரஸ்தாபித்தார். அதன்பின் சென்னையில் எழுத்தாளர்களும், பத்திரிகாசிரியர்களும் ஸ்ரீ ச. து. சு. யோகியாரின் தலைமையில்கூடி, பாரதி விடுதலைக் கழகம் என்று ஒரு கழகத்தை ஸ்தாபித்தார்கள். அதன் நோக்கம் பாரதி இலக்கியத்தை தேசச் சொத்தாக்குவதே. இந்த நோக்கத்துக்கு பல பத்திரிகைகளும், இரண்டொரு காங்கிரஸ் கமிட்டிகளும், சில தலைவர்களும் ஆதரவு காட்டினார்கள். இது விஷயமாக நாம் சக்தியிலும் வற்புறுத்திக் கூறியிருக்கிறோம். இப்போது சென்னை சர்க்காரின் கல்வி மந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் சட்ட சபையில் பாரதி பாடல்கள் சர்க்கார் சொத்தாகிவிட்டது என்ற நற்செய்

தியைத்தெரிவித்திருக்கிறார். இந்தக் காரியத்தைச் செய்த சென்னை சர்க்கார் மக்களது ஏகோபித்த பாராட்டுக்குரியது. இது விஷயத்தில் யாதொரு கைம்மாறும் கருதாது தமது உரிமைகளை விட்டுக்கொடுத்துள்ள ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பசெட்டியாரும் நமது பாராட்டுக்குரியவர். பாரதி பாடல்களைப் பிரசித்தமாக்க சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்குமென்று உறுதி கூறியுள்ளார்கள். பாரதி பாடல்களை குறைந்த விலையில் அச்சிட்டு சகல மக்களுக்கும் கிடைக்கும் வண்ணம் செய்வது சர்க்கார் கடமையாகும். சர்க்காரின் சர்வகலாசாலை வெளியீடுகள், எல்லோருக்கும் நேரடியாக, குறைந்த விலையில் இப்போது கிடைத்து வருவது இல்லை. பாரதி பாடல்களும் இந்தக் கதிக்கு ஆளாகிவிடக்கூடாது. ஆதலால், சர்க்கார் பாரதி பாடல்களை சரியான படி பரப்ப பல்வேறு முயற்சிகளையும் எடுக்க வேண்டியது அவசியம். புத்தகம் போடுவதோடு தமது கடமை நிறைவேறி விட்டது என்று கருதிவிடக்கூடாது.

"வாட்ரோலியம்":

சமீபத்தில் தமிழர்கள் பெருமைப்படக்கூடிய ஒரு அபூர்வச் செய்தி வெளியாயிற்று. சென்னை தேசிய ஆராய்ச்சிக் கழகத்தினரான ஸ்ரீ ஸி. ஆர். பக்தவத்ஸலம் என்பவர் கடல் தண்ணீரிலிருந்து பெட்ரோலைப்போன்ற ஒரு எண்ணெயை சிலகழிவுப் பொருள்களின் உதவிமூலம் எடுக்க முடியும் என்று கண்டு பிடித்துள்ளார். இதன்மூலம் இன்றுள்ள விலையைக் காட்டிலும், 4 மடங்கு குறைந்த விலையில் வாட்ரோலியம் (இது புதிய பெயர்) மக்களுக்குக் கிடைக்குமென்றும், இந்தியத் தேவைக்குப் போக, உபரியாகவும் மிஞ்சக்கூடும் என்றும், பெட்ரோலில் இல்லாத வேறு சில சௌகரியங்களும் இதில் இருக்கின்றன என்றும் ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார். இந்த உண்மையை ஸ்ரீ ஸி. ஆர். பக்தவத்சலத்திடமிருந்து, ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்து ஒரு வெள்ளை முதலாளி வாங்க முயன்றதாகவும் கூறப்படுறது. இது விஷயத்தை சர்க்கார் கவனித்து ஆராய்ச்சியாளருக்கு வேண்டும் வசதிகள் செய்து கொடுத்து அபூர்வமாகக் கிடைக்கும் நாட்டின் செல்வத்தைப் பெருக்கவேண்டியது அவசியம். இந்தியாவைச் சுற்றிலும் கடல் பிரதேசம்தான். ஆகவே நமக்கு கடல் தண்ணீர்ப் பஞ்சமில்லை. மேலும், இந்தப் புதிய எண்ணெயான வாட்ரோலிய உற்பத்தியைப் பெருக்குவதின்மூலம் இந்தியாவில் இயந்திர உற்பத்தியும் பொருளுற்பத்தியும் அதிகமாகும். சீராக்க வேலையில் ஈடுபடும் நவ இந்தியா தேவையினால் வாடக் கூடாது. ஆகவே சர்க்கார் இவ்விஷயத்தில் ஆவன செய்வார்களென்று நம்புகிறோம்.

✲

## ஒதுக்குங்கள்

கெட்ட உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக்கூடிய நாடகங்களையும், சினிமாக்களையும் பரிபூரணமாக ஒதுக்கித் தள்ளிவிடவேண்டும்.

—மகாத்மா காந்தி

92 வயது நிரம்பிய ஆங்கில நாடக ஆசிரியர் ஷாவைப் பேட்டி கண்ட சில விபரங்கள்.

# பெர்னர்ட் ஷாவுடன் ஒரு பேட்டி

சார்லஸ் ஹாம்ப்லேட்

ஹெர்போர்டுஷயர் ஜில்லாவில் அயோட்ஸெயிண்ட்லாரன்ஸ் என்னும் கிராமத்தில் வசித்து வருகிறார் பெர்னர்ட் ஷா. அவருடைய வீட்டுக்கு நான் செல்லும்போது ஷா தூங்கிக் கொண்டிருப்பதாக என்று பணிப் பெண்கள் கூறினார்கள். உடனே அங்கிருந்த அறையில் உட்கார்ந்தேன். ஜன்னல் வழியாகப் பக்கத்து அறையை எட்டிப் பார்த்தேன். தொப்பியையோ, மூக்குக் கண்ணாடியையோ கழற்றாமல், மார்பின் மேல் கைகளை வைத்துக் கொண்டு படுத்து உறங்கிக் கொண்டிருந்தார் ஷா.

உள்ளே வைக்கோல் திணிக்கப்பட்ட இரண்டு ஆந்தைகள், பீங்கானில் செய்யப்பட்ட ஷேக்ஸ்பியரின் உருவச்சிலை, பிரான்சு தேசத்தின் வீராங்கனை ஜோன் ஆப் ஆர்க்கின் வெண்கல விக்கிரஹம்—இவை அந்த அறையில் இருந்தன. மேலும், ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகிய இரண்டு ஜில்லாக்களின் படங்களும் அங்கே தொங்கவிடப்பட்டிருந்தன. ஷாவின் புத்தகங்களுடைய முதல் பதிப்பின் பிரதிகளும் இருந்தன.

ஷா வந்துவிட்டார். கையை இறுகப் பிடித்துக் குலுக்கினர். அவருடைய சூழ் நிலையே ஒரு அலாதி. அவர் பேசத் தொடங்கிவிட்டால், பிரமாண்டமான உலகப் பிரச்னைகள்யாவும் ஏதோ குடும்பத்தகாறுகளாக மாறிவிடும்; தற்கால சரித்திர புருஷர்களாக விளங்கும் பெரிய பெரிய தலைகள் எல்லாம், சின்னஞ் சிறு பள்ளிக்கூடப் பயல்களைப் போல் ஆகிவிடுவார்கள். அப்படிப்பட்ட எட்டாத உயரத்தில், 'ஷா-ஸ்தான'த்தில் அமர்ந்து பேசுவார் ஷா!

ஷாவைப் பார்த்து நான் கேட்டேன்:

"மிஸ்டர் ஷா! ருஷ்யாவுடன் யுத்தம் வரலாம் என்று அநேகர் பயப்படுகின்றனர். ஆனால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

ஷா: ருஷ்யாவுடன் யுத்தம் என்று பேசுவது சுத்தப் பைத்தியக் காரத்தனம். ஐக்கிய சோவியத் சமதர்மக் குடியரசு யுத்தத்தை விரும்பவில்லை. ஸ்டாலின் யுத்தம் தொடங்கினால், அவருடைய உத்தியோகம் பறி போய்விடும்.

நான்: ஜனங்கள் கம்யூனிசத்தைக் கண்டு பயப்படுகிறார்கள். யுத்தம் என்று பயமுறுத்துவதைப் பார்த்துப் பார்த்து அநேகர் சலித்துப் போய்விட்டார்கள். பெர்லின் நெருக்கடி போன்ற சம்பவங்கள் சகிக்கமுடியாமல் இருக்கின்றன.

ஷா: கம்யூனிசம் என்னவோ பரவத்தான் செய்யும்; மக்களும் அதைக் கண்டு பயப்படத்தான் செய்கிறார்கள். எப்போதும் அவர்கள் பயந்து கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். தர்க்க ரீதியாக சிந்தனை செய்யக் கற்றுக் கொண்டால் ஒழிய, அவர்கள் எதிர்காலத்திலும், எப்போதும் பயந்து கொண்டுதான் இருப்பார்கள். மக்களுக்குத் தெளிவான சிந்தனை சக்தியை ஊட்டும் முயற்சியில் நான் அநேக வருஷங்களைக் கழித்திருக்கிறேன். ஆனால் இன்னும் அவர்கள் பயந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இப்போது கல்வித் தரம் இருக்கிறதே, அதிலும் அரசியல் வாதிகளின் கல்வித்தரம், படு மோசமாக இருக்கிறது. கேவலம் எழுதப் படிக்கக்கூடத் தெரியாத இந்த ஆசாமிகளுக்கு, தலைமை தாங்கும் யோக்கியதை எப்படிக் கிடைத்துவிடும்?

அறுபது வருஷங்களுக்கு முன்னால் ஸிட்னி வெப்பும் நானும் கம்யூனிசத்தைக் கண்டுபிடித்தோம். அதைக் கண்டு பயப்படுவதற்குக் காரணமே கிடையாது. லெனினைப் போல ஸ்டாலினும், சமதர்ம முறைகளில தம் நாட்டை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கிறார். தம் உள் நாட்டுக் கொள்கையையோ, பொருளாதாரக் கொள்கையையோ யுத்தத்தின் முன் திறந்து வைக்க அவர் விரும்பவில்லை.

நீங்கள் பெர்லின் நெருக்கடி என்று சொன்னீர்களே, அது எப்படி இருக்கிறது தெரியுமா? இரண்டு அண்டை வீட்டுக்காரர்கள் கை செத்துப் போன நிலையில், செத்துப் போன ஒரு பூனையைத் தூக்கி மதில் சுவருக்கு இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் மாறித் மாறி எறிந்துகொண் டிருப்பதைப் போல இருக்கிறது. செத்துப் போன பூனை என்பது இங்கே கம்யூனிசம் தான். பெர்லினில் யாருக்குத்தான் என்ன உரிமை இருக்கிறது? பெவினும், விஷின்ஸ்கியும் அதை விட்டுப்போய்விடவேண்டும். ஜெர்மனியை ஜெர்மனியர்களே தம் சௌகரியம்போலக் கண்காணித்து உருவாக்கிக் கொள்வார்கள்.

நான்: மேற்கத்திய வல்லரசுகளும், கிழக்கத்திய வல்லரசும் ஒத்துப் போனாலும், இருவருடைய பாஷை வேறுபாடு மத்தியில் ஒரு தடங்கலாக இராதா?

ஷா: பாஷை தடங்கல் ஆகாது. சோவியத் மக்களுக்கும், மேற்கத்திய மக்களுக்கும் பரஸ்பரம் நல்ல பரிச்சயம் ஏற்பட முடியும்.

நான் சோவியத் நாட்டுக்குள் போய் வருவதிலும், ருஷ்யர்களைச் சந்திப்பதிலும் உள்ள சிரமத்தைக் கூறினேன்.

ஷா: அது எனக்குப் புரிகிறது. நாம் இருபது வருஷகாலமாக அவர்களைக் கண்டபடித் திட்டி தூஷித்து வந்திருக்கிறோம். அப்படியிருக்க அவர்கள் நம்மை நம்புவார்கள் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

பெர்னார்ட் ஷா, அத்துடன், 'பத்தாம் தரப் பத்திரிகைகளையும், பொது ஜனப் பிரமுகர்கள் சம்பந்தமாக மகா கேவலமான முறையில் உண்மைகளைத் திரித்துக் கூறுவதையும்' குறிப்பிட்டார். "இந்த நாட்டில் அரசியல் பிரசங்கத்தின் தரம் சர்வ மட்டமாக இருக்கிறது" என்றும் கூறினார்.

1947-ல் நடந்த ஆசிய மகாநாட்டுக்குத் தலைமை தாங்கியபோது ஸ்ரீமதி சரோஜினிதேவி ஆசிய நாட்டாரை வரவேற்று உபதேசித்த சொற்பொழிவு இது. இந்தச் சொற்பொழிவில்தான் மடிக்க எத்தனை எத்தனை உண்மைகள் புலப்படுகின்றன!

# நான் விரும்புவது

சரோஜினி தேவி

எங்கள் தாயகத்துக்கு வந்திருக்கும் உங்களை வரவேற்கிறேன். உங்கள் பழம் பெருமையை நீங்கள் நினைவு கூர்வதற்காகவும், நாமெல்லோரும் ஒரு பொதுக் கனவைக் காண்பதற்காகவும் உங்களைத் திரும்பவும் வரவேற்கிறேன். ஆசியா உலகத்தை ரக்ஷிக்கும். ஆசியா, விரோதிகள் நிறைந்த ஒரு நாடாக இராது.

உலகிலே எல்லா நாடுகளும் சிநேகம் கொள்ளுவதற்குரிய இடமாக இந்தியா இருக்கும். வேறுபட்ட பாஷைகளைப் பேசும் நீங்களும் நானும் ஆசிய மக்களின் சுதந்திரத்துக்காக ஒரு பொதுச் சாசனத்தைத் தயாரிப்போமாக!

கல்லறைகளிலிருந்து நீங்கள் உயிர்பெற்று எழ வேண்டும். ஆதியந்தமற்ற நித்தியத்துவத்தின் பகுதியாக நீங்கள் ஆய்விட வேண்டும். உயிர்பெற்றெழுந்து, "இன்று மரணம் என்று ஒன்றுகிடையாது. இனிமேலும் மரணம் என்று ஒன்று இருக்கப் போவதில்லை" என்று கூறுங்கள். ஆசிய மக்களாகிய நாம் ஒன்றாக முன்னேறிச் செல்லுவோம். நாசகரமான காரியங்களாலும் மற்றும் நம்மைப் பாதிக்கும் எதனாலும் மனந்தளர்ந்து, தோல்வி மனப்பான்மை கொள்ளாதபடி நாம் முன்னேறிச் செல்லுவோம். நல்லதாக இருக்கும் எதற்கும் சாவு கிடையாது என்பது பரம்பரையாக நிலைத்துவரும் என் குடும்பத்தின் சொந்த மரபு.

உலகத்துப் பெரியார்களில் ஒருவராகிய என்னுடைய தந்தையார் மரிக்கும் தருவாயில் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் இவை: "பிறப்பென்றும் இறப்பென்றும் ஒன்றும் கிடையாது. ஆத்மாதான் வாழ்க்கை அரங்குகளில் ஒவ்வொன்றாகக் கடந்து மேலேறிக் கொண்டு செல்லுகிறது." இந்தியாவின் சரித்திரமே இதுதான். ஆசியாவின் சரித்திரமும் இதுதான். நீங்கள் எந்த மதத்தினராயினும், எந்த மொழியினராயினும் சரி, பிறப்பு, இறப்பு என்பவை கிடையாது என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும் என்று கூறுகிறேன். மேலேமேலே நாம் முன்னேறிச் செல்லுவோமாக. இன்னும் மேலே நட்சத்திரங்களைத் தொடும்மட்டும் முன்னேறிச்

செல்லுவோமாக. நட்சத்திரங்களைப் பார்த்து நாம் முன்னேறுவோம். அப்படி முன்னேறும் நம்மை யார் தடுப்பார்கள்? தடுப்பதற்குப்பதிலாக "நில்லுங்கள், இவ்வளவு தூரம் வந்தது போதும். நிலவு வேண்டுமென்று நாம் அழமாட்டோம். அதை ஆகாயத்தினின்றும் பிய்த்தெடுத்து ஆசிய சுதந்திரத்தின் ராஜகிரீடத்திலே சூட்டுவோம்'' என்றுதான் கூறுவார்கள்.

ஆசிய மக்களின் ஒற்றுமையை நிலைநாட்டுவோமென்று பிரதிக்ஞை செய்துகொள்ள இந்த மகாநாட்டில் உங்களை நான் அழைக்கிறேன். அதன் மூலம் இன்று பாழ்பட்டுக் கிடக்கும் உலகிலே துக்கம், துயரம், சுரண்டல், துன்பம், தரித்திரம், அறிவின்மை, நாசம், மரணம் முதலிய எல்லாவற்றையும் ஒழித்துக் கட்டி விட முடியும்.

ஆசியா எதற்குப் பிரதிநிதியாக இருக்கிறது? கொடுமைக்கும், காட்டுமிராண்டித் தனத்துக்கும் பிரதிநிதியாக இருக்கிறது என்று அர்த்தம் தொனிக்கும்படி எழுதப்பட்ட பல புத்தகங்களைப் படித்திருக்கிறோம். அப்படிப் புத்தகங்கள் தோன்றியதற்கு, நம் சரித்திரத்தை எழுதியவர்கள்தான் பொறுப்பாளிகள்.

இந்தியாவின் கலாசாரச் செல்வம் மகத்தானது. பிற ஆசிய நாடுகளுடன் பழங்காலத்தில் அது கொண்டிருந்த கலாசாரத் தொடர்புகள் மகத்தானவை. மனக் குரோதம், கோபம்—இவற்றின் மூலமாகவோ, வெறுப்பு, போராட்டம்-இவற்றின் மூலமாகவோ உலகத்தைக் காப்பாற்றிவிட முடியாது; இரக்கம், அன்பு, மன்னிப்பு-இவற்றின் மூலமாகவே உலகத்தைக் காப்பாற்ற முடியும் என்று மகாத்மா காந்தி நமக்கு உபதேசம் செய்துள்ளார். இது ஆசியாவின் பழைய தர்மமே. ஆசியாவோடு தனக்குள்ள உறவைக் கூறி உலகத்துக்கு நம்பிக்கையளிக்கும் ஒரு புது தர்மத்தைப் புரிந்துகொண்டு அதை நிலைநாட்ட வரும்படி இன்று சமிக்ஞை செய்துள்ளது இந்தியா. சமூகத்தின் தினசரி வாழ்வை உருவாக்கும் வேறுபட்ட பழக்க வழக்கங்கள், உணவுவகைகள், இன்பானுபவ முறைகள் ஆகியவை யெல்லாம் இன்று பல அம்சங்களிலும் நம் கண்ணுக்கு விசித்திரமாகப் படுகின்றன. ஆனால் வேறுபட்டிருக்கும் அவையெல்லாம் ஆசியாவின் இருதயத்தைக் கூறுபோட முடியாது. உண்மையில் ஆசியக் கலாசாரத்தின் பற்பல வேறுபாடுகளிலிருந்து தான் ஆசியமக்களின் ஒற்றுமை ஜனித்திருக்கிறது. ஒரே மாதிரியான கலாசாரம் யாருக்கு வேண்டும்? பற்பல அம்சங்களில்லாத ஒரு கலாசாரத்தை யார் கேட்கிறார்கள்? ஒரு நாட்டைப் பார்த்து ஒரு நாடு அப்படியே காப்பி அடிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை. அதைவிடக் கலாசாரத்தின் வன்மையும், பல பிரிவுகளும், பல வேறுபாடுகளும், சில சமயங்களில் பல முரண்பாடுகளும் தான் உண்மையான, சிரஞ்சீவியான, ஜீவ துடிப்பு நிறைந்த ஒற்றுமையை சிருஷ்டிக்கும்; ஒற்றுமையைப் பாதுகாக்கும். அதைத்தான் நான் விரும்புகிறேன்; பண்டித ஜவாஹர்லால் நேரு விரும்புகிறார்; மகாத்மா காந்தி விரும்புகிறார்; எங்கள் நாட்டுமக்கள் விரும்புகிறார்கள்.


டால்டாவில் செய்த குலாப் ஜாமுன்கள்
1 பவுண்டு சர்க்கரையில் நீர்க்க பாகு தயாரித்து அதில் சிலதுளிகள் பன்னீர் ஊற்றி சூடாகவைத்திருக்கவும். 1 அகப்பை மைதாமாவில் 1 தேக்கரண்டி டால்டாவை தேய்க்கவும். ½ பவுண்டு திரட்டுப்பாலை பொடி செய்து அரித்து மைதாமாவுடன் நன்ருய் கலக்கவும். சிறிதளவே ஜலம் சேர்த்து கலவையை நன்ருக பிசைந்து கெட்டியாகச் செய்துகொள்ளவும். பிசைந்தமாவை சிறிய நீண்ட உருளைகளாக பிடிக்கவும். டால்டாவை சூடாக்கி மிதமான சூட்டில் பொரிக்கவும். குலாப் ஜாமுன்கள் சுற்றிவர சிறுசிவப்பானதும் தனியாக எடுத்து, வடித்து, பிறகு சூடானபாகில் ஊறவைக்கவும்.
குடும்பத்திற்கு ஊட்டமளிக்கின்றன!
குழந்தைக்கு விசேஷமான உணவுகள் எவை?
இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானுலும்—எழுதுங்கள்!
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1
HVM. 98-50 TM
DALDA
VANASPATI


பட்டு
என்றால் மிருதுவாயுள்ளது
அது மைசூர் பட்டானால் ச்பர்சத்
திற்கு மிருதுவாயுள்ளதுடன்
உயர்ந்த நெசவு, அதிகநாள்
உழைப்பு. மேலான ரகம்
எல்லாம்சேர்ந்து மிக அழ
கானதாகும்.
மைசூர்
ஸில்க்
மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு
கவர்ன்மெண்ட் ஸில்க் வீவிங் பாக்டரி, மைசூர்..
MSK 11 TM


ஜம்மியின்
லிவர்க்யூர்
குழந்தை களின் ஈரல் குலைக்கட்டி
களினால் ஏற்படும் பயத்தைப்
போக்கடிக்கிறது.
மிகவும் முத்திப்போன சந்தர்ப்பங்கள்
தவிர எல்லா ஈரல் குலைக்கட்டிகளுக்
கும் ஜம்மியின் லிவர்க்யூர் கண்டிப்பான குணம் அளிக்
கிறது என்பதை கடந்த பல ஆண்டுகளாக குணமாகி
வரும் ஆயிரக்கணக்கான குழந்தைகளினால் நிரூபிக்கப்
படுகிறது.
ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாபூர், மதராஸ். (போன் நெ. 8139)
தெப்பகுளம் திருச்சினாப்பள்ளி, பெரிய தெரு கும்பகோணம், பெங்களூர்,
பம்பாய் 4, (போன் நெ. 41593) மற்றும்: லக்னோ, கல்கத்தா.
J-235. Tamil

திருமாலுக்கு 1000 திருநாமங்கள் உண்டு. அவருக்கு ஆயிரம் நாமத்தான் என்று பெயர், பல பெயர் சோல்லி இறைவனை அழைப்பது உரிமையையும் அன்பையும் தேரிவிப்பதாகும். அதேபோல, அல்லாவுக்கு 99 திருநாமங்கள் உண்டு. அந்தத் திருநாமங்களால் அவரைச் சிறப்பிக்கிறார்கள் முஸ்லிம்கள். ஒவ்வொரு திருநாமமும் அல்லாவின் ஒவ்வொரு சீரிய குணத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அவருடைய திருநாமத்தின் பொருளை விளக்கும் முறையில் பல கவிதைகள் புனைந்திருக்கிறார் ஸர் எட்வின் அர்னால்டு. அந்தக் கவிதைகளில் சிலவற்றிலிருந்து எடுக்கப்பட்டவையே இக் குட்டிக் கதைகள். இவை கீழ்நாடுகளில் ஏற்கெனவே வழங்கிவந்த கதைகளாகும்.

கவிஞர் ஸர் எட்வின் அர்னால்டு எழுதிய "ஆசியஜோதி" என்ற நூலைத் தமிழில் பிரசித்தம் செய்தவர் நம் கவிமணி ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை. ஸர் அர்னால்டு (1832—1904) பல அழகான நூல்களை இயற்றி யிருக்கிறார். அவருக்கு சமஸ்கிருதத்தில் பாண்டித்தியமும் உண்டு; 1856-லிருந்து 5 வருஷ காலம் புனா சமஸ்கிருதக் கல்லூரியின் பிரின்ஸ்பாலாகவும் இருந்திருக்கிறார்.

# குட்டிக் கதைகள்

○

எட்வின் அர்னால்டு

## எல்லோரும் சமம்

முகம்மது நபியிடம் ஆயிஷா பின்வருமாறு கேட்டாள்:

"தீர்க்க தரிசியவர்களே! கடவுள் தம் கருணையினால் அன்றி வேறு விதமாக யாரையும் தம்மிடம் ஏற்றுக் கொள்வதில்லையா?"

முகம்மது நபி: அப்படி யாரையும் ஏற்றுக் கொள்வதில்லை.

ஆயிஷா: தாங்கள்கூட அதற்கு விதிவிலக்கு இல்லையா? அல்லாவின் தூதர்களுடன் இந்த மண்ணுலகில் நடந்து, எங்களுக்கெல்லாம் இறைவனுடைய சித்தத்தைக் கற்பித்த தங்களுக்குக்கூட விதிவிலக்கு இல்லையா? சுவர்க்கத்தில் நுழையும்போது, தங்களை யாதொரு விசாரணையும் செய்யாமல் உள்ளே விட்டு விடமாட்டார்களா?

மு. ந: என்மீது கடவுளுக்குக் கருணை இருந்தால் அன்றி, நானும் சுவர்க்கத்தில் நுழைய முடியாது

இதே வாசகத்தை முகம்மது நபி மூன்று முறை சொன்னார்.

## ரோஜாவும் பனித்துளியும்

ஒரு ரோஜாப்பூவும் ஒரு பனித்துளியும் பேசிக்கொண்டிருந்தன.

பனித்துளி: ஏ ரோஜாவே! நீ எங்கே பிறந்தாய்? இவ்வளவு அழகாகவும், இவ்வளவு வாசமாகவும், இவ்வளவு செருக்கோடும் இருக்கிறாயே? நீ எதிலிருந்து தோன்றினாயோ?

ரோஜா: நான்மண்ணில் பிறந்தேன்; நாளை விடிவதற்குள் பழையபடியும் நான் மண்ணோடு மண்ணாகக் கலந்து விடுவேன். அது சரி, என்மீது வைரத்தைப்போல அமர்ந்திருக்கிறாயே, நீ எங்கிருந்து இவ்வளவு பிரகாசத்தைப் பெற்றாய் பனித்துளியே?

பனித்துளி: என்னை சமுத்திரத்திலிருந்து ஒரு மேகம் தூக்கிக் கொண்டு வந்தது; மறுபடியும் நான் சமுத்திரத்தில் போய் கலந்துவிட வேண்டும்.

இந்த இரண்டும் பேசிக் கொண்டிருந்ததை ஒரு மைனா கேட்டுக்கொண்டிருந்தது. உடனே அது இரண்டையும் பார்த்து சொன்னது:

"ஏ அல்லாவின் ரோஜாவே! நீ செத்துப் போனாலும் காற்றில் மணம் அற்றுவிடாது. அல்லாவின் பனித்துளியே! நீ இப்போது கடலில் கலக்காமல் இருந்தாலும், கடல் அழகாகத்தான் இருக்கிறது. ஆகவே இரண்டு பேரும் மனச் சமதானத்துடன் இருங்கள்."

## பச்சோந்தி

ஒரு நகருக்கு வெளியே சிறிது தூரத்தில் நான்கு பிரயாணிகள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஒருவன் அரேபியன்; ஒருவன் பாரசீகத்துக்காரன்; ஒருவன் துருக்கியன்; மற்றொருவன் கிரேக்கன். நான்கு பேருக்கும் கடும் பசி. இந்த நால்வரும் தம்மிடம் உள்ள பணத்தை மொத்தமாகப் போட்டு, தம்முள் ஒருவனை அனுப்பி சாப்பாட்டுக்கு ஏதாவது வாங்கி வரச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தார்கள். எதை வாங்குவது என்பதைப் பற்றி சர்ச்சை செய்யத் தொடங்கினார்கள்.

துருக்கியன்: உஜும் பழங்களை வாங்கிவா. அது மலிவாகவும் கிடைக்கும்; அதைவிட ருசியாக, வேறு எதுவும் கிடையாது.

அரேபியன்: வேண்டாம் வேண்டாம், அனேப் கனிகளைத்தான் வாங்கி வரவேண்டும். எவ்வளவு அதிகமாக வாங்கமுடியுமோ, அவ்வளவு அதிகமாக அனேப்பழங்களையே வாங்கி வா.

பாரசீகன்: அதெல்லாம் சுத்த மோசம். அங்கூர்ப் பழங்கள்தான் சிறந்தது. அதைத்தான் வாங்க வேண்டும். அந்தப் பழங்கள்தான் இங்கு விசேஷமாய்க் கிடைக்கும்.

கிரேக்கன்: அது என்ன எழவு அங்கூரோ! அந்த சனியன் ஒன்றும் வேண்டாம். ஸ்டாபிலியன் பழங்கள் வாங்கிச் சாப்பிட்டால்தான் நன்றாக இருக்கும். அதைச் சாப்பிட்டால் நமக்கு வேறு எதுவும் வேண்டியிராது.

நான்கு பேருடைய விவாதமும் முற்றியது; அடிதடியில் இறங்கும் நேரம். அப்போது அந்த வழியாக திராக்ஷைப் பழங்களைச்சுமந்துகொண்டு ஒரு தோட்டக்காரனுடைய கழுதை வந்தது. இதைப் பார்த்ததும் ஒவ்வொருவனும் துள்ளி எழுந்தான். துருக்கிக்காரன் ஆவலோடு அந்தத் திராக்ஷைப் பழங்களைக் கையால் சுட்டிக் காட்டி, "அதோ உஜும் பழங்களைப் பாருங்கள்" என்றான்.

பாரசீகன், "எல்லோரும் அங்கூர்ப் பழங்களைப் பாருங்கள்" என்றான்.

அரேபியன், "இல்லை இல்லை. அவை அனேப் பழங்களைத் தவிர வேறொன்றும் அல்ல." என்று கத்தினான்.

"இதுதான் நான் கேட்ட ஸ்டாபிலியான் பழங்கள்" என்றான் கிரேக்கன்.

கடைசியில் நால்வரும் யாதொரும் சச்சரவும் இன்றி திராக்ஷைப்பழங்களை விலக்கு வாங்கினார்கள்.

## சிலந்தியும் புறாவும்

முகம்மது நபி மெக்காவிலிருந்து மெடினாவுக்கு ஓடினார். அவரைப் பின் தொடர்ந்து, குதிரைகளில்

ஏறிக்கொண்டு குரைஷிகள் ஓடினர்கள். இந்தக் கொலைபாதகர்களிடமிருந்து தப்புவதற்காக பக்கத்தில் இருந்த ஒரு குகைக்குள் முகம்மது நபியும் அவருடைய தோழர்களும் நுழைந்துவிட்டார்கள். அவர்களில் ஒருவராகிய அபூ பக்கர் என்பவர் சொன்னார் :

" அவர்கள் பார்த்துவிட்டால் நாம் சாகவேண்டியதுதான் "

இபின் பாஹீர், " இங்கிருந்து ஓடி விடுவோம் " என்றார்.

" மணலில் பதிந்துள்ள நம் அடிச் சுவடுகள் நம்மைக் காட்டிக் கொடுத்து விடும் " என்றார் வழிகாட்டியாக இருந்த அப்துல்லா.

நபிகள் நாயகம் சொன்னார் :

" நாம் நால்வர் அல்ல ; ஐவராக இருக்கிறோம். நம்மைக் காக்கும் ரக்ஷகரும் இங்கே இருக்கிறார். அதனால், நாம் குகைக்குள்ளே போய் ஒளிந்து கொள்வோம், வாருங்கள்."

நால்வரும் குகைக்குள்ளே போய் ஒளிந்து கொண்டார்கள். குரைஷிகளின் குதிரைகள் நெருங்கி வந்தன. வந்தவர்களில் ஒருவன், " இதோ, இந்த இடத்தில் அடிச்சுவடுகள் இடது பக்கமாகத் திரும்பி மலையை நோக்கிச் செல்லுகின்றன. வாருங்கள், அங்கே போய்ப் பார்ப்போம் " என்றான்.

அவர்கள் குகையின் முன்னால் வந்து நின்றார்கள். ஆனால்...

குகையின் வாசலில், புறா ஒன்று முட்டைகளின் மேல் உட்கார்ந்து அடைகாத்துக் கொண்டிருந்தது. உள்ளே அதனுடைய ஜோடி, மிருதுவான குரலில் கூவிக்கொண்டும் இருந்தது. அதற்கும் உள்ளே தள்ளி குகையை அடைத்துக்கொண்டு ஒரு சிலந்திப் பூச்சி நன்றாக வலைபின்னி, அதில் தொங்கிக் கொண்டிருந்தது. வலையின் ஒரு நூல்கூட அறுபடாமல், பூரணமாக இருந்தது. இதைப் பார்த்தார்கள் குரைஷிகள்.

" ஐயோ ! நாம் ஓடிவந்தது பலன் இல்லாமல் போய்விட்டதே ! இந்தப் பக்கத்தில் மனிதன் அடி எடுத்து வைத்திருந்தால், புறா அமைதியாக உட்கார்ந்து அடைகாக்குமா ? சிலந்திக் கூட்டின் ஒரு நூல்கூட அறுபடாமல் இருக்குமா ? அது மேலும் வலை பின்னிக் கொண்டுதான் இருக்குமா ?" என்று சொல்லி குரைஷிகள் பிரலாபித்தார்கள்.

சிலந்திப் பூச்சிக்கும், புறாவுக்கும் இப்படிப்பட்ட பலம் கிடைத்து விட்டது ! அல்லா பலத்தைக் கொடுப்பார் என்றால் எதற்குத் தான் பலம் கிடைக்காது ?

## அரசனும் எறும்பும்

காபிரியேல் ஒரு நாள் அசரீரியாக ஒலித்த தேவ வாக்கைக் கேட்டார். அந்தத் தேவ வாக்கில் இரண்டு கட்டளைகள் பிறந்தன :

முதல் கட்டளை :

" நீ ஸாலமன் அரசனுடைய கேளிக்கிருஹத்துக்குச் செல்வாயாக ! அங்கே தன் பிரதானிகள் புடைசூழ ஸாலமன் அமர்ந்திருக்கிறான். அவன் மிகவும் நல்லவன் ; பெருந்தன்மை உடையவன். நான்தான் அவனுக்கு ராஜகிரீடத்தை அளித்தேன். என்னுடைய அந்த பக்தன் இப்போது தகாத காரியம் ஒன்றைச் செய்கிறான். அதனால் அவனிடம் நீ போகவேண்டும்.

" அவனுடைய அரண்மனைக்கு இப்போது ஆயிரம் 'குதிரைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எதிரிகளை முறியடித்து, அபகரித்துக் கொண்டுவந்த குதிரைகள் அவை. மிகமிக அழகான குதிரைகள். அந்தக் குதிரைகளைக் கம்பீரமாக தன் அரண்மனை வாசலில் வரிசையாக நடக்க விட்டுப் பார்க்கும் மகிழ்ச்சியில் ஸாலமன் தன்னை மறந்து இருக்கிறான். அந்தி நேரப் பிரார்த்தனையையும்

பூஜை புனஸ்காரங்களையும் செய்ய வேண்டுமே என்பதை அடியோடு மறந்துவிட்டான். இதோ சிறிது நேரத்தில் சூரியனும் அஸ்தமித்து விடுவான். அவனுடைய அந்திநேரப் பிரார்த்தனை அப்படியே செய்யாமல் நின்றுவிடும். பிறகு ஜனங்கள் எல்லோரும், 'நம் அரசர், கடவுளைவிட, போரில் அபகரித்த தம் குதிரைகளைத் தான் பெரிதும் விரும்புகிறார்' என்று சொல்லத் தொடங்குவார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பாவகரமான காரியத்தைச் செய்ய வொட்டாமல், என் பக்தனைப் போய் நீ காப்பாற்ற வேண்டும்."

இரண்டாவது கட்டளை :

"மேலும், ஆரபாத் மலைச்சரிவில், சாய்ந்து கிடக்கும் ஒரு மரத்தின் கீழே ஒரு எறும்பு மிகவும் சிரமப் பட்டுக் கொண்டிருக்கிறது. அது உணவு தேடிச் சேகரித்துக் கொண்டு, தன் புற்றை நோக்கி நடந்து வந்தது. அந்த மரத்தின் பக்கம் வந்ததும் அதற்குக் கால்வலி எடுத்து விட்டது; மேற்கொண்டும் நடக்க முடியாமல் தள்ளாடுகிறது. இப்பொழுது மழையும் பெய்வதால், அது செத்துப் போனாலும் போய்விடும். அதனால் நீ போய், அந்த எறும்பை எடுத்து மலையில் உள்ள அதன் இனபந்துக்களிடத்தில் கொண்டு சேர்த்து விட வேண்டும்."

காபிரியேல் சென்று அரசன் பாவ காரியத்தில் ஆழ்ந்துவிடாமல் தடுத்தார்; எறும்பைப் புற்றில் கொண்டு போய்ச் சேர்த்தார்.

## பெரியவரின் தவறு

கடவுளின் நண்பரான ஆப்ரஹாம் ஒரு முறை கடவுளின் கோபத்துக்கு ஆளாக நேர்ந்தது.

ஆப்ரஹாமும் அவருடைய சகாக்களும் தங்கியிருந்த முகாமுக்கு ஒரு நாள் ஒரு கிழவன் வந்தான். இரண்டு நாட்களாகத் தாகத்துக்குத் தண்ணீர் கிடைக்காமல், பாலைவனத்தில் அலைந்து திரிந்து அங்கு வந்து சேர்ந்தான். அவனுடைய மூக்கிலும் முகத்திலும் புழுதி மூடிக் கொண்டிருந்தது. நாவறண்டு போய் பேசுவதற்கும் சக்தியில்லாது இருந்தான். அவனுடைய மெலிந்துபோன ஒட்டகமும் முகாமுக்கு வந்ததும் முகத்தைத் தரையில் சாய்த்துகொண்டு படுத்து விட்டது. "தண்ணீர் கொடுங்கள்" என்று கேட்க நினைத்தான் கிழவன். ஆனால் அந்த வார்த்தைகளை வாய் திறந்து சொல்லக்கூட அவனுக்குச் சக்தி இல்லை. கிழவனுடைய நிலையைக் கண்டதும் முகாமில் இருந்தவர்கள் தாமாகவே தண்ணீர் கொண்டு போய்க் கொடுத்தார்கள். அந்தத் தண்ணீரை வாங்கினான் கிழவன்; ஆனால், உடனே அதைக் குடித்துவிடவில்லை. முதலில் ஒட்டகத்தின் முகத்தைத் தேய்த்துக் கழுவினான். பிறகு அதன் வாயில் தண்ணீரை ஊட்டினான். அதன்பின், மேற்கு முகமாகத் திரும்பி அஸ்தமன சூரியனுக்கு நிவேதனமாகத் தண்ணீரைக் கீழே இறைத்தான். அப்பால்தான அவன் தண்ணீரைக் குடிக்கப் போனான். இதை ஆப்ரஹாம் பார்த்தார். உடனே, "இந்தக் கிழவனைத் தண்ணீர் குடிக்க விடாதீர்கள். கடவுளின் அருமையான வரப்பிரசாதமாகிய தண்ணீரை சூரியனுக்காக இறைத்துவிட்டான். சூரியன் என்ன கடவுளா? கடவுளின் சிருஷ்டி தானே?" என்றார்.

கிழவன் தண்ணீர்க் கூசாவைக் கையில் பிடித்துக் கொண்டு நின்றான். அப்போது வானத்திலிருந்து இறங்கி வந்தவன்போல் தோற்றம் அளித்த ஒரு அழகான மனிதன் அங்கு வந்தான். ஒரு சுரைக்குடுக்கையில் தண்ணீரை ஊற்றிக் கிழவனுக்குக் கொடுத்தான். இதைப் பார்த்த ஆப்ரஹாமுக்கு மிகவும் கோபம் வந்து

விட்டது. "என்னுடைய முகாமில் என் உத்தரவை மீறுகிறவன் யார்?" என்று சினந்தார். "அவனுக்குத் தண்ணீர் கொடுக்காதே" என்று கூறித் தடுத்தார்.

அப்போது அந்த அழகிய மனிதனின் கண்களிலிருந்து ஆப்ரஹாமை நோக்கி ஒரு தெய்வச் சுடர் வீசியது. அந்த மனிதன்தான் மைக்கேல்; அல்லாவின் தூதன். அவன் ஆப்ரஹாமை நோக்கிப் பின் வருமாறு சொன்னான்:

"ஏ கடவுளின் தோழனே! எல்லோருக்கும் பொதுவான தண்ணீரை இந்தக் கிழவனுக்குக் கொடுக்கக் கூடாது என்று தடுக்கிறாய்! இவன் விக்கிரக ஆராதனை செய்யும் காபிரி தான். ஆனால், தனக்கு மட்டுக்கு மீறிய தாகம் இருந்தும்கூட தன் ஒட்டகத்தைக் கழுவி, தண்ணீர் கொடுத்து விட்டு, அத்துடன் நில்லாமல், முழந்தாளிட்டு சூரியனுக்குத் தண்ணீரை நைவேத்தியமாகப் படைத்தான். பிறகுதான் தண்ணீரைக் குடித்துத் தாகம் தணிக்க முயன்றான். இவனை அறுபது வருஷ காலமாக அல்லா காப்பாற்றி வந்திருக்கிறார்; இவனுக்கு புத்திர களஸ்திரங்களையும், கன்று காலிகளையும், சொத்து சுகங்களையும் அல்லா அருளியிருக்கிறார். அல்லா இவன் மீது இரக்கம் காட்டும் போது, நீ இரக்கம் காட்ட மறுக்கிறாய்! நீ பெரிய பாவத்தைச் செய்து விட்டாய்; அதற்காகக் கடவுளிடம் நீ மன்னிப்புக் கேட்க வேண்டும்."

இதைச் சொல்லிவிட்டு தேவதூதனாகிய மைக்கேல் மறைந்துவிட்டான். ஆப்ரஹாம் அந்தக் காபிரிக் கிழவனுடைய கையைப் பிடித்து, முத்தமிட்டு, தம் முகாமுக்குள் அழைத்துச் சென்றார்; அவனை தகுந்த ஆசனத்தில் உட்கார வைத்து, "கடவுள் உன்னை மன்னிப்பதுபோல் என்னை மன்னிப்பாராக!" என்றார் ஆப்ரஹாம்.

## எங்கே நீ சென்றாலும்...

**ஸா**லமன் அரசனுடன் இந்திய அரசன் ஒருவன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். அப்போது அவர்களின் பக்கமாக ஒரு தூதன் நடந்து சென்றான். அவன், பேசிக்கொண்டிருக்கும் அந்த இருவரையும் பார்த்து ஆச்சரியத்துடன் விழித்தான். அவர்கள் அங்கே பேசிக்கொண்டிருந்தது அவனுக்கு அதிசயத்தையும் திகைப்பையும் கொடுத்தது. தூதன் நடந்து சிறிது தூரம் போய் விட்டான். உடனே, இந்திய அரசன் ஸாலமனைப் பார்த்து, "அதோ நிற்கிறானே, அந்தத் தூதன் யார்? அவன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"அவன்தான் அஸ்ரேல் என்பவன். மனித உயிர்களைக் கொண்டு செல்ல வருபவன் அவன்தான்" என்றான் ஸாலமன்.

"அவன் என்னையே பார்த்துக்கொண்டிருப்பது, பெரிய சந்தேகத்தை அளிக்கிறது. ஆகவே தங்களுடைய பூதம் ஒன்றை அனுப்பி, என்னை இந்தியாவில் கொண்டுபோய் விட்டுவிடும்படி ஆக்ஞாபிக்க வேண்டும்" என்று இந்திய அரசன் கேட்டுக்கொண்டான்.

அப்படியே ஆணை பிறப்பிக்கப் பட்டது. மரத்திலிருந்து உதிரும் அத்திப்பழம் தரையைத் தொடும் நேரத்துக்குள்ளாக, பூதம் இந்திய அரசனை சோழ மண்டலத்தில் கொண்டுவந்து விட்டுவிட்டது.

அஸ்ரேல் ஸாலமன் அரசனிடம் சென்று பின்வருமாறு கூறினான்:

"அந்த மனிதன் தங்களுடன் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்து, ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துவிட்டேன். 'அவனுடைய உயிரை இந்தியாவிலிருந்து அழைத்துக் கொண்டு வா' என்று எனக்குக் கடவுள் கட்டளை பிறப்பித்திருந்தார். அவனோ இங்கே

உட்கார்ந்து கொண்டிருந்தான். ஆனால் இப்போது பார்த்தீர்களா, அவனுக்கு எந்த இடம் விதிக்கப் பட்டிருக்கிறதோ அங்கேயே போய் விட்டான்!"

அஸ்ரேல் அவ்விடத்தை விட்டுக் கிளம்பி இந்தியாவுக்கு வந்தான். அரசன் இந்தியாவுக்குவந்ததும், ஏதோ ஆபத்தின் காரணமாக செத்துப் போய் விட்டான்.

## அரசனும் அடிமையும்

ஹாஸன் என்னும் தலைவன் பல பிரபுக்களை அழைத்து விருந்து வைத்துக் கொண்டிருந்தான். வந்திருக்கும் பிரபுக்களின் படாடோபமும் விருந்துப் பக்ஷணங்களின் படாடோபமும் சொல்லி முடியாது. ஏக தடபுடலாக நடந்தது விருந்து. அப்போது அழகான, விலை உயர்ந்த, ஒரு கோப்பையில் பக்ஷணங்களை எடுத்துக் கொண்டு ஒரு அடிமைச் சிறுவன் வந்தான். வரும்போது, கூடாரத்தின் கயிறு தடுக்கிக் கீழே விழுந்து விட்டான். அந்த விலை உயர்ந்த கோப்பை கீழே விழுந்து சில்லு சில்லாக உடைந்துபோய் விட்டது.

வந்திருந்த விருந்தாளிகளில் ஒருவர், "அயோக்கியப் பயல்! அவனைக் கொன்று ஒழித்துவிட வேண்டும்" என்று கர்ஜித்தார்.

மற்றொருவர், "ஹாஸன் அவர்களே! எனக்கு உத்தரவு கொடுங்கள். இந்தப் பயலை என் கையால் வெட்டித் துணிக்க வேண்டும்" என்று சீறினர்.

இதைப் பார்த்ததும் ஹாஸனுடைய மனம்கூட இளகிவிட்டது. கீழே விழுந்த சிறுவன் தன் தலைவனைப் பார்த்து,

"மகாராஜா, 'கோபத்தை அடக்குகிறவர்களுக்குத்தான் சுவர்க்கம்' என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது" என்றான்.

"எனக்குத் தெரியும். நான் கோபத்துடன் இல்லை" என்றான் ஹாஸன்.

"மகாராஜா! 'அறியாமல் நெறி புரண்டவர்களை மன்னிக்கவேண்டும்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது."

"எனக்குத் தெரியும். நான் அதை மறந்துவிடவில்லை. நான் மன்னிக்கிறேன்."

"கருணை மிக்க மகாராஜா! தங்களைக் கடவுள் ஆசீர்வதிப்பார். ஏனென்றால் 'கருணையாளர்களைத்தான் கடவுள் நேசிக்கிறார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது."

"ஆம். அது என் ஞாபகத்தில் இருக்கிறது. அடிமையே உனக்கு மிகவும் நன்றி" என்று சொல்லி விட்டு ஹாஸன் மேலும் கூறியதாவது:

"தங்கத்தையும், முத்துக்களையும் விட ஒரு வேத வாக்கியம் எவ்வளவோ விசேஷமானது. பிரபுக்களே! அவன் கோப்பையை உடைத்துவிட்டான். ஆனால் தன் தப்பிதத்தை அறிவு ஞானத்தினால் சீர்படுத்திக்கொண்டு விட்டான். ஏ அடிமைச் சிறுவனே! உனக்கு நான் இன்று சுதந்திரம் கொடுத்து விட்டேன். இதோ இந்தப் பணத்தை எடுத்துக்கொள். விடுதலை பெற்ற ஒரு முஸ்லிம் அணியக்கூடிய ஆடையாபரணங்களை நீயும் வாங்கி அணிந்து கொள்."

## சொல்லுவது எப்படி?

ஒருவன் கோவிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும்போது, சுவர்க்கத்தையும் அல்லாவையும் பார்த்ததுபோல் கனவு கண்டான். அவன் விழித்து எழுந்ததும், அங்கு இருந்தவர்களிடம் அந்த விவரத்தைச் சொன்னான்.

"அப்படியா? அப்படியானால் தாங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எங்களுக்குச் சொல்லுங்களேன்" என்று அங்கிருந்தவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அவன் சொல்லத் தொடங்கினான்:

"எங்கு பார்த்தாலும் ஒரே ஜோதி மயமாக இருந்தது. அங்கே உலாவிக் கொண்டிருந்தேன். என்னென்னவோ பார்த்தேன்; என்னென்னவோ கேட்டேன். அதன் பலனாக, இப்போது, உலகின் இயல்பையும், சகல லோகங்களின் இதயத்திலும் மூண்டு கொண்டிருக்கும் கடவுளின் அன்பு எப்படிப் பட்டது என்பதையும், எப்படித் துன்பங்கள் யாவும் ஒழிந்து இன்பமே நிலவப்போகிறது என்பதையும் அறிந்து கொண்டேன். இதற்குமேல் என்னால் எதையும் சொல்ல இயலவில்லை. என் அனுபவத்தை ஒரு உவமானம் மூலமாகச் சொல்லி நிறுத்திக் கொள்ளுகிறேன்:

ஒரு ரோஜாத் தோட்டம். அங்கே கொள்ளை கொள்ளையாக மலர்கள் பூத்துக் குலுங்கின. அவற்றின் நறுமணமோ ஒரே போதைதான். இப்படி அப்படி என்று சொல்லுவதற்கில்லை. அந்தத் தெய்வ மணம் கமழும் பூக்களைப் பறித்து மூட்டை கட்டிக்கொண்டு வரவேண்டும் என்று தீர்மானித்து, மலர்களைப் பறித்தேன். ஐயோ! அவற்றின் அழகும் அவற்றின் வாசமும்!......அந்தப் பூக்களை என் உடையில் கட்டினேன். மலர்களின் சுகந்தத்தை என்னால் தாங்க முடியவில்லை. அந்த சுகானுபவத்தில் என் பஞ்சபுலன்களும் உருகிவிட்டன. தன்னை மறந்த நிலையில் என் உடையின் ஒரு நுனியை எப்படியோ நழுவவிட்டு விட்டேன். பூக்களெல்லாம் கீழே கொட்டிவிட்டன. கடைசியில் உங்களுக்கு நான் எதையும் கொண்டுவர முடியாமல் போய்விட்டது."

## விபசாரிக்கு மன்னிப்பு

ஸலா உத்தீன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் தன் பல்லக்கில் ஏறித் தெருவழியாகப் போய்க் கொண்டிருக்கும்போது, ஒரு பெண்ணைப் பலரும்கூடி இம்சித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவள் விபசாரம் பண்ணினளாம். அந்தக் குற்றத்திற்குத் தகுந்த தண்டனை, அவள் மீது கல்லைக் கொண்டு எறிவதுதான் என்று எல்லோரும் அவள்மீது கற்களை வீசி எறிந்தார்கள்; நையப் புடைத்தார்கள். கடைசியில் அவளைக் கொன்று விடுவதுதான் அவர்கள் நோக்கம். இந்த பயங்கரமான தண்டனையில் அகப்பட்ட பெண் தெரு வழியாக நடந்துகொண்டே இருந்தாள். கூட்டமும் அவளைப் பின் தொடர்ந்தது. வழியில் ஓரிடத்தில் ஒரு நாய் வெயிலின் கொடுமை தாங்காமல் இளைத்துக்கொண்டு படுத்திருந்தது. அந்தக் கோடை வெப்பத்தில் நா உலர்ந்துபோய், ஒட்டகங்களும் அழுதன; காக்கைகளும் அலறின.

நாய் தண்ணீர் குடிப்பதற்காக ஒரு கிணற்றின் பக்கம் வந்தது. கிணற்றில் தண்ணீர் கீழே தள்ளி ஆழத்தில் இருந்ததால் அதன் வாய்க்கு எட்டவில்லை. கடைசியில் ஏமாற்றத்தினால் நாய் அங்கேயே படுத்து, தாகம் தாங்க முடியாமல் ஊளையிட்டுக்கொண்டிருந்தது.

இதைப் பார்த்தாள் அந்தப் பெண். தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் பொருட்படுத்தாது அந்தக் கிணற்றின் பக்கம் சென்றாள். தன் ரவிக்கையிலிருந்த பட்டுக்கரையைக் கிழித்தெடுத்தாள். தன் காலில் கிடந்த கிண்ணம் போன்ற ஜோட்டையும் கழற்றினாள். அந்த ஜோட்டில் அந்தப் பட்டுத் துணியைக் கட்டி கிணற்றுக்குள் விட்டு, அந்த ஜோடு நிறைய நீர் மொண்டாள். அந்தத் தண்ணீரை நாய்க்குக் கொண்டு வந்து ஊட்டி அதன் தாகத்தைத் தணித்தாள். பிறகு அந்த நாய் எழுந்து அவளைப் பின்தொடர்ந்து நன்றி விசுவாசத்துடன் நடந்து வந்தது.

இதையும் பார்த்தான் ஸலா உத்தீன். உடனே அவளை இம்சை செய்து கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து, "அவளுக்குப் போட்டிருக்கும் விலங்கைக் கழற்றுங்கள். அவளுடைய பர்தா

முக்காட்டைப் பழையபடியும் போட்டு அவள் முகத்தை மூடுங்கள். அவளை அவள் வீட்டில் கொண்டுபோய் அமைதியாக விட்டு விடுங்கள்" என்று உத்தரவிட்டான்.

அரசன் அந்தப் பெண்ணைப் பார்த்துப் பின் வருமாறு கூறினான் :

"உன்னைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பதுதான் சட்டம். ஆனால் உன்னைத் தொடர்ந்து நடந்து வரும் இந்த நாய் உன் அரிய இயல்பைப் பறைசாற்றுகிறது. மரணத்தின் வாசலில் நின்று கொண்டிருக்கும்போதும்கூட உன் மிருதுவான இதயம் மரத்துப்போய் விடவில்லை. சகோதரியே! அல்லா கருணையாளர்; அப்படியிருக்க நான் உன்னிடம் கருணைகாட்டாமல் இருக்க முடியுமா? ஆகவே, கஷ்டங்களிலிருந்து விடுதலை பெற்று, சுதந்திர ஆத்மாவாக நீ இங்கிருந்து செல்லுவாயாக!"

## கடன் தீர்ந்தது

முகம்மது நபி காலமாவதற்கு பின்னும் மூன்று நாட்கள் இருக்கின்றன. ஆனால் அப்போதே அவர் முகத்தில் மரணத்தின் சாயல் படிந்து விட்டது. அவரை மசூதிக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். அங்கே உமரின் கழுத்தை ஆதரவாகப் பிடித்துக்கொண்டு எழுந்தார் நபிகள் நாயகம். அங்கு நின்றவர்களைப் பார்த்து பின் வருமாறு கூறினார்:

"மெக்கா வாசிகளே! நான் இதே மெக்காவில் உங்களுடன் வாழ்ந்து கடவுளைப் பற்றிப் பிரசாரம் செய்து கொண்டிருந்தேன். ஆனால் விரைவில் நான் செத்துப் போய்விடப் போகிறேன். இங்கிருப்பவர்களில் யாருக்காவது நான் தீங்கிழைத்திருக்கிறேன் என்றால் அதை இப்போதே சொல்லி விடுங்கள். நானும் மனிதன்தான்; பாவம் செய்திருக்கவும் கூடும். நான் நியாயத் தீர்ப்பு கூறும்போது அதர்மமாகவோ, கோபாவேசத்துடனோ நடந்துகொண்டிருக்கலாம். உண்மையில் யார் விஷயத்திலாவது இப்படி நான் நடந்திருந்தால், அவர்கள் முன் வந்து உண்மையைச் சொல்லுவார்களாக! நான் என் முதுகைக் குனிந்து கொடுக்கிறேன். அவர்கள் என் முதுகில் அடிக்கட்டும். பகிரங்கமாக நான் இழைத்த அநீதியை இங்கே சொல்லி எனக்கு அவமானத்தை விளைவிக்கட்டும். அதுமட்டும் அல்லாமல், பண விஷயத்தில் நான் யாரிடத்திலாவது நாணயப் பிசகாக நடந்திருந்தால் அதையும் சொல்லிவிடுங்கள்."

அப்போது, ஒரே ஒரு மனிதன் மட்டும் முன்வந்து, "அப்துல்லாவின் திருக்குமாரரே! தாங்கள் எனக்கு மூன்று வெள்ளிக் காசுகள் கொடுக்கவேண்டியிருக்கிறது. ரமதான் பண்டிகை முடிந்ததும், தங்களுக்காக நான் விறகு சுமந்து கொண்டு வந்தேன். அந்த வகையில் கூலியாக எனக்கு மூன்று வெள்ளிக் காசுகள் பாக்கி இருக்கின்றன" என்றான்.

நபிகள் நாயகம் மெல்லிய குரலில், "அருமை நண்பரே! கடவுளின் நியாய சபையில் வந்து கேட்காமல் தங்கள் பாக்கியை தாங்கள் இங்கேயே கேட்டதற்காகத் தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கடவுளிடம் செல்லும் போது கடனோடு சென்றால் அது மகா அபசாரம்" என்று கூறிவிட்டு, அவனுக்குப் பணத்தைக் கொடுத்துக் கடனைத் தீர்த்தார். அவன் கையை முத்தமிட்டார். பிறகு வீட்டுக்குச் சென்றார்.

ஆயிஷாவின் மடியில் தலை சாய்த்துக் கொண்டு, ஆனந்தம் தவழும் வதனம் வானத்தை நோக்க, புனிதமான உதடுகள், "அல்லாவே! என் பாவங்களை மன்னியுங்கள்" என்று முணுமுணுக்க, ஆவியை நீத்தார் நபிகள் நாயகம்.


"இதுவே புதிய லக்ஸ் டாய்லட் சோப்!"
LUX TOILET SOAP
"மனோரஞ்சிதமான புதிய பரிமளம்!"
"புதிய ரோஜாநிற காகிதத்தில் சுற்றப்பட்டது!"
LTS. 194-50 TM.
☆ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ☆

# தமிழிலே அரிய நூல்கள்

○

கலையும் கலைவளர்ச்சியும்
வ. ரா. 2 0

வாழ்க்கைச் சித்திரம்
வ. ரா. 2 8

தமிழ் உணர்ச்சி
சுவாமி சுத்தாநந்த
பாரதியார் (சாதா) 3 0
(காலிகோ) 3 8

எழுத்தும் எழுத்தாளரும்
தி. ஜ. ர. 1 0

புகழ்ச் செல்வர்
தி. ஜ. ர. 3 0

சைனு எங்கே போகிறது?
ஆர். ராமனுதன் 1 12

மனிதன்
ஆர். ராமனுதன் 3 0

விஞ்ஞானமும் சமூகமும்
ப. கோதண்டராமன் 3 8

ரஸிகமணியின் கடிதங்கள்
பாஸ்கர் (சாதா) 5 0
(காலிகோ) 6 0

புரட்சித்தலைவர் ஜெயப்
பிரகாஷ் நாராயணன்
K. ராஜகோபாலன் 3 0

வாழப் பிறந்தோம்
சுப. நாராயணன் 3 0

கவிதையும் வாழ்க்கையும்
ஆ. முத்துசிவம் 3 0

1944 முதல் இன்றுவரை
ந. ராமரத்தினம் 1 4

○

## கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம்
**P. O. திருச்சி ஜில்லா**



## ஆஸ்த்மாவை குணப்படுத்துவது



## ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ
ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்
று விளம்பரம் செய்யும் மருந்துகளை
உட்கொண்டால் நோய் அதிகரிக்கு
மேயொழிய குறையாது. "புரோஹித்
ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொ
ண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக்
கரைத்து அஜீர்ணத்தை குணப்படுத்தி
நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்
மாவினின்றும் பூரண சௌக்கியத்தை
நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8,
ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா
இடங்களிலும் கிடைக்கும். அல்லது
"டாக்டர் புரோஹித் பார்மஸி"
கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்
றுக்கொள்ளலாம்.



**ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது**

**புரோஹித ஸ்வாஸஹாரி**

**DR. PUROHIT PHARMACY, KOLHAPUR**

'அவள் இளமை இந்தியாவை நேசித்தாள்' என்று தமது சமாதியின்மேல் பொறிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் சரோஜினி தேவி. முதுமை எய்தியும் இளமை மாறாத அந்த உள்ளத்தின் ஓட்ட சாட்ட வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார் கட்டுரையாளர்.

# சரோஜினி தேவி

லட்சுமி அம்மாள்

சில ஆண்டுகளுக்கு முன்புகூட ஸ்ரீமதி சரோஜினி தேவிக்கு 'வயது மிகவும் முதிர்ந்துவிட்டதே' என்ற உணர்ச்சியாவது 'இன்னும் சில ஆண்டுகளில் இறந்து போவோம்' என்ற எண்ணமாவது இல்லை—இல்லவே இல்லையென்று சொல்லிவிடலாம். 'தமது 63-வது வயதில்—அதாவது சுமார் ஏழு ஆண்டுகளுக்குமுன்—ஸ்ரீமதி சரோஜினி நாயுடு இளமையுணர்ச்சியுள்ளவராக—தமது புதல்வியர் போல் அவ்வளவு இளமையுணர்ச்சி உள்ளவராக—இருக்கிறார்!' என்று ஸ்ரீ யூசுப் மேஹர் ஆலி தாம் அன்று நேரில் கண்டது கண்டபடியே எழுதியுள்ளார். ஆனால் ஏழு ஆண்டுகளில் அந்த இளமை யுணர்வு முதுமையுற்று மறுமையும் அடைந்து விட்டது!

"அவள் இளமை இந்தியாவை நேசித்தாள்" என்ற வாக்கியத்தைத் தமது மரணத்திற்குப் பின் 'சரமவாக்கிய'மாகப் பொறித்து வைத்தால் போதும் என்று சொன்னாராம் சரோஜினி தேவி. வயது முதிர்ந்த நிலையிலும் இளமை இந்தியாவை உள்ளபடியே அறிந்து நேசித்த இந்த அம்மையார் இந்தியாவின் இளைஞர்களால் தாமும் நேசிக்கப் பெற்றார். ஆண்களோடு பெண்களும் சரிசமானமாக இவரை நேசித்தார்கள். 'நமது தேசியக் கவிக்குயில்' என்று இத்தகைய நேசத்தை அள்ளி வழங்கியும் அள்ளிக்கொண்டும் வாழ்ந்த இந்த அம்மையாரின் அன்பு நிறைந்த கவியுள்ளமே இவரது இளமை யுணர்ச்சிக்கும் ஒரு பெருங் காரணமாக இருந்தது; இவரது மந்திர சக்தி போன்ற ஜீவகாந்த சக்திக்கும் ஒரு முக்கிய காரணமாகும்.

சரோஜினி தேவிக்குச் சுமார் பன்னிரண்டு வயதிருக்கும். மெட்ரிகுலேஷன் பரீட்சை (இந்தக் காலத்து ஸ்கூல் பைனல் பரீட்சை) யில் வெற்றி பெற்று விட்டாள். அந்தக் காலத்தில் அது ஓர் அதிசயமான நிகழ்ச்சி தான். அதற்கும் முன்பே சரோஜினி கவி பாடத் தொடங்கி விட்டாளாம். பதினோராவது வயதில் பீஜ கணிதத்திலே ஒரு கணக்குடன்போராடிக்கொண்டிருந்த சிறுமிக்கு அந்தக் கணக்கு வரவில்லை; ஆனால் ஒரு பாட்டு

வந்து விட்டதாம். கணிதம் வராமல் கவிதை வந்த அதிசயத்துடன் இந்த அம்மையாரின் கவிதை-வாழ்வே ஆரம்பமாகி விட்ட தென்று சொல்லலாம்.

பதின்மூன்ருவது வயதில் ஒரு நீண்ட கவிதை புனைந்து விட்டார் இவர். ஆறு நாட்களில் 1,300 வரிகள் உள்ள கவிதை வந்து விட்டதாம். அதே வயதில் இவருக்கு உடல்நிலை சிறிதும் சரியாக இல்லை. 'நீ மிகவும் நோய்வாய்ப் பட்டிருக்கிருய்; ஒரு புஸ்தகத்தையும் தொடக்கூடாது' என்று வைத்தியர் எச்சரிக்கை செய்திருந்தார். இந்தக் குட்டிக் கவியரசியோ வைத்தியரின் கட்டளைக்கோ, கட்டுப்பாடுகளுக்கோ இணங்க இஷ்டப்படவில்லை. படிக்கக் கூடாதென்று தானே வைத்தியர் சொன்னூர்; சிறுமி சரோஜினியோ 2,000 வரிகளில் ஒரு நாடகமே எழுதித் தள்ளி விட்டார்!

இளமையிலேயே சரோஜினியின் கவித்துவ சக்தி அரும்பியதைக் கேள்விப் பட்டுத்தான் இப்போதுள்ள நிஜாமுக்கு முந்திய மன்னர் ஆண்டு ஒன்றுக்கு 300 பவுன் உபகாரச் சம்பளம் உதவுவதாக வாக்களித்து, 1895-ம் ஆண்டில் இவரைச் சீமைக்கு அனுப்பி வைத்தார். அப்போது வயது பதினூறு தான். சீமையிலே கலாசாலைகளில் படித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்திலும் இவர் கவி பாடிக் கொண்டிருந்தார். ஆனுல் ரவீந்திரநாதரைப் போல், நமது பாரதியைப் போல், தாய் மொழியில் பாடவில்லை; இவர் பாடியதெல்லாம் ஆங்கில மொழியில் தான். ரவீந்திரநாதரைப் போல், பாரதியாரைப் போல் இவர் கவித்துவ சக்தி வாய்ந்தவர் என்று சொல்ல முடியாது. தாய் மொழியில் பாடாதது இதற்கு ஒரு முக்கிய காரணம் எனலாம். எனினும் இவரது கவியுள்ளம் இவரை ஒருபோதும் கைவிட்டதில்லை.

வங்கநாட்டுப் பிராமண குலத்தில் பிறந்த இவர் டாக்டர் எம். கோவிந்தராஜுலு நாயுடுவைக் காதல்-மணம் புரிந்துகொண்டு, அந்நாளிலேயே வடநாட்டையும் தென்னுட்டையும் ஒருவாறு இணைக்க முயன்றதற்கும் இவரது கவியுள்ளம் ஒரு காரணம் என்று கருதலாம். வங்கநாட்டுப் பெண்மணி, நிஜாம் ராஜ்யத்தில் வளர்ந்து ஆந்திர நாட்டினரை நம் சென்னை மா நகரில் மணந்து அகில இந்தியப் பெண்மைக்கும் ஓர் அணிகலமாய்த் திகழ்ந்து, தேசிய வாழ்வை வளப்புறச் செய்த இவர் வாழ்க்கையே ஒரு கவிதைதான்!

1919-ல் காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்து கொள்வதற்கு முன்பே இந்திய அரசியல் கிளர்ச்சி சரோஜினி தேவியை வீட்டிலிருந்து அம்பலத்திற்குக் கொணர்ந்துவிட்டது.

எனினும் சரோஜினி தேவி தேசிய அறத்திற்காக இல்லறத்தையும் தியாகம் செய்தார் என்று ஒருவரும் எண்ணவேண்டாம். தமது கணவரான டாக்டர் எம். ஜி. நாயுடு மீதும், தம் புதல்வர் புதல்வியர் மீதும் இவருக்கு விசேஷ அபிமானம் உண்டு. இவர் ஒரு தேசிய ராணியாக விளங்கியது போல் தம் இல்லத்திற்கும் ராணியாக விளங்கினூர். இவருக்குத் தேசமே ஒரு பெரிய இல்லம் தான். ரஸமாகக்

கவி பாடுவதில் எவ்வளவு பிரிய முண்டோ, அவ்வளவு பிரியம் ரஸம் தயாரித்துச் சோறு படைப்பதிலும் இவருக்கு உண்டு. இந்தத் திறமையை இவரே ஒரு சென்னைப் பிரசங்கத்தில் குறிப்பிட்டதுண்டு.

தாம் சுகபோகமுள்ள இல் வாழ்வையும் கவிதைக் கோயிலையும் கனவுக் கோட்டைகளையும் விட்டு அரசியல் கிளர்ச்சியில் கலந்து கொள்வதற்கு உரிய காரணத்தையும் இவரே தெளிவுபடுத்தியிருக்கிறார். 1918ம் ஆண்டில் காஞ்சீபுரத்தில் நடைபெற்ற சென்னை மாகாண மகாநாட்டிலே தலைமை வகித்து நிகழ்த்திய பேருரையினிடையே கவிதைக் குயில் தந்தக்கூட்டை விட்டுச்சுதந்திரவானில் பறந்து திரிய நேர்ந்த நிலைமையை நன்கு விளக்கியிருக்கிறார்: "அடிக்கடி என்னைக் கேட்கிறார்கள்: 'ஏனம்மா, குழலையும் கீதத்தையும் விட்டு இந்தப் போர்ப்பறை கொட்ட வந்திருக்கிறாய்?' என்று கேட்கிறார்கள். ரோஜா மலர்கள் பூத்திருக்கும் தோட்டத்திலே கனவுகளால் இயன்ற தந்தக் கோபுரத்தில் தனித்திருப்பது தானா கவிஞன் தொழில்? மக்களிடையே கவிஞனுக்கு ஸ்தானம் இல்லையா? சாலைப் புழுதியில், போர்க் களத்தின் கஷ்டங்களில் அவனுக்கு வேலை இல்லையா? தோல்வியிலும் சோர்விலும் அபாயத்திலும் ஆறுதல் கூறிக் கனவு காண்பவர்களை நோக்கி 'உங்கள் கனவுகள் மெய்யானால் கஷ்டங்களெல்லாம் சோர்வுகளெல்லாம் மாயம் தானே?' என்று நம்பிக்கையூட்டுவது கவிஞன் கடனல்லவா? இங்கே நான் உங்களுடைய உயர்ந்த கனவுகளுக்கும் தோல்வியை ஒப்புக் கொள்ளாத தைரிய சாகசங்களுக்கும் முன் வந்து நிற்கிறேன். அபலையாகிய பெண், என் வீட்டை விட்டு வந்திருக்கிறேன். கனவுகள் காணும் நான் இங்கே வந்து உங்களை நோக்கி, வெற்றியை நோக்கி முன்னேறிச் செல்லுங்கள் தோழர்களே என்கிறேன்."

சரோஜினி தேவியின் உடல்—அதாவது கூடு—தகனமாகிவிட்டபோதிலும் இந்தக் கவிதைக் குயில் இன்னும்—ஏன் முன்னிலும் சுதந்திரத்துடன்—பறந்து திரிகிறது என்றுதான் கருதவேண்டும். 'குயில் நம்மை விட்டு எங்கேயோ பறந்து போய்விட்டது' என்று சொல்வது கூட இவர் விஷயத்தில் உண்மையல்ல. இவருடைய கவியுள்ளமும் தியாக சௌந்தரியமும் நீண்ட காலம் நமது தேச சரித்திரத்திற்கும் மக்கள் உள்ளங்களுக்கும் நல் வழி காட்டிய வண்ணம் ஜொலித்துக்கொண்டிருக்கும் என்பதற்கு ஐயமுண்டா?

## நாம்தான் செய்வோம்

இளைஞனே! இந்தியாவிற்குப் பெருங்காரியங்கள் செய்ய நமக்கு நற்சமயம் வாய்த்துள்ளது. பெருங்காரியங்கள் நிச்சயமாகச் செய்வோம் என்பதை நம்பு. ஏழைகளிடம் அனுதாபப்படும் நாம்தான் அவ்விதம் செய்வோமே தவிர மற்றவர்கள் செய்யமாட்டார்கள்.

—விவேகானந்தர்

**இருவரும் ஒரே பதிலைத்தான் சொன்னார்கள். சுந்தரத்திற்கு முடிவில் விஷயம் புரிந்து விட்டது. எது புரிந்தது? கதையைப் படியுங்கள்.**

# பொருந்தா மணம்

○

என். பி. வி. ராஜகோபால்

சிறிய வீடு. வாசற் கதவு சாத்தப் பட்டிருந்தது. வாசுதேவனும், சுந்தரமும், ஒரு நிமிஷத் தயக்கத்தில் நின்றனர். சுந்தரம் முந்திக் கொண்டு போய் கதவைத் தட்டி ஓசைப்படுத்தினான்.

கை வளையின் இன்ப ஒலியுடன் 'டக்'கென்று தாழ்ப்பாளைத் தள்ளி கதவைத் திறந்து விட்டாள் மாலதி. அடுத்த கணம் வாசுவும், சுந்தரமும் அவளுக்கு காட்சியளித்தார்கள். வெட்கம் அவளைத் தலைகுனியச் செய்து விரட்டி விட்டது. உள்ளே ஓடிவிட்டாள்.

வாசுவின் உள்ளப் பூரிப்பு முகத்தில் மலர்ந்தது. "சுந்தரம்..." என்று எதையோ சொல்ல ஆரம்பிப்பதற்குள், சுந்தரம் குறுக்கிட்டான். "வாசு! குட்டி எப்படி? உன் பாடு யோகம்தான். நீ இத்தனை வருஷங்கள் காத்திருந்தது வீண் போகவில்லை. அழகுமட்டும் இப்படி என்று நினைத்துவிடாதே. குணமும் பிரமாதம் போ! கொடுத்து வைத்தவன்தாண்டா நீ......" என்று கேலியும் சிரிப்புமாக வாசுவின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றான். வாசுவிற்கு வெட்கம். அவனால் பேச முடியவில்லை.

வாசுதேவனுக்கு வயது முப்பத்தைந்து. இத்தனை நாட்களாக கல்யாணம் செய்து கொள்ளாமல் அலட்சியமாக இருந்தான். எத்தனையோ அழகிகளையும், பண மூட்டைகளையும் தட்டிக் கழித்து வந்தான். யாராவது கேட்டால் "கல்யாணமே வேண்டாம்" என்று சீறி விழுவான். அப்படிப்பட்டவனுக்கு இத்தனை வருஷங்களுக்குப்பிறகு இந்தக் கல்யாண ஆசை வந்திருக்கிறது.

'பெண் அழகாய் இருக்க வேண்டும்; பணம் வேண்டாம், குணம் தேவை. பரம ஏழையாக இருந்தாலும் கவலை வேண்டாம். என்னிடமுள்ள சொத்துக்கள் நான்கு தலைமுறைகளுக்குக் காணும்......' இப்படி எழுதினான், நண்பன் சுந்தரத்திற்கு.

சுந்தரத்திற்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஏதோ ஒரு கிரகம் புரண்டு படுத்திருக்க வேண்டும் என்று நினைத்தான். இந்தக்கிரகமும் வாசுவின் மனமும் மாறி இருக்கும் போதே கல்யாணத்தை முடித்து விடவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு.

தான் இருக்கும் தெருவின் பக்கத்துத் தெருவிலேயே அழகிய

பெண் ஒருத்தி இருப்பது அவன் கவனத்திற்கு வந்தது. அவளுக்குத் தந்தை இல்லை. ஒரே பெண். தாயும் மகளும் வறுமையின் இரும்புக் கைகளில் சிக்கிக் கசங்கிக் கொண்டிருந்தார்கள்.

சுந்தரம் எல்லா விஷயங்களையும் பெண்ணின் தாயிடம் தெரிந்து, தெரிவித்து, சம்மதம் பெற்றுக் கொண்டான். விஷயத்தை எழுதி வாசுவையும் வரவழைத்துக் கொண்டு பெண் பார்க்க வந்திருக்கிறான்.

மாமூல்படி வாழ்க்கைப்பட வேண்டியவள், பட்சணத் தட்டுடன், காபிக் கூஜாவையும் கொணர்ந்து அவர்கள் பக்கத்தில் வைத்துச் சென்றாள். அடுத்த சீன் ஆரம்பமாயிற்று. மாலதி தன் பாட்டுத் திறமையைக் காண்பிக்க வேண்டிய கட்டம் அது.

மிகுந்த சங்கோசத்துடன் அவர்கள் எதிரே வந்து, அடக்க ஒடுக்கத்துடன் அமர்ந்தாள். நவயௌவன ஸௌந்தர்ய தேவதையின் பிம்பமாக விளங்கினாள். வயது பதினாலுதான். பருவத்திற்கேற்ற அங்க அமைப்பு. கண்டவர் காமம் கொள்ளும் வாளிப்பு. அந்த அழகிய மேனியில் ஓடும் பச்சை நரம்புகள் அவள் வெளுப்பை இன்னும் பளிச்சிடச் செய்தன; மல்லிகையின் வெண்மையால், கூந்தலின் கருமை அதிகமாவது போல.

வைத்த கண் வாங்காமல், அந்தப் பெண்ணை வாசு பார்த்துக் கொண்டிருந்தான். பக்கத்தில் சுந்தரம் உட்கார்ந்திருப்பதைக்கூட மறந்து விட்டான். உலகமே மறந்து விட்டது அவனுக்கு. ஞானியைப் போன்ற உறுதியுடன், நிலை பெயராது அவள் தியானத்தில் மூழ்கிக் கிடந்தான்.

மாலதிக்குத் தலை நிமிர வழி இல்லை. தரையைப் பார்த்துக் கொண்டே பாட ஆரம்பித்தாள். மிக இனிய சாரீரம். ஒரு பாட்டை அழகாகப் பாடி முடித்தாள். எழுந்துவிட்டாள்.

"எழுந்துட்டியே, இன்னொன்று பாடு" என்று மெல்லிய குரலில் மறைவிலிருந்து அசரீரியைப்போன்று அவள் அன்னை வினவினாள்.

திரும்பவும் ஆயிரம் கோணல்களோடு உட்கார்ந்து 'தீராத விளையாட்டுப் பிள்ளை' என்ற பாரதியாரின் பாட்டைத் துவக்கினாள். தூல்விட்டுப் பாடினாள் வாசுவுக்குப் பாட்டில் சிறிதுகூட கவனமில்லை. அவன் பாட்டை அனுபவிக்க வில்லை; அனுபவிக்க முடியவில்லை. அவள் பாடும்போது உண்டாகிற ஒவ்வொரு அங்க அசைவிலும் அவன் கவனம் லயித்திருந்தது.

சுந்தரம் தன்னை அறியாமலே தலையை ஆட்டி அசைத்துக் கொண்டிருந்தான். கண்களைக் கூட மூடிவிட்டான். அவ்வளவு ரசிகன்.

மாலதியின் தாய்—ராஜம், அறையிலிருந்து கொண்டே பெண்ணையும், மாப்பிள்ளையாக வரப்போகிறவனையும், பார்த்துக் கொண்டிருந்தாள். தன் மகளுக்குத் தகுந்த வரன் காசு பணம் கேட்காமல், அதுவும் பணக்காரனாக கிடைக்கின்றான்—கிடைத்து விட்டான் என்ற

குதூகல மிகுதியால் அவள் உள்ளம் பூரித்தது.

'வாசுதேவன்' என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டாள் ஒரு தடவை. பிறகு மீண்டும் மீண்டும் சொல்லுகிருள் 'வாசுதேவன்' என்று. 'வாசுதேவன், வாசுதேவன்' என்று வேகமாகச் சொல்ல ஆரம்பித்து விட்டாள். 'ஹா! வாசுதேவனு?... ஆம் அவன்தான். வாசுதேவன்தான்' என்று சொல்லுகிறது வாய். உள்ளத்தில் ஒருவித படபடப்பு உண்டாயிற்று. வாசுவை உன்னிப்பாகக் கவனிக்கிருள்!

அவள் புருவங்கள் நெற்றிக்கு ஏறி சுருக்கங்களை உண்டாக்கின. ஏறின புருவங்கள் திடீரென்று நெருங்கி ஒன்றையொன்று தொட்டுக்கொள்ளப் பார்த்தன. நிதானம் தவறிய வேகத்தில் துடித்தது அவள் இதயம். ஏதோ ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது போன்ற ஒரு தோற்றம். உடலிலுள்ள அவ்வளவு ரத்தமும், அப்படியே அவள் முகத்தைத் தாக்கி சிவக்கச் செய்தது. உடல் முழுவதும் ஒரு நடுக்கம்.

திடீரென்று பாட்டு நின்று விட்டது. கண்களைமூடி ரசித்துக்கொண்டிருந்த சுந்தரத்திற்குத் தூக்கி வாரிப் போட்டது. விழித்துப் பார்த்தான். அங்கு நடக்கும் காட்சியைப் பார்த்தும், அவனுல் நம்ப முடியவில்லை.

"போதும், போதும் பாடினது. உள்ளே போ" என்று மாலதியின் கையைப் பிடித்து, உள்ளே இழுத்துச் சென்று கொண்டிருந்தாள் ராஜம்.

வாசு இப்போது மாலதியைப் பார்க்கவில்லை. அவன் கவனம் முழுவதும் ராஜத்தின் பக்கம் திரும்பி விட்டது. ராஜத்தை விழுங்கி விடுகிறவன் போலப் பார்த்துக்கொண்டிருந்தான். வரும் போதிருந்த ஒரு செழிப்போ—களையோ, இப்போது அவன் முகத்தில் இல்லை. உற்சாகம் மறைந்துவிட்டது. நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தும், அவனுக்கு சிறிதும் ஆத்திரம் உண்டாகவில்லை. அமைதியாக, செயலற்று, ஸ்திரமாக ராஜத்தைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.

சுந்தரத்திற்கு நினைவு திரும்புகிறது. உணர்ச்சி தெளிகிறது. தான் காணுவது கனவல்ல என்பதைப் புரிந்து கொள்ள இத்தனை நேரம் ஆயிற்று. வாசுவின் முகத்தை குனிந்து பார்த்தான். அவன் இருக்கும் சமாதி நிலையில் அவனிடம் பேச, சுந்தரத்திற்கு மனமில்லை.

அறையில் மாலதி கலங்கிய கண்களுடன், மருண்டு போய் ஒரு பக்கத்தில் நின்றிருந்தாள். அவள் வெண்மையான மேனி, இப்போது ரோஜா வர்ணத்தை அடைந்துவிட்டது. தணலின் தகிப்புக்கொண்டிருந்தது அவள் வதனம். கண்களைக் கசக்குவதும், தாயைப் பார்ப்பதும் தான் அவள் வேலையாக இருந்தது.

ராஜம், பிரமை பிடித்தவளைப் போல அங்கு உட்கார்ந்திருந்தாள். முந்திய படபடப்பிலிருந்து நிதானமடைந்துகொண்டிருந்தது உள்ளம். நடுக்கம் நின்றுவிட்டது. எதையோ நினைத்து நினைத்து பெருமூச் செறிந்து கொண்டிருந்தாள்.

தாயையும் மகளையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே

உள்ளே நுழைந்தான் சுந்தரம். அவன் நடையில் தள்ளாமை மிகுந்திருந்தது. ராஜத்தின் பக்கத்தில் வந்து நின்றான். அவனால் பேச முடியவில்லை. ராஜம் பேசினாள். "சுந்தரம், பெண் கொடுக்க இஷ்டமில்லை என்று சொல்லி விடு" என்றாள்.

"ஏன்? வாசு அழகாயில்லையா?"

"இல்லை இல்லை. அதுவல்ல......ம், வந்து...வந்து, அப்பாவை மகள் மணப்பது போலிருக்கிறது. வேண்டாம்" என்றாள் பழைய படபடப்புடன்.

ராஜத்தின் வார்த்தைகள் மண்டையில் அடிப்பது போலிருந்தது சுந்தரத்திற்கு. ஆத்திரம் பொங்கிற்று அவனுக்கு.

"ஏன், நான் முதலில் அவனுக்கு முப்பத்தாறு வயது என்று சொல்லவில்லையா?" என்று இரைந்தான்.

ராஜத்திற்கு பயம் வந்து விட்டது. அவள் தடுமாற்றத்துடன், "வேண்டாம் சுந்தரம். தயவு செய்து என்னை மன்னித்துவிடு" என்று குழைந்தாள்.

சுந்தரத்திற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அறையை விட்டு வெளியே வந்தான். வாசுவைக் காணவில்லை. "வாசு" என்றழைத்துக் கொண்டே வெளியே தெருவுக்கு வந்தான். வாசு அங்குதான் நின்றுகொண்டிருந்தான். அவன் கண்கள் வெற்று வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. அவன் முகத்தில் கோர வெறுப்புத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

சுந்தரம் அவனை நெருங்கி "வாசு" என்றான், பயத்துடன். அவன் மௌனம் சாதித்தான். மெல்ல அவன் தோளைப் பற்றி "வாசு" என்று குலுக்கினான்.

"வீட்டுக்குப் போவோமே" என்று சாதாரணமாக ஒன்றும் நடவாததுபோல பதிலளித்தான் வாசு. அவனுடைய இந்தப் பேச்சில் படபடப்போ, ஆத்திரமோ இருக்கவில்லை. அவன் முகத்தில் முன்பிருந்த இளமை மாறி வயோதிகம் தெரிந்தது. வார்த்தைகளில் யௌவனத்தின் விறுவிறுப்பு இல்லை. ஒரு சில நிமிஷங்களில் எப்படியோ ஆகிவிட்டான்.

"வாசு, உன் வயதைப் பார்த்து மலைக்கிறார்கள் போலிருக்கிறது. ஏதாவது கொஞ்சம் தட்டுக் கொடுத்து சரிப்படுத்திவிடலாம்..."

"வேண்டாம் சுந்தரம். அந்தப் பெண் வேண்டாம்."

"ஏன்? அவர்கள் அலட்சியம் செய்து விட்டார்கள் என்றா?"

"அதுவல்ல; என் மகளை நான் மணப்பதைப் போலிருக்கிறது. எனக்கு அதிக வயதாகிவிட்டது." என்றான்.

வாசுவின் பதிலும், ராஜத்தின் பதிலும் ஒன்றாக இருப்பதைக் கேட்ட சுந்தரத்திற்கு வியப்பு தாங்கவில்லை. எவ்வளவு யோசித்தும் ஒன்றும் விளங்கவில்லை. இருவரும் வீட்டை நோக்கி நகர்ந்தார்கள். வழிநெடுக ஒரே மௌனம். சுந்தரம் மண்டையைப் பிளந்து கொண்டு யோசித்தான்.

முடிவில் அவனுக்குப் புரிந்து விட்டது.

*

*பரிபக்குவம் எய்துவதற்கு அத்வைதம் என்ற ஒட்டுறவு நிலையைக் கைக் கொள்வார்கள் பக்த கோடிகள். இந்த ஒட்டுறவின் காரணமாக, இறைவனைத் தமக்கு ஒரு சொந்தக்காரராகக் கருதி ஈடுபடுவோர் உண்டு. அந்த ஈடுபாடு தமிழுக்கு எவ்வளவு அருமையான கவிகளைத் தந்திருக்கிறது?*

# கடவுளும் காதலும்

ல. சண்முகசுந்தரம்

தலைப்பைக் கண்டு பதறிவிடாதீர்கள். கடவுளாவது பூசணிக்காயாவது என்று நாடு முழுவதிலும் இரணிய வாதங்கள் நடந்து கொண்டிருக்கும் பொழுது, கடவுளைப் பற்றியும், அவன் மீதுள்ள காதலைப் பற்றியுமா எழுதுகிறாய் என்றும் நினைத்துவிடாதீர்கள். மதம் என்பது எத்தனையோ துன்ப நிகழ்ச்சிகளையும், துயரக் கதைகளையும் வாழையடி வாழையாக மனித சமுதாயத்திற்கு இழைத்து வந்தாலும் ஒட்டோடு ஒட்டாக நன்மையும் புரிந்திருக்கின்றது. கலா விவகாரத்தைப் பொறுத்த மட்டில் அதனுடைய சேவை அளவிட முடியாத ஒன்றுதான். மனித பரம்பரைக்கு நம்பிக்கை, மனோதர்மம், இதய ஒட்டத்தில் விளைவு குழைவு ஆகிய பண்பாடுகளை யெல்லாம் தலைமுறை தலைமுறையாகப் போதித்து வந்தது மதம்தான். இந்தப் போதனை உடலோடு உடலாக ஒட்டி ரத்தக் கலவையாகி விட்டதால்தான் கலைகளும் கவிதைகளும் செழித்து வளர்ந்தன. இப்படி எல்லாம் மனோதர்மத்திற்கும் கலைவளர்ச்சிக்கும் தாயகமாக இருந்து வந்த மதக் கோட்பாடு தன்னைக் கைப்பிடித்த நாயன்மார்களுடைய (பாதிரிமார்கள், மடாதிபதிகள், ஜீயர்கள்) போக்குகளுக்கெல்லாம் வளைந்து கொடுக்க வேண்டிய நிலைமைக்கு உள்ளாகி விட்டதாலும், அதாவது தன்னைக் கைக்கொண்ட கும்பல்களின் ஆசா பாசங்களைக் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்றபடி எல்லாம் நிறைவேற்றி வைக்கும் கருவியாகி விட்டதாலும்தான் எத்தனையோ குரூரங்களையும் கொடுமைகளையும் அது இழைத்து வந்திருக்கிறது. இதனால் தான் ஹென்றிக்இப்ஸன், வால்டேர், வில்லியம் மோலியர், பெர்னார்ட்ஷா, மார்க்ஸிம் கார்க்கிமுதலிய பேராசிரியர்கள், நாஸ்திக கோலத்தோடு நின்று மதிப்பிட முடியாத பேரிலக்கியங்களைப் படைத்து விட்டார்கள். மதத்தில் விளைந்த, விளையும், ஊழல்களை எல்லாம் அவர்கள் குத்தியும் கிண்டியும் சொல்லுகின்ற ஒவ்வொரு வாசகங்களும், உண்மையாய் இருப்பதினால்தான் நம் உள்ளத்திலே அவைகள் சுருக்கென்று

பாய்கின்றன. அவர்களுடைய சிருஷ்டிகள் அத்தனையும் உலகத்தின் பேரிலக்கியமாகச் சேர்க்கப்பட்டு பூஜிக்கப் படுகின்றன. இதிலிருந்து நமக்கு ஒரு உண்மை தெரிகிறது. அதாவது மதத்தை அடிப்படையாகக் கொண்டவையாக இருந்தாலும் சரி, அதற்கு நேர் விரோதமாக இருந்தாலும் சரி, ஒரு உண்மையை, தத்துவத்தை அடிப்படையாக வைத்துக் கலா உருவத்தோடு பின்னப் பட்டது எதுவாக இருந்தாலும் அது கலைதான்; அதில் நாஸ்திகம் ஆஸ்திகம் என்ற கொள்கை வேறுபாடுகளுக்கே இடம் கிடையாது. இங்கே மதத்தின் மூலமாக வந்த கவிதைகளைப் பற்றிப் பார்ப்போம்.

மந்தை மந்தையாக வாழக் கற்றுக் கொண்டாலும் ஆதி மனிதனுக்குப் பயம் என்பது ஒரு தீரா நோயாகவே இருந்து வந்தது. இடி இடிப்பது, சரக் கோவை போல மழை பொழிவது, சூரிய சந்திர உதயாஸ்தமனம், இரவு, அதிலே முத்துக் கோவை இவைகளை எல்லாம் கண்ட மனிதனுக்கு அனுபவம் என்பது முளைவிட்டு ஏற ஏற ஆச்சரியமும் உண்டாகி வளர்ந்து வந்தது. இந்தப் பயமும் அதிசயமும் ஒன்றுபட்டுப் பிணைந்துவிட்ட ஒரு கற்பிதப் பொருள்தான் கடவுள். இந்தத் தேவதைகளாகிய கற்பிதப் பொருள்களை மனிதன் அப்படியே களிமண் பிண்டம்போல ஒதுக்கி வைத்து விடாமல் தன்னுடைய அபிலாஷைகளையும் கனவுகளையும் அவற்றில் சாடவிட்டு வளர்த்து வந்தான். ஒட்டோடு ஒட்டாக அவனும் வளர்ந்து வந்தான். இந்தப் பொது நியதியிலிருந்து தமிழ் நாட்டிற்கு தனிப்பட்ட சிறப்புவிதி ஒன்று இருக்கிறது. தமிழ் நாட்டில் பிறந்து உள்ளம் உருகி ஓலமிட்ட ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் போல உலகத்தில் வேறு எங்கேனும் பிறந்ததுண்டா? கிடையாது. இவர்கள் கண்ணுக்குத் தெரியாத அந்தக் கற்பிதப் பொருள்களிடத்து தங்களைப் பறி கொடுத்து விட்டுப் பாடிய பாசுரங்களைப் போல அனுபவ முத்திரைகளை உலகத்தில் வேறு எந்த மொழியிலும் பார்க்க முடியுமா? ஆனால் உலகத்தில் ஏறக் குறைய எல்லா இடங்களிலும் அநாதி காலந் தொட்டே இந்தப் பக்திப் பாடல்கள் இருந்து வந்திருக்கின்றன. உலக முழுவதற்குமே ஆதி விமர்சன கர்த்தாவாக விளங்குகிற அரிஸ்டாட்டில் (Aristotle) கூட கிரேக்க இலக்கியங்களை முறைப்படுத்திக் கூறும் பொழுது தெத்ராம்பிக் (Dethrampic) என்ற பக்திப் பாடலைக் குறிப்பிடுகின்றார். இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன்பே மேற்கு உலகத்தில் பக்திப் பாடல்கள் நிறைந்து கிடந்தன என்பதை இதன் மூலம் தெரிந்து கொள்ளுகிறோம். இனி நம்முடைய நாட்டில் 'உபநிஷத்து'க்களும் 'பரிபாடல்' என்ற தொகை நூலும் 'எட்டுத் தொகை' என்ற சங்க இலக்கியங்களில் வருகின்ற கடவுள் வாழ்த்துப் பாடல்களும் அத்தொகை நூல்களின் இடை இடையே வருகின்ற வேறு சில பாடல்களும் மிகப் பழைய காலந் தொட்டே பக்திப்பாடல்கள் உண்டு என்பதை நமக்குச் சான்று கூறுகின்றன. இப்பேர்ப்பட்ட பக்திப் பாடல்களை இரண்டு வகையாகப் பிரித்துக்

கொள்ளலாம். அவை, ஒன்று கடவுளை நேர்முகமாக நின்று அதாவது தன்னை முழுவதும் பக்தனாக ஆக்கிக் கொண்டு தன்னுடைய குறைபாடுகளை முறையிட்டுப் புலம்புவதாகும். தன்னுடைய அழுக்குகளை எல்லாம் அவன் முன்னின்று அழுது பெருகுகின்ற கண்ணீரின் மூலமாகக் கழுவிக் கதறுகின்ற பாடல்கள் தான் அவை. இனி மற்றொன்று. கடவுளை நாயகனாக வைத்துத் தன்னை நாயகியாகப் பாவித்து, அதாவது நாயக நாயகி பாவத்தில் பாடுவது ஒரு வகை. இவற்றில் பின்னால் சொல்லப்பட்ட நாயகி பாவம் தமிழ் மொழியிலுள்ள பாடல்களில்தான் பார்க்க முடியும். இந்த இடத்தில் இன்னொரு விஷயம். அதாவது பாரதியாரின் கண்ணன் பாட்டுக்கு முன்னுரை எழுதிய ஸ்ரீ வ. வே. சு. ஐயர்......" இவற்றுள் நாயக நாயகி பாவத்தைப் பற்றி இங்கு சில மொழிகள் கூறுதுவிட முடியவில்லை. இப் பாவத்தால் பகவானை வழிபடும் முறை தொன்று தொட்டுப் பக்தர்களாலும் கவிஞர்களாலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ரோமன் கத்தோலிக்க மதத்திலே கூட அடியார் வர்க்கத்தை நாயகியாகவும் கிறிஸ்துவை நாயகனாகவும் பாவித்து எழுதிய தோத்திரங்கள் பல உள. நமது பாகவதத்தில் கோபிகைகளின் உபாக்கியானங்களெல்லாம் இப் பாவத்தைத் தழுவி எழுதப் பட்டுள்ளனவே. மகா பக்திமதியான மீராபாய் உலகத்திலுள்ள ஜீவகோடிகளனைத்தும் ஸ்திரீப் பிராயம் என்றும் பகவான் ஒருவனே புருஷன் என்று பாவித்தும் பக்தி செலுத்தியிருக்கிறார்" ...என்று குறிப்பிட்டுள்ளார்கள். ரோமன் கத்தோலிக்கர்களுடைய தோத்திரங்களும் கோபிகைகளின் உபாக்கியானங்களும் மீராபாயின் பக்தியும் கதை உருவமாகத்தான் இருக்கின்றதே ஒழிய அதாவது நாயக நாயகி பாவத்தில் ஏற்பட்டுப் போன கதா நிகழ்ச்சிகள்தானே ஒழிய வேறில்லை. அந்தப் பாவனைகளோடு வருகின்ற சில பாடல்கள் தோத்திரமாகச் சொல்லுகின்ற நம்முடைய பாடல்களை ஒட்டித்தான் இருக்கின்றதே ஒழிய ஆண்டாளைப் போலவோ மாணிக்கவாசகரைப் போலவோ ஆழ்வார்களைப் போலவோ சேலை கட்டிய மாதராக நின்று மனைவியாக மாறி உரிமை கொண்டாடுவதாக இல்லை. இதற்குக் காரணம் என்ன? நாமும் அவர்களும் தெய்வத்தோடு பழகி வந்த முறை வெவ்வேறு வகைப்பட்டவை. நம்முடைய தெய்வம் நம்மோடு நாமாய் ஆபத்துக்களை எல்லாம் நீக்கி நெறி வகுக்க 'நண்பனாய், தோழனாய், நல்லாசிரியனாய்' மாறி மாறி எடுத்து வந்த ஒரு அவதாரப் பொருள். அவர்களுடைய தெய்வமோ வான மண்டலத்தின் உச்சிமுகட்டில் தொத்திக்கொண்டு பூமண்டலத்தில் தன் குமாரர்கள் செய்யும் பாவ கைங்கர்யங்களைப் பூதக்கண்ணாடி போட்டுப் பார்க்கும் பொருளாகவே நின்று விட்டது. நாம் தெய்வத்தோடு ஒண்டி உராய்ந்து பழகி விட்டோம். அவர்களோ எட்டி இருந்து விலகியே நிற்கிறார்கள். இதுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வேறுபாடு. இதை ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவே சொல்லுகிறார். "நம்முடைய ஏசு கிறிஸ்து நமக்கு இன்னும் சட்டாம் பிள்ளையாகவே இருக்கிறார்.

அவரோடு நம்முடைய குறைபாடு களை எல்லாம் சொல்லிப் பகிர்ந்து கொண்டதோ, அதற்கு இரங்கி அதைத் தீர்த்து வைக்க அவர் இறங்கி வந்ததோ கிடையாது." இது அவருடைய வார்த்தைகள். இதனுல்தான் நம்முடைய, தெய் வத்தைப் பாடிய பாட்டுக்களில் உரிமையும் தோழமையும் பொலிந்து மிளிர்கின்றன. இதைப் பற்றி என்னுடைய இலக்கிய நண் பருடன் நான் சமீபத்தில் பேசிக் கொண்டிருக்கும்பொழுது "நாயக நாயகி பாவம் என்பதே தமிழ் நாட்டில்தான் முதன் முதலாக உண்டாகி வளர்ந்தது. அது கி. பி. 9-ம் நூற்றுண்டிற்குப் பின்புதான் வட இந்தியா வழியாகப் பாரசீகத் திற்குப் போயிற்று. அங்கிருந்து தான் மேல் நாடுகளுக்கெல்லாம் அது பிரயாணமாகியது" என்று ரவிசங்கர்சுக்லா ஏதோ ஒரு புத்த கத்தில் எழுதியிருப்பதாகக் குறிப் பிட்டார்.

அடுத்தபடியாக தெய்வத்தைப் பற்றிய தமிழ்ப் பாடல்களின் இரண்டு பிரிவுகளையும் ஒருவாறு பார்ப்போம். இவற்றுள் முதலாவ தாகிய பக்திப் பாடல்கள் தமிழில் அளவு கடந்து இருக்கின்றன. ஆழ்வார்களும், நாயன் மார்களும் பாடிய தேவாரமும், பிரபந்தமும் ஆயிரமாயிரம் பாடல்களைத் தன் னகத்தே வைத்திருக்கின்றன. அன்பு கசிந்து கசிந்து உருகப் பாடிய மாணிக்க வாசகரும், துன் பத்தையும், சுயநலப் பேராசையை யும் தாங்க முடியாமல் சுழித்து நோக்கிய பட்டினத்தாரும் இந்தப் பக்திப் பாடல்களை மிக அழுத்தந் திருத்தமாகக் கையாண்டு இருக் கிறார்கள். இதற்கு உதாரணமாக சில பாடல்களைப் பார்ப்போம் "கங்கா தேவியைச் சடாபாரத்தில் தாங்கி உள்ள எம்பெருமானுடைய திருவடிப் போதுகள் திரிகரண சுத்தியோடு தம்மிடம் முழுக்க முழுக்க அடைக்கல மாகிவிட்ட அடியார்களுடைய உள்ளத்தோடு உள்ளமாக வீற்றிருக்கிறதாம். அது மாத்திரமா அந்தத் திருவடி யாகிய தெய்வ நியதிதான் பேரண் டங்களின் உச்சிக்கு உச்சியாக நின்றுகொண்டு சேதன அசே தனப் பொருள்கள் எல்லாவற்றை யுமே ஆட்டிவைக்கிறதாம்."

அப்பார் சடையப்பன்
ஆனந்தவார் கழலே
ஒப்பாக ஒப்புவிக்கும்
உள்ளத்தா உள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப்
பாடுதுங்காண் அம்மானை.
(திருவாசகம்)

(அப்பாலைக்கப்பால்—எங் கிருந்து பார்த்தாலும் அதற்கும் அதற்கு அப்பால் தோன்றுகின்ற ஒரு நிலை. அதாவது ஒவ்வொன் றையும் கடந்து நிற்கும் நிலை. எல்லாவற்றையும் ஆட்டி எல்லா வற்றையும் கடந்து நிற்கும் நிலை.) இப்படியாகச் சகலகோடி ஜீவராசி களையும் ஒன்று விடாமல் தோற்றி, இருத்தி, அழித்து, வருவதும் அந்தப் புண்ணியன் தானும். அந்தப் புண்ணியனுடைய செயல், வட்டத்தைப் போல நீங்காமல் நிலைக்காமல் எல்லா வற்றையும் பின்னிக் கொண்டே கிடக்கிற தாம். அப்பேர்ப்பட்ட மூர்த்தியை நான் வாழ்த்தி வணங்கினேன் என்று சொல்வதற்கு நாம் யார்? அப்படிச் சொல்வது தப்புத் தானே? அதனுல்தான் அவனை

வழி படுவதுங்கூட அவனுடைய திருவருள்தான் என்று குறிப்பிடுகின்றார்.

"போக்கும் வரவும்
புனர்வுமிலாப் புண்ணியனே
" அவன் அருளாலே
அவன் தாள் வணங்கி"

இப்படி யெல்லாம் ஓங்கி உயர்ந்துள்ள மூர்த்தியைத் தாம் ஏமாற்றி விட்டதாகக்கூட கிண்டல் பண்ணுகிறார். சிவபெருமானும் மாணிக்க வாசகரும் ஒரு பந்தயம் வைத்துக் கொண்டார்களாம். உன்னை எனக்குத் தந்து விடுவது என்னை நீ எடுத்துக் கொள்வது என்பது தான் அந்தப் பந்தயம். அப்படியே செய்து கொண்டார்களாம். காரியம் நடந்த பிறகு ஜெயித்தது யார் என்று மார்பு தட்டுகிறார் மாணிக்க வாசகர்.

"தந்ததுன் தன்னை கொண்டதென் தன்னை சங்கரா யார்கொலோ சதுரர் அந்த மொன்றில்லா ஆனந்தம் அடைந்தேன் யாது நீ பெற்றதொன்(று) என்பால்" இப்படி எல்லாம் வெற்றி பெற்றாலும் இவைகளை எல்லாம் அதீத மயக்கமாகவே கருதிப் பல சமயங்களில் சந்தேகப் படுகிறார். அந்தச் சந்தேகங்களை "உன்னோடு ஒன்றுபட்டு நான் எப்பொழுது ஒடுங்குவது? உன் திருமேனியின் முழுக் கோலத்தையும் பூரணமாக அனுபவித்து நான் அதிலே கரைவது எப்பொழுது? என் குலமணியின் ஆனந்தக் கனவில் என்னை மறந்து தனக்குள் தானே தீ மூட்டப் பெற்ற அந்த சுகத்தீயில் கொஞ்சம் கொஞ்சமாக நான் கரைந்து உள்ளுக்குள்ளேயே உருகி, அழுது கொண்டும் பாடிக்கொண்டும் கண்ணீரும் கம்பலையுமாக நின்று கூத்தாடுவது எப்பொழுது?" என்று கதறுகிறார்.

நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தால்கூத்து நவிற்றி
செக்கர் போலும் திருமேனித் திகழ
நோக்கிச் சிலிர் சிலிர்த்து
புக்கு நிற்பது என்று கொலோ
என் பொல் லாமணியைப் புணர்ந்தே

மேலே குறிப்பிட்ட பாடல்களின் மூலமாக மாணிக்க வாசகருடைய கதறல்களை மாத்திரமல்ல, தெய்வத்திற்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தையே மிக இறுக்கமாக நெருகிக் கேந்திரப் படுத்துவதும் தெரிகிறது.

இனிப் பட்டினத்தாருடைய பாடல்களில் ஓரிரண்டைப் பார்ப்போம். இந்த உலகத்தின் ஒவ்வொரு அங்குல இடமும் வஞ்சனையும், சூதும் நிறைந்தாகவே அவருக்குப் படுகிறது. சுயநலம், பேராசை ஆகியவற்றின் முடை நாற்றம்தான் அவருடைய மூக்கைக் கரிக்கிறது. ஏமாற்று என்கின்ற பொய்ப் போர்வை போர்த்தி நாகரிகம் முன்னேற்றம் என்கிற விளக்கடி நிழலில் வெறுமனே வளையம் போடுவதை அவரால் தாங்க முடியவில்லை. குஷ்டரோகத்தைப் பீதாம்பரம் கொண்டு மூடுவதைப் போலத் தான் இருக்கிறது இந்த மாயப்பிரபஞ்சம். பாம்பு மாலையை அணிந்த காளகண்ட மூர்த்தியை அல்லும் பகலும் வணங்குவது, அவன் பக்கத்திலே தாங்கி இருப்பது, வீடு வீடாகச்சென்று பிச்சை எடுத்து உண்பது, பிறகு அவன் சன்னிதான வாசலிலே வந்து தன்னை மறந்து தூங்குவது ஆகிய இவை

தான் பேரின்பமாகும் என்கிறார் அவர்.

நச்சரவம் பூண்டானை
நன்றாய் தொழுவதுவும்
இச்சையிலே தானங்
கிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவதும் உண்பதுவும்
வந்து திருவாயிலிலே
தூங்குவதும் தானே
சுகம்

சிவபெருமானுடைய சுடுகாட்டுக் காதல் சுடுகாட்டோடு நிற்காமல் அங்குள்ள எலும்புகள் மீதும் விழுந்ததைப்போல, பட்டினத்தாருடைய உலக வெறுப்பு, கடவுளோடு ஒட்டி நிற்பதோடு நின்று விடாமல் அவனுடைய தொழில்களில் எல்லாம் ஈடுபடும்படி செய்து விடுகிறது. 'நச்சரவம்' என முத்தாய்ப்பு விழுகிறது. இத்தோடு முடிந்து விட்டதா?

இப்படியாக இறைவன் தங்கி இருக்கின்ற ஒவ்வொருஇடங்களும் ஒவ்வொரு அங்குலமும் அவருக்கு இஷ்டசித்தியாய் பேரானந்தமாய்க் காட்சிஅளிக்கிறது. அந்த ஆனந்தத் தேனை உடலழுந்த நெஞ்சமழுந்த ஒன்றுபட்டுக் கட்டித் தழுவுகிறார். "கழுத்து கருப்பாக இருக்கிறதாம், எல்லாரையும் போலில்லாமல் கண்கள் மூன்று இருக்கிறதாம். பொலிவைப் பார்த்து விட்டாலோ பேரண்ட முழுவதும் அதனுள்ளே தேங்கி விளங்குகிறதாம். திருவொற்றியூர் கடற்கரையில் நிற்கும் அந்த ஞானக் கரும்பை நினைத்து விட்டால் நெஞ்சிற்கு மாத்திரமல்ல, உடம்பு முழுவதையும் தெவிட்ட வைக்கிறதாம். அவ்வளவு தித்திப்பு."

கண்டம் கரியதாம்
கண் மூன்(று) உடையதாம்
அண்டத்தைப் போல
அழகியதாம்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கும்
ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்கும்
கரும்பு.

இப்படி எல்லாம் கடவுளுக்குச் சூட்டும் பாமாலையை உலக விவகாரத்தை எல்லாம் இழுத்துக் கொண்டு வருகின்ற பட்டி மண்டபமாக்குகின்றார். இந்த உலக அமைப்பில் உள்ள தனிப்பட்ட ஜீவராசியின் மனப் புழுக்கங்களையும் பேதலிப்புக்களையும் அளவிட்டுக்காட்டுகிறது அவருடைய பாடல்கள். பக்திப் பெருக்கின் காரணமாக இறைவனோடு கொஞ்சி விளையாடுகின்ற அத்வைத நிலையை இனி பார்ப்போம்:

"சிவபெருமான் தான் கீழேழு மேலேழு லோகங்களையும் படைத்தது, காத்தது, அழிப்பது. அவனுடைய சித்து விளையாட்டின் வட்டவளையத்திற்குள்ளாகத்தான், ஈரேழு லோகங்களும் சஞ்சாரம் பண்ணுவது. அப்படி இருந்தும், அவனுக்குத் தொழில் என்ன தெரியுமா? அடியார்களே! கேளுங்கள். தன் தொண்டர்களை எல்லாம் வான மண்டலத்தையும் பூமண்டலத்தையும் அரசாளும்படியாக முடிசூட்டிவிட்டு அவன் கபாலம் ஏந்திப் பிச்சை எடுக்கின்றான், ஐயோ, இது என்ன அதிசயம்!

இருந்தவா காணீர்!
இது என்ன மாயம்!
அருந்தண் கயிலாயத்
தண்ணல்—வருந்திப்போய்

தான் நாளும் பிச்சை
புகும்போலும்தன்னடியார்
வாளுளமண்ணுள
வைத்து.

(கைலைபாதி காளத்திபாதியந்தாதி)

எத்தனை கஷ்டப்பட்டு இந்தப் பிச்சை எடுக்கவேண்டி இருக்கிறது என்பதை வருந்திப்போய் என்கின்றபதம் சுண்டி இழுக்கிறது. 'இந்தக் கோலத்தை எல்லாரும் பார்க்க வாருங்கள், இது என்ன அநியாயம்!' என்று சொல்லும் போது கிண்டலும் கேளிக்கையும் பீறிட்டு வருகிறது. இனி அடுத்த படியாக நாயக நாயகிபாவம்.

தீட்சிதர், தியாகராஜ சுவாமிகளுடைய கீர்த்தனைகளை அனுபவித்தவர்களுக்கு பக்தியில் காதல் இழைந்து வருவதைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இயற்றப்பட்ட தொல்காப்பியம் என்னும் நூலில் வானதேவதைகளைக் காதல் பாவனையோடு பாடப்பட்டுள்ள கவிதைகளுக்கு ஒரு இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது.

அமரர்கண் முடியும்
அறுவகையானும்
புரைதீர் காமப்
புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி
ஒன்றும் என்ப.

(தொல்காப்பியம்—புறத்திணை இயல்)

என வருகின்றது அச்சூத்திரம். இதை இன்னும் தெளிவுபடுத்தும் முறையில்,

காமப்பகுதி
கடவுளும் வரையார்
ஏனோர் மருங்கினும்
என்மனார் புலவர்.

(தொல்—புறத்திணை இயல்)

என்று சொல்லப்பட்டுள்ளது. இங்கு ஏனோரென்றது மானிடப் பெண்களை. நிற்க.

தெய்வங்களை நாயகனுகப் பாவித்து ஒன்றுபட முயலும் நாயகிகளைக் குழந்தைகளாக வைத்துக் கவிதை புனைவதும் உண்டு. இதில்தான் காதல்கீதத்தின் இரக்கமும் பரிதாபமும் கலந்த சோக பாவ முழுவதையும் கேட்க முடியும். இனித் தெய்வத் தலைமகனை பவனி வரும்படியாகச் செய்து அவன் பேரழகைப் பல பெண்களும் அனுபவித்து நெஞ்சம் பறிகொடுத்ததாகவும் கவிதைகளை இயற்றி இருக்கிறார்கள். இதனை "ஊரொடு தோற்றம் உரித்தென மொழிய" என அத்தொல்காப்பியச் சூத்திரம் கூறுகின்றது. இப்படிப் பாடுகின்ற பாடலை உலா என்ற பிரபந்தமாகப் பிற்காலத்தவரால் மாற்றிக் கொள்ளப்பட்டது. இது போக, கலம்பகம் என்ற சிறு காப்பியத்தில் வருகின்ற புயவகுப்பு, அம்மானை, ஊசல், கழுங்கு, திருச்சுண்ணம் முதலிய ஒவ்வொரு துறைகளும் நாயக நாயகி பாவத்தின் பல்வேறு கிளைப்புக்களையும் எடுத்துரைக்கின்ற தனித் தனியான அம்சங்களே ஆகும். ஆகவே, நாயகன் நாயகி பாவத்தில் வருகின்ற கவிதைகளை, இயல்பான நாயக நாயகி பாவம், குழந்தைப் பருவத்தோடு வருகின்ற நாயக நாயகி பாவம் உலா, திருச்சுண்ணம், பூக்கொய்தல் முதலிய வாழ்க்கைத் துறைகளோடு வருகின்ற நாயக நாயகி பாவம் என மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளலாம். இவற்றில் மூன்றுவது சொல்லப்பட்ட இலக்

கணத்திற்கு உதாரணமாக திருப் பூவணிநாதருலா, திருவரங்கக் கலம்பகம் முதலிய பிரபந்தங்களே யும், நாலாயிரப் பிரபந்தம், தேவா ரம், திருவாசகம் முதலியவற்றில் வருகின்ற பலதுறைகளேயும் எடுத் துக் காட்டலாம்.

அடுத்தபடியாக இயல்பாக வரு கின்ற நாயக நாயகி பாவத்திற்கு ஒரு பாடலேப் பார்ப்போம். மாணிக்கவாசகர் நாயகி கோலத் தோடு நின்றுகொண்டு சொல்லு கிருர்.

சூடுவேன் பூங்கொன்றை
    சூடிச் சிவன் திரள் தோள்
கூடுவேன் கூடி
    முயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு
    உருகுவேன் உள்ளுருகி
தேடுவேன் தேடிச்
    சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும்
    மலர்வேன் அனலேந்தி
ஆடுவேன் சேவடியே
    பாடுதுங்காண் அம்மானே.

இந்தப் பாட்டு நாயக நாயகி பாவத்திற்கு ஒரு தெய்வ முத் திரையிட்டு விளங்குகிறது. கண் ணுக்குத் தோன்ருமல் எங்கேயோ மறைந்து கிடக்கின்ற ஒரு அரு பத்தை, உள்ளத்திலே பிறந்து புரண்டு நெளிந்து வருகின்ற ஒரு உறுத்தலேப் பிண்டப் பொருளாக மாற்றி, தன் காதலனுக ஏற்று, தனக்கும் அவனுக்குமுள்ள பாச பந்தத் தொடர்புகளின் சகல கோணங்களேயும் வளேயமாடிவிட் டது இந்தப் பாட்டு. இனிக் குழந் தைத் தன்மையாக வருகின்ற நாயக நாயகி பாவத்தைப் பார்ப் போம்.

ஒரு குழந்தை ஜுரத்தோடு படுத்துக் கிடக்கின்றது. பக்கத்து வீட்டார் 'என்ன என்ன' என்று விசாரிக்கிருர்கள். வெட்கத்தால் வெளியே சொல்ல முடியாத நிலே யில் அக்குழந்தையின் தாய் பதில் சொல்லுவதாக வருகிறது பாட்டு. அவள் சொல்லுகிருள்.

சின்னஞ் சிறிய குட்டி; அறி யாப் பருவத்து மதலே; அவளுக்கு நன்ருய்ப் பேசக்கூடத் தெரியாது. ஆனல் ஊராருடைய அவச் சொல் லிற்கெல்லாம் ஆளாகிவிட்டாள். நோய்க் கொடுமையின் இடை இடையே வருகின்ற புலப்பத்தில் கூட 'திருக்காளத்தி, திருக் காளத்தி' என்று முனகிக்கொள்ளு கிருள்.

பேசும் பரிசரியாள்
    பேதை பிறர்க்கெல்லாம்
ஏசும் பரிசானளே
    பாவம்—மாசுனைநீர்க்
காம்பை அலேத்தாவிக்கும்
    காளத்தி என்றென்று
பூம்பசலே மெய்முழுதும்
    போர்த்து.

(கைலேபாதி காளத்திபாதி அந்தாதி)

(மாசுனே நீர்க்காம்பை அலேத்து ஆவிக்கும்—பெரிய சுனேகளி லிருந்து கும்மாளி போடுகின்ற நீர்த்திவலேகள் மூங்கில் தூருகளேத் தடவிக் கொடுத்து கழுவி விடு கின்ற) குழந்தையினுடைய உடம்பு முழுவதும்பச்சைப் போர்வையைப் போர்த்தி விட்டதைப்போல இருக் கிறதாம், அப்பிக் கிடக்கிற பசலே நிறம்.

இனி இன்னெரு பாடலேப் பார்ப்போம்:

சிற்றம்பலத்திலே உள்ள நடராஜமூர்த்தி ரிஷப வாகன சமே

தராய் ஒரு நாள் பவனிவர அவனை மோகித்து அவனுக்குத்தன்னை ஒப்புவித்துவிட்டது ஒருகுழந்தை. அடுத்த நாட்களில் அவனுடைய வரவைக் காணுமல் புலம்புவதாக வந்துள்ளது பாட்டு.

குழந்தை சொல்லுகிறது, "முன் போல அவனை ரிஷப வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இந்தத் தெருவழியாக வந்தால் என்னகேடு? அல்லது அவனேடு நான் அன்புகொண்டு வாழ்வதிலே இந்த ஊராருக்கு வந்த நட்டமென்ன?" என்று.

ஆனேறு போந்தால்
அழிவுண்டோ அன்புடைய
நானேதான் வாழ்ந்திடினும்
நன்றன்றே—வானேங்கு
வாமாண் பொழில்தில்லை
மன்றைப் பொலிவித்த
கோமானை இத்
தெருவே கொண்டு

(பட்டினத்தார்)

"குழந்தையினுடைய மடமையும் இளமையும் ஆசையோடு சேர்ந்து வெளிப்படுவது பாட்டின் மூலமாக நமக்குத் தெரிகிறது. "அழிவுண்டோ", "நன்றன்றே", என்பவற்றில் வருகின்ற ஓகாரங்கள் இரக்கத்தைத் தாங்க முடியாமல் அலருகின்றன. பாட்டு முழுவதிலும் மழலை உணர்ச்சி பீறிட்டு வருகிறது. காதல் துறைக்கே ஒரு மாடிபோல விளங்குகிறது இப்பாட்டு. இதுவரைக்கும் நாம் பார்த்து வந்த பாடலின் மூலமாக தெய்வத்திற்கும், அடியார்களுக்கும் உள்ள இடைவெளி முழுவதையும் நாயக நாயகி பாவந் தான் நீக்கிவிட்டுக் கேந்திரப் படுத்துகிறது என்பதையும், இந்தப் பாவனையோடு வருகின்ற கவிதைகள்தான் அவனையும் தன்னையும் ஒரு கூட்டு வாழ்க்கையிலே பிணைய விட்டு குறைபாடுகளை போக்கித் தொலைக்க உதவியாய் இருக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டோம். இந்த மாதிரியான நாயக நாயகி பாவத்தோடு வருகின்ற பக்திப்பாடல்கள் தமிழ் மொழி ஒன்றிற்குத்தான் உரியன. இவற்றின் மூலமாகத்தான் இந்த வாழ்க்கையின் பல்வேறு சுவடுகளையும் தொட்டுத் துழாவி வட்டம்போட முடிந்தது என்பதையும் நாம் மீண்டும் மீண்டும் ஞாபகப் படுத்திக் கொள்ளுவோமாக.

## கடைசித் தடவை!

கன்னட தேசத்தில் யென்ட்வால் என்ற ஊரில் ஒரு பையன் காந்திஜியிடம் நெருங்கி, கையெழுத்துக் கேட்டான். பிறகு அவன், "காந்திஜி, தங்களைக் கண்டதுமுதல் என்னில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. தங்களைப் பார்ப்பது எனக்கு இதுதான் கடைசித் தடவை!" என்றுன்.

"ஏன்? நீ என்னை இன்னொரு தடவை பார்ப்பதற்குள் நான் செத்துவிடுவேன் என்று எண்ணுகிருயா?"

பையன் விழித்துவிட்டான். பிறகு "இல்லை. இல்லை. உங்களை ஒரே ஒரு தடவையாவது பார்க்கவேண்டும் என்று கடவுளைக் வேண்டிக் கொண்டேன். அது பலித்து விட்டது" என்றுன்.

"அப்படியானல் இதுதான் முதல் தடவையுமா?" என்ருர் காந்தி.



படம் : பி. ரங்கநாதன், சென்னை

மாட்டுக்கோன் தங்கை மதுரை விட்டுத் தில்லைநகர்
ஆட்டுக் கோனுக்குப் பெண்டாயினாள்........
குட்டிமறிக்க ஒரு கோட்டானையும் பெற்றாள்
கட்டு மணிச் சிற்றிடைச்சி காண்

—( காஞ்சிபுரம் சிற்பம் )



கடவுள்

படம் வி. என். பி. தியாகராஜன், ராமநாதபுரம்

ம

னி

த

ன்



படம்: ஆர். லக்ஷ்மி, டில்லி



இந்தோனேஷ்ய மகாநாட்டுக்கு வந்த சாதி அரேபியப் பிரதிநிதியுடன்
நம் பிரதம மந்திரி பண்டித நேரு



ஹைதராபாத் வானொலி நிலையத்தில் பண்டித நேரு பேசும் காட்சி

ஈமன் நாட்டுப் பிரதிநிதியுடன் பண்டித நேரு





சமீபத்தில் காலமான

ஐ. மா. கவர்னர்

ஸ்ரீமதி சரோஜினி தேவி

திருநெல்வேலி நகர சபைத் தலைவரும் பிரபல எழுத்தாளருமான
ஸ்ரீ ப. ராமசாமி, இந்திய கவர்னர் ஜெனரலும் பிரபல எழுத்தாளருமான
ராஜாஜிக்கு வரவேற்புப் பத்திரப் பேழையை அளிக்கிறார்



சந்தேகவாதிகளாவார்கள். இவர்கள் இக்காலத்திலும் இருக்கின்றனர். பெட்ரண்ட்ரசல் (Betrand Russel) என்ற பேர்போன சாஸ்திரியார் இந்தக் கூட்டத்தை சேர்ந்தவரென்னலாம். சாக்ரட்டீஸின் காலத்திற்குமுன்னர் சோபிஸ்டுகள்என்றவர்கள் இருந்து மக்களை மயக்கி வந்தார்களாம். இவர்களில் சிலரை சாக்ரட்டீஸ் சந்தித்து அவர்கள் கொள்கைகளை கண்டித்ததாக பிளேட்டோ கூறுகின்றார். ஆனால் முதன் முதலாகத் தெளிவான ஒரு பற்றிலாத மார்க்கம் கண்டவர் பிர்ரோ (கி.மு. 360-270) என்பவர். இந்த வாதம் சிலகாலம் பிளேட்டோவின் அகாடமியிலும் (Academy) கையாளப்பட்டு வந்தது. ஆனால் இந்தவாதம் பிளேட்டோவின் முக்கிய கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபாடானது என்று மறுக்கப்பட்டது. எல்லாம் சந்தேகத்திற்கு உட்பட்டதாயிருக்கின்றது. இது உண்மை, இது பொய் என்று நிச்சயமாகச் சொல்ல ஒரு வழியுங் காண்பதில்லை. துணிகரமாக வாதிப்பவர்கள் (Dogmatists) தங்களுடைய அறியாமையைக் காண்பித்து விடுகிறார்கள். இந்தத் துணிகர வாதிகளின் வாயிலாக உலகத்தில் மதப்போர்களும், வாதங்களும் தோன்றி மக்களுடைய வாழ்க்கையை துன்புறுத்துகின்றன. இவற்றை அறவே ஒழிக்கத்தான் வேண்டும். கூடியவரையில் மக்கள் ஒன்றுபட்டு வாழ்தல்வேண்டும். எல்லாமறிந்து விட்டோமென்று கூக்குரலிட்டு வாதப் பிரதிவாதங்களை, சமயச் சண்டைகளை சாஸ்திரக் குப்பைகளை எழுப்பக்கூடாதென்று போதித்து வந்தனர். அனுபவத்தில் கண்ட சிலவற்றை வைத்துக்கொண்டு நடுநிலைமை தாங்கி நம்முடைய காலத்தைக் கழிப்பதே அறிவாளிகளது கொள்கையாகவேண்டும். நம்முடைய புத்தியினால் அறியவொண்ணாதவைகளை விடவேண்டும். கடவுள், சாசுவதமான சத்தியம். இறந்தபின் மனிதன் உயிருடனிருத்தல் இத்தன்மையானவைகளைப்பற்றி யொன்றும் உறுதியாகச் சொல்வதற்கு வழியில்லை. மனிதனுடைய அறிவின் அளவுக்கு எல்லையுண்டு. 'கிட்டாதாயின் வெட்டென மற' என்ற முதியோர் வாக்கைப் பின்பற்றுவதாகச் சொல்லி வந்தனர். கடவுளர்களைப் பார்த்து அவர்கள் வெளிப்படுத்தின சமய உண்மைகளென்று சொல்வது மாயமான ஒரு தந்திரமாகும். மணிமந்திரங்களினால் ஒன்றும் சாதிக்க முடியாது. தர்க்கத்தினாலும் தர்க்கவாத வகைகளினாலும் உலகத்திற்கு முற்பட்டவைகளை உறுதியாக்க முயலுவது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட மோசமாக முடியும் அல்லது ஊமையன் கனவாகவே முடியும். கிறிஸ்து சகாப்தத்தின் துவக்கத்திலே இந்தக் கொள்கைகள் பலவிடங்களில், ரோம் நாடுகளில், பரவிக்கிடந்தன. எம்பிரிகஸ் என்பவர் (கி.பி. 180-210) இக்கொள்கைகளை போதித்து வந்து ஒரு பள்ளியையும் உண்டுபண்ணினர். பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்த பேர்போன சாஸ்திரியாகிய ஹ்யூம் என்பவர் இந்தப்பள்ளியைச்சேர்ந்தவர்.

"மரணத்தை நடித்துக் காட்டுவது வேறு; மரணமடைவது வேறு!" என்ற அரிய ஞானோதயம் பெறுகிறாள் நடிகை லிஸா. இந்த ஞானம் உண்டாவதற்கு அவளுக்கு ஏற்பட்ட அந்தச் சூழ் நிலை என்ன? கதையைப் படியுங்கள். இக்கதாசிரியர் ருஷ்யாக்காரர்.

# நடிகை

ஒ

இலியா இரேன்பர்க்

**போர்** முனைக்குச் செல்ல வேண்டும் என்ற சொல்லைக் கேட்டவுடன் நடிகை லிஸா பெலோகொர்ஸ்காயாவுக்கு ஆனந்தக் கண்ணீர்தான் அரும்பியது. அதைத் தொடர்ந்து அவள் மனசில் சந்தேகங்களும் மண்ட ஆரம்பித்தன. இடிந்து பொடிந்து போன பட்டணச் சீமைகளைப் பற்றியும் களப்பலியான குழந்தைகளைப் பற்றியும் கரகரக்கும் மாலை வானொலியில் யார்தான் ஒரு கற்பனைக் கதாநாயகியின் ஒற்றைக் குரல் நடிப்பைக் கேட்டு ஆனந்திக்கப் பிரியப்படுவார்கள்? ஆகவே லிஸா அன்று தன் டயரியில் "நான் இன்றுதான் வாழ்க்கையில் பிரவேசிக்கிறேன். அதுவும் வாழ்க்கையைச் சுற்றி அந்தகாரம் கவிந்திருக்கும் இந்த அவவேளையில்!" என்று குறித்து வைத்தாள்.

அவளோ அமைதியான ஒரு சிறு நகரத்து மேடையில் இதற்கு முன் நடித்திருக்கிறாள். இப்போதோ அதே நகரத்தின் அமைதி யிழந்ததும், அகதிகள் நிறைந்து நெருங்கி விட்டனர். அவர்களோ நிலையற்ற வாழ்வோடு, நடந்து போனவற்றை மறந்து விட முயன்று கொண்டு, தாம் சுமந்து வந்த உடமைகளைத் தட்டிக் கழித்து விட்டு பாரமற்று வாழ விரும்பினர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் போர் முனையில் யாராவது ஒரு நெருங்கிய பந்து செயலாற்றிக் கொண்டிருந்தனர். அலுத்துக் களைத்துவரும் தபால்காரனின் காலடியோசைஅவர்களுக்கு விதியின் காலடியோசையாகக் கேட்டது. சேனை வாபஸாகிக் கொண்டிருந்தது. நகரக் கட்சிக் கமிட்டிக் கட்டிடத்தின்முன்பாக ஜனங்கள் கூடி, ஒருவர் முகத்தை ஒருவர் பாராமல், யுத்தச் செய்திகளைக் காது கொடுத்து கேட்டனர். வேலைக்காரிகள், எஜமானிகள், சங்கீத வித்யாலய மாணவிகள் எல்லோரும் பரபரப்போடு பாதுகாப்புக் குழிகள் தோண்டிக் கொண்டிருந்தனர்.

நாடகமேடையில் பழைய பந்தாவிலுள்ள சோகநாடகங்களும் யுத்த நாடகங்களும் நடிக்கப்பெற்றன. 'இதெல்லாம் ஏன்' என்று தன்னைத்தானேகேட்டுக்கொண்டாள் லிஸா. நாடக மேடை ஒளிவிளக்குகளின் பிரகாசம், அரிதாரப்பகட்டு, கதாநாயகியின் "நீ என்னைக் காதலித்தால், எனக்கு இந்த உலகமே உன்னுள் அடங்கிவிடும்; பின் மரணமும் கிடையாது..." என்னும் வரிகள்...எல்லாம் அவளுக்குப் பயனற்றதாகத்தோன்றியது; அவளுக்கே அது நாணுணர்ச்சியை ஊட்டியது. தனக்கு ஒய்வு கிடைக்கும் வேளைகளில் லிஸா நாடகத்திற்கு வரும் பொது

ஜனங்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைக் கேட்கச் செவி சாய்த்தாள். அவர்கள் உணவைப்பற்றிப் பேசினர்; காயமடைந்த கணவனைப் பற்றி, உடன்பிறந்தாரைப் பற்றிப் பேசினர்; ஜெர்மானியரைப்பற்றிப் பேசிக்கொண்டனர். பிறகு லிஸா கிழவிகளும் குழந்தைகளுமாக குழுமிக்கிடக்கும் தனது வீட்டின் ஒண்டுக் குடித்தன அறைக்குச் செல்வாள். சென்று தனது டயரியில் "இனிமேலும் நான் பசப்பி வாழ முடியாது!" என்று எழுதி வைப்பாள்.

அவளை நாடக மேடையில் இழுத்துவிட்ட அந்தச் சக்தி எது? இளமையும் நேர்மையும் கொண்ட தன் மனசில் அந்த கேள்விக்கு விடைதேட முயன்றாள் அவள். அதற்குக் காரணம் லட்சிய நோக்கமல்ல — ஆனால், குருட்டுத்தனமான, கலாபூசனைதான் அதற்குக் காரணம் — அப்படித்தான் அவள் கருதினாள். "நன்றாக நடி!" என்று அவளுடைய தாய் சமயங்களில் சொல்லியிருக்கிறாள். ஆனால் லிஸா நடிப்பதில்லை. அவள் அன்னாகரினீனாவாகவும், டர்ஜனீவின் ஆஸ்யாவாகவும், அல்லது சினிமா உலகத்திலிருந்து வந்த குருட்டுப் பூக்காரியாகவும் தன்னையே கருதிக் கொள்வாள். அவள் மனசில் தன்னை உணர்ச்சியற்றதாகவும், தனிமைப் படுத்தப்பட்டதாகவும் தோன்றியது. எனவே, அவளுக்குப் பல இரவுகள் தூக்கமில்லாமலே கழிந்தன. கருநீலக் கண்கள் கொண்ட அந்த நடிகை ஒரு தனிப்பட்ட ஜீவன். அவளுடைய தாய் இறந்து ரொம்ப காலமாய்விட்டது; அவளுடைய சிநேகிதர்களும் அவளை நெருங்குவதில்லை. அவளுக்கு நிலையே கொள்ளவில்லை. யுத்தத்துக்கு முன்னால் புரோனின் என்ற ஒரு இஞ்சினியர் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதா யிருந்தான். அவர்கள் நகரப் பூங்காவனத்தில் சந்தித்தனர். லிஸாவுக்கு அவனைப் பிடித்திருந்தது; அதைவிட, அங்கு சூழ்ந்திருந்த சரத் கால இரவும், மல்லிகை மணமும், இளமையும்தான் அந்தப் பிடிப்புக்குக் காரணம் எனச் சொல்ல வேண்டும். அவன் அவளைக் கரங்களால் வளைத்தான்; ஆனால் அவளோ பிடிகொடுக்காமல் விலகி நின்று, அவர்கள் இருவருக்குள்ள அபிப்பிராய சந்தேகங்களைப் பற்றி அலசிப் பேச ஆரம்பித்து விட்டாள். "கூத்தாடுவதா?..." என்று அவன் எளனமாகச் சிரித்தான். அதன் பிறகு அவர்கள் சந்திக்கவில்லை.

அவள்கூட சமயங்களில் நடிப்பதை வெறுத்திருக்கிறாள். நாடகமேடையையும் ஏசிப் பேசியிருக்கிறாள். எனினும் அவள் நாடகக் கொட்டகைக்குச் சென்று அங்குள்ள குளிர்ந்த காற்றைச் சுவாசித்ததும், அங்கு இருளடைந்து கிடக்கும் காலி நாற்காலிகளை—ரசிக கோடிகளின் ஆசனபீடங்களைக் கண்டதும் அவளுக்கு அதையெல்லாம் விட்டுப் பிரிவதென்பது சிரம சாத்தியமாகி விடும்.

அவளுக்குள்ள திறமையின் காரணமாக அவள் சிறந்ததொரு நடிகையாகலாம் என்றார்கள் சிலர். ஆனால் லிஸாவுக்கோ தன்னிடம் ஏதோ ஒரு குறைபாடு இருப்பதாகவே பட்டது. கதாபாத்திரத்தைப் பற்றி நினைக்க நினைக்க, அவள் கதைப் போக்கு, உபபாத்திரங்கள், பொது ஜனம் முதலியவற்றின் பிரக்ஞையிலிருந்து தவறி எங்கோ வழிதவறிப் போய்விடுவாள். சமயங்களில் நாடகக்காரரையே குறை கூறுவாள். இப்போது அவளால், சென்றுவிட்ட நாளின் உணர்ச்சியாகச் சித்தரிக்கும் ஒரு யுவதியாகவோ அல்லது யுத்தகளத்தில் பிரசங்கமாரி பொழியும் பெண்ணாகவோதான் நடிப்பாள். எனினும் இப்போதோ லிஸாவுக்கு காதல் என்பது ஒருபோதும் இருந்ததில்லை என்ற அபிப்பிராயமும், மரணத்திலும், மரண வேதனையிலும் மத்தியி

ஆவணக்காப்பகம்

விருந்து கொண்டு அந்தமாதிரியான உத்வேகச் சொற்பொழிவாற்றுவதும் முடியாத காரியம் என்றே பட்டது. இப்போதோ உலகில் பல்வகைப் பட்ட வீரர்கள் தோன்றிவிட்டார்கள் — காஸ்டெல்லோவின் வீரச், செயலை நினைத்து லிஸா உடல் புல்லரிக்க வில்லையா? ரோஷியாவோடு அவளும் தூக்குமேடை ஏறவில்லையா? ஆகவே அவள் மேலும் தன் டயரியில் எழுதினாள்: "வாழ்க்கை என்பது அத்தனை மகத்தானதாகி விட்டது—கலைக்குக்கூட அதில் இடமில்லாதவாறு அத்தனை மகத்தானதாகி விட்டது!"

இப்போது அவள் போர்முனைக்குப் புறப்பட இருந்தாள். பிரக்ஞையற்றுப் பிறக்கும் புன்சிரிப்புடன் அவள் நடந்து கொண்டிருந்தாள்: "இது உண்மையாயிருக்குமா? அந்த புனித இதயம் படைத்த அந்த மகா புருஷர்களுக்கு நான் ஒரு கணமேனும் ஆனந்தம் ஊட்ட முடியுமா?"

நடிகர்களெல்லாம் உணர்ச்சிப் பேரலைகளோடு சென்று கொண்டிருந்தனர். ஆனால் சின்னேரத்தில் அவர்களே தாங்கள் படித்தறிந்த யுத்த பயங்கரங்களைத் தம்கண்ணாலேயே கண்டார்கள்; இடிபட்ட வீடுகள், உடைந்து சுவர் பிளந்த மரங்கள்; பனிப்பாறை பிளவுபட்ட கருங்கடவுகள்; சாம்பல் குவியலிடையே புரளும் பெண்கள், பிள்ளைகள்!

அவர்கள் இன்னும் இடிபடாது மிஞ்சியிருந்த குடிசை யொன்றில் இரவைக் கழித்தனர். யுத்தத்தில் அடிபட்ட ஒரு இளம் பெண் தனது ஒளியிழந்த முகத்தின் கண்களை அகலத் திறந்து கொண்டு, ஒரு துக்ககரமான செய்தியைச் சொல்ல ஆரம்பித்தாள். "நான் என் மகனை பனிப்பாறை மறைவில் ஒளித்து வைத்தேன். பிறகு அவன் குளிரால் விறைத்துப் போகக் கூடாதே என்று அவனை வீட்டுக்குள் கொண்டுபோய் கதவைப் பூட்டினேன். அந்த வேளையில் அந்த மிருகம் வந்து விட்டது! எங்களை வெளியே வரச் சொன்னான். நான் வழியை மறித்து அவனை வீட்டுக்குள் செல்ல விடாமல் தடுத்தேன். ஆனால் அவன் அடுப்புப் பக்கம் நெருங்கினான். நெருங்கி என் பையனை அடித்தான். நான் பதைபதைத்து என் மகன் பக்கம் ஓடினேன்; அதற்குள் அவன் நினைவு தப்பிவிட்டான். அன்றிரவே என் மகன் இறந்துவிட்டான்..." அடுப்பிலுள்ள கரியை ஊதும்போது கூட அவள் பொருமிக்கொண்டேயிருந்தாள். லிஸா தனது பிரயாணத்தின் காரண காரியத்தைக் கூட மறந்துவிட்டாள். அந்தத் துக்ககரமான செய்திச் சுருளுக்கு முன்னால், அவளது நடிப்பெல்லாம் மறந்து போய்விட்டது. "இனிமேல் நான் பேசவும் மாட்டேன்; சிரிக்கவும் மாட்டேன்; செய்தால் ஒன்றே ஒன்றுதான். சுட்டுத் தள்ளுவேன்!" என்று அவள் அன்று இரவு முழுவதும் தனக்குத் தானே பேசிக் கொண்டு நித்திரையின்றிக் கழித்தாள். மறுநாள் காலை அவள் சவங்கள், உடைந்து சிதறிய மோட்டார்கள், உருவிழந்த குதிரைகள் இவற்றின் முகத்தில்தான் விழித்தாள். அடிபட்டு விழுந்த மாந்தர்கள் வெட்டவெளியை வெறித்து நோக்கிக் கிடக்க ஸ்ட்ரெச்சரைத் தூக்கிச் செல்லுவதைப் பார்த்தாள். குளிரைப் போக்குவதற்காக தனது கைகளைப் பிசைய முனைகையில் கையுறைகள் குளிரால் விறைப் பெய்திக் கட்டையாய்ப் போயிருப்பதை உணருவதையும் இவள் கண்டாள். உடனே லிஸா பாடகன் பெல்ஸ்கியிடம், "நாம் என் இன்னும் இங்கிருக்கவேண்டும்? இவர்கள் நம்மையும் விரட்டி யடிப்பார்கள்..." என்று சொன்னாள்.

அன்றைய நாடகம் ஒரு பள்ளிக்கூடக் கட்டிடத்திலே ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. அது ஜெர்மனியரால் உபயோகப் படுத்தப்பட்ட

இடம். நடிகர்கள் ஆடையணி புனை யும் அந்த அறையில் துப்பாக்கிகளும், காலி டப்பாக்களும், ஜெர்மன் பத்தி ரிகைகளும் நிரம்பிக் கிடந்தன. லிசா குளிருக்காக அணிந்திருந்த பஞ்சுப் பொதியாடையைக் களைந்துவிட்டு, நீண்ட பட்டு அங்கியை அணிந்து கொண்டாள். உலர்ந்து வெடிபட்ட உதடுகளுக்குச் சாயம் பூசும்போது அவளுடைய கைகள் ஏனோ நடுங்கின. அவளது நெஞ்சில் உறைந்துபோன பயம் ஏதோ ஒரு அர்த்தபாவ நடிப் பின் முத்திரைபோல் முகத்தில் பிரதி பலித்தது. ஜனங்கள் அதை வாய்மூடி மௌனியாய் கவனித்துப் பார்த்தார் கள். அங்கு சாதாரண சிப்பாய்களும் இருந்தனர்; நேற்று அவர்கள் தரைக் கண்ணிகளைத் தேடி பனியின் மீது ஊர்ந்து சென்றவர்கள். இதற்கு முன் னெல்லாம் இல்லாத நடுக்கமும் கூச்ச மும் லிசாவுக்கு எற்பட்டது; எனவே காதலைப் பற்றியும் காதல் தியாகத் தைப் பற்றியும் அவள் மனப்பாடம் தான் ஒப்பிக்க முடிந்தது. ஆனல் மறுகணமே அவள் பார்வையாளர்கள் தனது வாசகத்தைக் கூர்ந்து கேட்ப தையும் புரிந்துகொண்டாள். அவர் கள் கெக்கலி கொட்டினர்கள். அதை யும் அவள் எற்றுக்கொண்டு லேசாகச் சிரித்தாள். ரத்த தானம் பண்ணுபவன் போல, அவள் தன்னிதயத்தையே அவர்களுக்கு அவள் சமர்ப்பணம் செய்துவிட்டாள். பிறகு அவள் நடிகர்களிருக்கும் அறைக்கு வந்தாள். அங்கு பெல்ஸ்கி கேட்ட எதோ ஒரு கேள்விக்கு கதவு நிலையில் சாய்ந்த வாறே "எனக்கு ஒன்றும் தெரியாது. எல்லாம் சரியாய்த்தா னிருக்கும்" என்று நிர்விசாரமாய் பதில் சொன் ஞள்.

பிறகு அவளது நாடகம் விமான நிலயங்களிலும் ஆஸ்பத்திரிகளிலும், வனங்களிலும் நடைபெற்றது. சமயங்களில் அவர்களது நாடகம் அபாய அறிவிப்புச் சங்கின் ஒலத்தால் இடை மறிக்கப்பெறும். குண்டுகள் எப்படி வெடித்துச் சிதறுகின்றன என்பதையும் அவள் உணர்ந்தாள். ஈரப் பசை கொண்ட களிமண் தரை யில் குப்புறப் படுத்துக் கிடப்பது எப்படி என்றும் அவளுக்குத் தெரியும். அவளுடைய இரவுகள் பதுங்கு குழி களில் கழிந்தன. வீட்டிலுள்ள சப்தங் களுக்குப் பழகிப்போனது போலவே துப்பாக்கிகளின் முழக்கத்துக்கும் அவள் பழகிப் போய்விட்டாள்; ஒரு கொழுத்த ஜெனரல் ஆபீஸரோடு அவள் மதுவும் அருந்தி யிருக்கிருள். அவர், அவளிடம் "நானும் ஒரு காலத்தில் ஒரு நாடகப் பைத்தியம் தான்; ஊரிலிருக்கும்போது ஒரு நாடகத்தையும் பார்க்கத் தவறமாட் டேன்" என்பார். சோவியத் யூனிய னின் வீரன் என்ற தாரகைப் பதக்கம் பெற்ற ஒரு இளம் விமானி தன் னம்பிக்கையோடும், வெட்கத்தோடும் அவளிடம் நெருங்கி, "உங்களைப் பார்க்கும்போது எனது முதற் காதல் நினைவுக்கு வருகிறது" என்பான். மே மாசம் பிறந்தது; பலத்த மழை ஆரம்பித்தது; குயில் போதை கொண்டு புரியாத்தனமாய் எங்கி எங்கிக் கூவ ஆரம்பித்தது.

ஒரு நாள் இரவு லிசா மேஜர் டோரோனினுடன் அவளுடைய விடுதிக்குத்திரும்பிக்கொண்டிருந்தாள். யுத்தத்துக்கு முன்னல் டோரோனின் ஒரு ரசாயன மாணவன். அவர்கள் வசந்தத்தைப் பற்றி, டால்ஸ்பியைப் பற்றி ஒவ்வொருவருக்கும் பால்யம் என்று ஒன்று உண்டு என்ற உண்மை யைப் பற்றிப் பேசிக்கொண்டனர்; அவர்கள் பேசக் காரணம், மௌன மாயிருப்பது அவர்களுக்கு பயப் பிராந்தியை ஊட்டியது. ஒருமட்டும் அவர்கள் சம்பாஷணை ஒரு முடிவும் கண்டது.

அவர்கள் சந்தித்து நாலு தினங்கள் தான் ஆயின. டோரோனின் நடிகர் களுக்கு ஜாகை தேடிக் கொடுப்பதில்

ஜரத்தை காட்டினன். அவன் ஆளுக்கு அழகனில்லை யென்றாலும், லிஸா வுக்கு அவனை பிடித்துப் போய் விட்டது. அவளுடைய உணர்ச்சி களை ஒன்று கூட்டிக்கொண்டு, அவள் தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்: "என் அவரை நான் விரும்ப வேண்டும்? அவரை மாதிரி எத்த னையோ பேரை சந்தித்ததில்லையா?" மறுகணம் அவள் தன்னைச் சுதாரித் துக்கொண்டாள்: "அதுவும் உண்மை யல்ல; இவரைப் போன்ற ஒருவரை இதற்கு முன் நான் சந்தித்ததில்லை தான். அவரைப் பார்த்தால் சர்வ சாதாரணமாகத்தான் படுகிறார். அவர் ஒரு நடிகருமல்ல. அவரைப்பற்றிப் பிரமாதமாய் ஒன்றும் சொல்வதற் கில்லை. அந்தத் தீக்ஷண்யக் கண் கள்...? லெர்மண்டோவைப் பற்றி அவர் பேசும் போதும், என்னைப் பார்த்து, "உன்னை லிஸா என்று கூப்பிடுவதில் உனக்குக் கோபம் வாராதே!" என்று கேட்கும்போதும் அவர் பார்த்த அந்தப் பார்வை...? "அப்படியானல் நாளை நீ கிளம்பப் போகிறாயா?" என்று டோரோனின் கேட்டுவிட்டு, அசைவற்று நின்றான். அதன்மேல் லிஸா அவன் தோள்மீது சாய்ந்து அவனை முத்தினாள். கரு நீல வானத்தில் எரி நக்ஷத்திரம்போல் ஒரு மரகத ஒளி எங்கிருந்தோ பாய்ந்து சென்றது.

லிஸா வீடு திரும்பியபொழுது, அவ ளுக்கு எல்லாமே புதிதாகவும் பழக்கமற்றதாகவும் பட்டது. கடை கண்ணிக்குப் போவதைப் பற்றியும், இல்லறைச் சண்டை போடுவதைப் பற்றியும் ஜனங்கள் பேசிக் கொள்வது அவளுக்கு எரிச்சலைத் தந்தது. ஒரு நடிகர் வந்து, "இன்று எந்தச் செய்தி யும் வரவில்லை. ஒரு நகர் கூட பிடி படவில்லை" என்று சொன்னபோது அவளுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "உனக்கென்ன தெரியும்? அங்கானல், மனிதர்கள் உயிரைக் கொடுத்துப்போரிடுகிறார்கள்!" என்று சீறினாள். நாடகக் கொட்டகை உயி ரற்று அமைதியா யிருப்பதுபோலத் தோன்றியது. பொது ஜனங்களுக் கும் உற்சாகம் குன்றியது போலிருந் தது. கெக்கலி கொட்டுவதில் உயி ரில்லை. மங்களம் பாடுவதற்கு முன்ன லேயே அவர்கள் புறப்படத் தயா ரானார்கள். யுத்தகாலப் பார்வை யாளர்களுக்காக அவள் எவ்வளவு ஏங்கினாள்! அவள் மார்பில் ஒரு தாயத்து தொங்கியது; அது ராணுவ நம்பரைக் குறிக்கும் ஒரு தகடுதான். அவளுக்கு இப்போது எழுதப் பிடிக்க வில்லை. எழுத வேண்டியதைக் கண் ணாரப் பார்க்கவே விரும்பினாள். மேலும் அவளுக்கு எழுதுவதற்குக் கூட நேரம் கிடைப்பது அரிது போல் தோன்றியது. "அவர்கள் முன்னேறு கிறார்கள்" என்று அவள் தனக்குள் சொல்லிக்கொண்டாள். ஆகவே தனது உணர்ச்சியை, ஆர்வத்தை டோரோனின் பாதுகாப்பைக் கருதி, அதன் புகை மூட்டத்தைத் தணிக்க எண்ணி ஒரு கடிதம் எழுதினாள். பதில் கடுமையா யில்லை யென்றாலும், கசப்பாக இருந்தது. கோபத்தில் லிஸா அந்தக் கடிதத்தைக் கசக்கி எறிந்தாள். டோரோனின் அதில் எழுதி யிருந்தது இதுதான்; வாழ்க் கையே ஒரு விந்தை யென்றும், அவளை அவன் விரும்பியதற்குக் காரணம், போர்க்களத்தில் சந்தித்ததுதான் என் றும், யுத்தம் முடிந்தால், அவன் அவ ளுக்குச் சர்வ சாதாரணமாகத்தான் தோன்றமுடியுமென்றும், மேலும் அவள் பலவேஷம் போடும் நடிகை தான் என்றும், சுரங்கக் கண்ணியோ, துப்பாக்கிக் குண்டோ குறுக்கிடாத வரையில் யுத்தத்துக்குப் பின் அவன் ஒரு சாதாரண ரசாயன வாதியாகத் தான் இருக்க முடியுமென்றும் குறிப் பிட்டிருந்தான்.

வேதனை கொண்ட தன் இதயத்தி லிருந்து டோரோனின் நினைவைத்

துடைப்பதற்கு அவளுக்குச் சிரம சாத்தியமாயிருந்தது. "அவர் சொல்வதுதான் சரி" என்று அவள் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்: "நான் நடிப்பிலேயே மூழ்கிப்போய் விட்டேன். எனக்கு உண்மைக்கும் கற்பனைக்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விட்டது." மறுகணமே அவள் வேறு மாதிரியாகவும் நினைத்தாள்; என்னை அவர் காதலிக் காததாலேயே அவர் தப்புச் சொல்லுகிறார். இப்போதுதான் எனக்குப் புரிகிறது. "மரணத்தை நடித்துக் காட்டுவது வேறு; மரண மடைவது வேறு!" இப்படியே அவள் ஒரு வார காலமாக மனதை அலட்டி விட்டு கடைசியாக அவனுக்கு ஒரு உருக்கமான கடிதம் எழுதினாள். "நீங்கள் விரும்பினால், நான் நாடகத் துறையிலிருந்து விலகி விடுகிறேன். நான் கலையை இழந்து வாழ முடியும்; ஆனால் உங்களை இழந்து வாழ முடியாது" என்று எழுதினாள். அந்தக் கடிதத்தைத் தபால் பெட்டியில் சேர்க்கும்போது அவள் மனசில் பீதி குடி கொண்டது. "இதோடு உனது கூத்தாட்டம் குடியோட வேண்டியது தான்!" என்று தனக்குதானே அவள் சொல்லிக் கொண்டாள்.

அவள் பதிலுக்காக பல நாள் காத்திருந்தாள். கடைசியாக தபால்காரன் அவள் பயபக்தியோடு எதிர்பார்த்திருந்த அந்தக் கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போனான். அந்தக் கவரின் மேல் இருந்த முத்திரை மூலம் விலாசதார் அந்த யூனிட்டில் இல்லையென உணர்ந்தாள்.

தபால்காரன் மீண்டும் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். அதைப் பிரித்துப் படித்தாள்: "அன்பார்ந்த தோழி, உனக்கு நான் ஒரு துக்கச் செய்தியைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. உனது காதலன் மேஜர் டோரோனின் எங்கள் ஆஸ்பத்திரியில் இறந்து விட்டார். அவரைக் காப்பாற்றுவதற்கு நாங்கள் எவ்வளவோ முயன்றோம்; ஆனால் அவர் பெற்ற காயங்கள் படுமோசமானவை. சாகும்வரை அவர் தைரியமாகவே இருந்தார். அவர் சாகும்போது உனக்கு கடிதம் எழுதும்படியும், தமது கைக் கடிகாரத்தை உனக்கு அனுப்பும் படியும் கேட்டுக்கொண்டார். நானே ஒரு கிழவி; உன் துயரத்தை உன் தாயைப்போல் கருதி வருந்துகிறேன். உன்னை என் நெஞ்சோடு அணைத்து ஆறுதல்கூற உன் பக்கலில் நான் இல்லையே என்றிருக்கிறது!"

லிஸா வீட்டை விட்டு இரண்டு நாளாய் வெளிக் கிளம்பவில்லை. மூன்றும் நாள் அவள் கொட்டகைக்கு வந்து தனக்குப் பிடிக்காத ஒரு பாத்திரத்தை நடித்தாள். லிஸா மாறி விட்டாள். ஆனால் அவள் "நீ என்னைக் காதலித்தால் அதுவே என் உலகம்; மரணம் என்னை அண்டாது!" என்று பாடும்போது பொது மக்கள் மூச்சு விடாமல் கேட்டனர். பிறகு ஒரே அப்ளாஸ்! வழுக்குத்தலை விழுந்த டைரக்டர் அவளைப் பார்த்துச் சொன்னார்: "லிஸா, நீ வளர்ந்துவிட்டாய். நீ சிறந்த நடிகையாகி விட்டாய்," என்று சொன்னார். அவள் "போதுமே" என்று லேசாக முனகினாள். அவள் வீட்டுக்குச் சென்று அந்த ஆஸ்பத்திரிக் கிழவி எழுதிய கடிதத்தை மீண்டும் மீண்டும் படித்தாள்: "என் காதலன் என்று தன்னைப்பற்றி அவர் கூறியிருக்கிறார்" என்று அவள் பெருமிதப்பட்டாள். அவள் டோரோனின் கடிகாரத்தைப் பார்த்தாள். அதன் முள் மெதுமெதுவாக சென்று கொண்டிருந்தது. திடீரென அவள் மனசில் ஒரு எண்ணம் உதித்தது: "நாடகமாடுவது தான் எனக்கு விதித்தது போலும்!" என்று நினைத்துக்கொண்டாள்.

டால்ஸ்டாய் தலைசிறந்த இலக்கிய கர்த்தர்களில் ஒருவர். சிறந்த நாவலாசிரியர். அவருக்கு அறிமுகம் தேவையில்லை. எனினும் அவரைப் பற்றிய சில அருமையான குறிப்புகளைத் தந்திருக்கிறது இந்தியாவிலுள்ள ருஷ்ய ஸ்தானிகாலயப் பத்திரிகையான "டாஸ்"

# டால்ஸ்டாயின் 120-ம் பிறப்பு விழா

○

"டாஸ்"

**1948,** செப்டம்பர் 9-ம் தேதியுடன் லியோ டால்ஸ்டாய் பிறந்து 120 ஆண்டுகள் ஆகின்றன.

அவருடைய எழுத்துக்கள் உலக இலக்கியங்களில் முன் வரிசையில் இருக்கின்றன என்று லெனின் அவரைப் பற்றி புகழ்ந்து கூறியிருக்கிறார். அந்த ருஷ்யப் பேரறிஞரின் திருநாமத்தை ருஷ்ய மக்கள் போற்றிக் கௌரவிக்கின்றனர். சோவியத் ஆட்சி ஏற்பட்டபின், அவருடைய நூல்கள் 67 பாஷைகளில் 2,91,77,000 (ஏறக்குறைய 3 கோடி) பிரதிகள் பிரசுரிக்கப் பட்டுள்ளன. அதாவது கடந்த 30 ஆண்டுகளில் வருடம் ஒன்றிற்கு சராசரி 9,72,600 (சுமார் 10 லட்சம்) நூல்களை சோவியத் யூனியனில் வெளியிட்டிருக்கிறார்கள். "யுத்தமும் சமாதானமும்" என்ற அவருடைய நாவல் 25 பதிப்புகளில் மொத்தம் 19,46,000 பிரதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. "அன்னா கரீனா" இருபது பதிப்புகளில் 9,17,000 பிரதிகளாக வெளியிடப் பட்டுள்ளன.

டால்ஸ்டாயின் நூல்களை ஆராய்ச்சி செய்து சோவியத் அறிஞர்கள் வெளியிட்டுள்ள 70 புத்தகங்கள் 12,50,000 பிரதிகளுக்கு மேல் செலவாகியுள்ளன. அவருடைய நாடகங்களும் நாடகமாக்கப்பட்ட கதைகளும் சோவியத் நாடக மேடைகளில் நடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் "அன்னா கரீனா"வும், "உயர் வாழ்வும் பிரேதமும்" மிகவும் பிரசித்தி பெற்றவை. சிறிது காலமாக "புனர் ஜென்மம்" என்ற அவரது நூல் நாடக சபையாரால் நடத்திக் காட்டப் பட்டது.

டால்ஸ்டாயுடன் சம்பந்தப்பட்டிருந்த எல்லா இடங்களும் தேசத்தின் பொதுச் சொத்தாக்கப்பட்டுள்ளன. அவர் உபயோகித்த எல்லா வஸ்துக்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சோவியத் நாட்டில் ஐந்து டால்ஸ்டாய் காட்சி சாலைகள் உள்ளன. இந்த இலக்கியப் பொருட்காட்சி சாலைகளில் ஒன்று மாஸ்கோ நகரின் முக்கியமான ஒரு தெருவில் உள்ளது. கடந்த ஏழு மாதங்களில் அதை 14,764 பேர் பார்வையிட்டுள்ளனர்.




# நாடுகளின் ஐசுவரியம் ஐ.நா. அமெரிக்கா

கி. பி. 1783ம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஐக்கியப்பட்ட சுதந்திர நாடாக ஆயிற்று. ஒன்றரை நூற்றாண்டுகளுக்குள்ளாக அமெரிக்கா ஒரு ஐசுவரிய மிக்க பலம் பொருந்திய நாடாக வளர்ந்து விட்டது. இன்று அந்நாட்டின் எப்பாகத்திலும் ரயில்பாதைகள், ரஸ்தாக்கள், தந்தி, டெலிபோன் வசதிகள் மலிந்து விட்டன நவீன விஞ்ஞான வசதிகொண்டு எவ்வளவு முன்னேற முடியுமோ அவ்வளவு முன்னேற்றத்தையும் அடைந்து விட்டன அமெரிக்க மாபெரும் நகரங்கள்.

அமெரிக்க ஐசுவரியத்துக்கு காரணமென்ன? மக்களின் சேவைக்கு இயற்கை அளிக்கும் வசதிகளை பயன்படுத்திக் கொண்டதுதான். இந்தியாவிலும் பயன் படுத்திக்கொள்ள ஏராளமான இயற்கை வசதிகள் உள்ளன. ஆனால் ஒரு நாட்டை நிர்மாணம் செய்ய பணம் தேவை. உங்களுடைய அதிகப்படி வருமானத்தையெல்லாம் சர்க்கார் பத்திரங்களில் முதலிடுவதின் மூலம் நீங்களும் உங்கள் நாடு வளம்பெற உதவி புரியலாம்.

நாடுகளின் ஐசுவரியம் அவற்றின் மக்கள் தங்களுடைய சேமிப்புகளை சிறந்த வழியில் முதலிடுவதின் மூலம்தான் பெருகுகிறது என்பதை ஞாபகத்திலிருங்கள். உங்களுடைய வயது காலத்தில் உங்கள் சேமிப்புகள் உபயோகப்படும். மிச்சப்படுத்திய பணத்தை சிறந்த வழியில் முதலிட்டால் மூலதனத்துக்கும் கேடு வராது, நல்ல வட்டியும் கிடைக்கும்

விவேகத்துடன் முதலிட்டு உங்கள் சேமிப்பைச் சேர்த்து வையுங்கள்.

நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளில் முதலீடு செய்யுங்கள். உரிய காலத்தில் முறையே 3%, 3 1/2%, 4 1/6% வட்டி தரக்கூடிய ஐந்து, ஏழு பன்னிரண்டு வருஷ செலாவணியுள்ள ஸர்டிபிகேட்டுகள் கிடைக்கும்.

மற்ற சர்க்கார் பத்திரங்கள், தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் டிபாஸிட்கள், இன்ஷூரன்ஸ், கோவாபரேடிவ் ஸொஸைடி முதலியவைகளில் முதலிடுங்கள்

நாளைக்காக இன்றே சேமியுங்கள்

உங்கள் சேமிப்பை யெல்லாம் சிறந்த முறையில் முதலிடுங்கள்

இந்திய சர்க்கார் நிதி மந்திரி இலாகாவால் வெளியிடப்பட்டது.

AC 417 TM.





# சக்தி ★ மாதப் பத்திரிகை

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி 'தபால்' | 0 8 | ஒரு வருஷம் | 6 0 |
| ஆறு மாதம் | 3 8 | 2 வருஷம் | 11 0 |

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

### பர்மா

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி | 0 9 | ஆறு மாதம் | 4 0 |
| ஒரு வருஷம் | 7 0 | 2 வருஷம் | 13 0 |

### மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி | 0 10 | ஒரு வருஷம் | 8 0 |
| ஆறு மாதம் | 4 8 | 2 வருஷம் | 15 0 |

## சக்தி காரியாலயம்
சென்னை 14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத்தொகை அனுப்பவேண்டும்

டால்ஸ்டாயின் இலக்கியத்தைப் பற்றி இக்காட்சி சாலைகளில் ஆராய்ச்சி நடந்து வருகிறது. 40 ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட மாஸ்கோ நகரின் டால்ஸ்டாய் இலக்கியக் காட்சி சாலையினர் இவ் வாராய்ச்சிகளை வெளியிட்டுள்ளனர். டால்ஸ்டாய் வசித்த இடமான யாஸ்னுயா பால்யானுவைப் பற்றி சில நூல்கள் வெளிவந்துள்ளன. டால்ஸ்டாயின் வாழ்க்கைச் சரிதம் பற்றி இரண்டு நூல்கள் விரைவில் வெளிவரும்.

மாஸ்கோ நகருக்கு விஜயம் செய்யும் போது டால்ஸ்டாய் வழக்கம் போல் தங்கியிருக்கும் வீடு இருந்த தெருவான "காமா வொஞேவ்கி" என்பதற்கு இன்று டால்ஸ்டாயின் பெயர் சூட்டப் பெற்றுள்ளது. அந்த வீடு காட்சிசாலையாக வைக்கப் பட்டுள்ளது.

யாஸ்னுயா பால்யானு மாஸ்கோ நகருக்கு வடக்கே சுமார் 126 மைல் தூரத்தில் உள்ளது. இந்த ஊரில் தான் டால்ஸ்டாய் பிறந்து, வளர்ந்து, தம் வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்தார். அவருடைய அரிய நூல்கள் யாவும் இந்த ஊரிலிருந்தே எழுதப்பட்டன. இங்குள்ள அவருடைய வீடு பொருட்காட்சி சாலையாக இலங்குகிறது.

1941-ல் ஜெர்மானியர் படை எடுத்து வந்தபோது யாஸ்னுயா பால்யானுவில் பல அட்டூழியங்களைப் புரிந்தனர். டால்ஸ்டாயின் வீடும், அங்குள்ள போட்டோக்களும் சூறையாடப் பட்டன. 29,000 நூல்கள் கொண்ட நிலையம் ஏற்கெனவே அப்புறப் படுத்தப்பட்டிருந்ததினுல் அது ஜெர்மானியப் பாஸிஸ்டுகளின் அட்டூழியங்களினின்றும் தப்பிவிட்டது. இப்போது யாஸ்னுயா பால்யானு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர் அஸ்டபோவோ என்று அழைக்கப்பட்ட ரயில்வே ஸ்டேஷன் ஒன்றுக்கு டால்ஸ்டாயின் பெயர் சூட்டப் பெற்றிருக்கிறது. அங்கு ஒரு காட்சிச் சாலையும் அமைக்கப்பட்டுள்ளது. அது மாஸ்கோ பக்கத்தில் இருக்கிறது. டால்ஸ்டாய் 1910 நவம்பரில் அந்த ஸ்டேஷனில் அப்போது ஸ்டேஷன் மாஸ்டராய் இருந்தவரின் வீட்டில்தான் காலமானுர்.

டால்ஸ்டாயின் 120-வது பிறப்பு விழா சோவியத் யூனியனில் கொண்டாடப்பட்டது. "டால்ஸ்டாய் வாசகங்கள்" என்ற வரிசையில் பல சொற்பொழிவுகள் நடைபெற்றன.

## பொய்ப் புகழ்

(நபியே!) எவர்கள், தாங்கள் செய்த (அற்ப) காரியத்தைப்பற்றி மகிழ்ச்சிகொண்டு, தாம் செய்யாத (நன்மையான) காரியங்களைப்பற்றியும் (தாம் செய்ததாக, ஜனங்கள்) தம்மைப் புகழ்வதை விரும்புகின்ருர்களோ, அவர்கள் வேதனையிலிருந்து தப்பித்துக்கொள்வார்களென்று நிச்சயமாக ஒருகாலமும், நீர் எண்ணவேண்டாம். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு.

—குர் ஆன்

வியாதிகளில் கொடியதான ஸிபிலிஸ் என்னும் மேகநோயின் மூலம்,வளர்ச்சி முதலியனவற்றை சரித்திரக் கண்ணோடும், வைத்திய அனுபவத்தோடும் விளக்கியிருக்கிறார், இந்தக் கட்டுரையாசிரியை.

# சரித்திரமும் நோயும்

o

"லக்ஷ்மி"

ஐரோப்பிய சரித்திரத்தில் பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் நவீன கால உதயம் ஏற்பட்டது என்று வர்ணிக்கின்றனர் ஆசிரியர்கள். 1453-வது வருஷம் கான்ஸ்டான்டி நோபில் துருக்கியர்விடமாகிவிடவே அங்கு வசித்த அறிஞர்கள் பலர் தமது நல்ல நூல்களுடன் வேறு நாடுகளுக்கு ஓடி வாழத் தலைப்பட்டனர். அதனால் வான சாஸ்திரம், விஞ்ஞானம், பூகோள சாஸ்திரம், சித்திரம், ஓவியம் முதலிய பல சாஸ்திரங்களும் மறு மலர்ச்சியுடன் புது மாறுதல்களுடன் இதாலி, கிரீஸ், இங்கிலாந்து, ஐரோப்பாவின் மற்ற பாகங்கள் எல்லாவற்றிலும் பரவ ஆரம்பித்தன. பதினைந்தாவது நூற்றாண்டிலே ஐரோப்பிய வல்லரசுகள் இந்த புதுக் கல்வி மறு மலர்ச்சியை உபயோகித்து கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளில் தங்கள் நாடுகள் முன்னேறச் செய்வதில் ஊக்கங்காட்டினர். இதன் விளைவாக மாலுமிகளுக்கு புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று ஆவல் தோன்றியது. இந்த ஆவலின் அவதாரமாக இரண்டு பிரசித்தி பெற்ற மாலுமிகள் தோன்றினார்கள். அவர்கள்தான் கிரிஸ்டோபர் கொலம்பஸ் என்பவரும், வாஸ்கோடிகாமா என்பவரும் ஆவார்கள்.

ஜினோவா என்னும் ஊரில் நெசவுத் தொழிலாளரின் மகனாகப் பிறந்த கிரிஸ்டோபர் கொலம்பஸ் என்பவர் மிகவும் ஊக்கத்தினாலும் முயற்சியினாலும் கணிதமும் பூகோளமும் பயின்று போர்த்துகல் தேசத்து மாலுமி ஒருவனின் மகளை மணந்து கப்பலோட்டும் தொழிலை மேற்கொண்டார்.மேற்கு முகமாக கடலில் பிரயாணம் செய்தால் இந்தியாவைக்கண்டு பிடித்து விடலாம் என்ற ஒரு ஆசை இவரது மனத்தை அரித்துக்கொண்டிருக்கவே தமக்குபோதுமான சௌகரியமும் செல்வமும் அளித்தால் மாபெரும் கண்ட மொன்றைக் கண்டு பிடித்து கொடுப்பதாக நாடெங்கும் பிரபுக்களை அணுகி உதவி கேட்டார். ஒருவரும் இவரது எண்ணத்திற்கு செவிசாய்க்கவில்லை. பொருள் இல்லாத குறையால் ஆசையை நிறைவேற்ற முடியாது மனமுடைந்து இருந்த கொலம்பஸிற்கு ஸ்பெயின் தேசத்தை அப்பொழுது ஆண்டு கொண்டிருந்த பெர்டினண்டும் அரசி இஸெபெல்லாவும் உதவி செய்ய முன்வந்தார்கள். அதன்படி

1492-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மூன்றுந்தேதி அவர் மூன்று சிறு கப்பல்களுடனும் 88 மாலுமிகளுடனும் தம் கடல் யாத்திரையைத் தொடங்கினர்.

பல விதமான இன்னல்களை அனுபவித்த அந்த கோஷ்டியினர் 1492-ம் வருஷம் அக்டோபர் மாதம் 12-ம் தேதி அமெரிக்கா தேசத் தரையில் இறங்கி ஸ்பானிய அரசர் பெயரால் அந்நாட்டைக் கைப்பற்றினர். தாம் வந்த நாடு இந்தியா என அவர் நினைத்தார். ஆனல் பிற்பாடு அது வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள தீவுக் கூட்டங்கள் என விளங்கியது. இவைகளுக்கு மேற்கிந்தியத் தீவுகள் எனப் பெயர் ஏற்பட்டது.

போர்த்துகல் தேசத்தில் பிறந்தவர் வாஸ்கோடிகாமா என்பவர். இவர் 1947ம்-வருஷம் ஜூலைமாதம் 9-ந்தேதி தமது மகத்தான யாத்திரையை செய்யத் தொடங்கி பலவித கஷ்டங்களுக்குப் பின்பு புறப்பட்ட பத்தாவது மாதத்தில், மலேபாளக் கடற்கரையில் கள்ளிக் கோட்டை என்ற இந்தியத் துறைமுகத்தை அடைந்தார். காமாவின் யாத்திரைக்குப் பின்புதான் மேல்நாட்டார் கீழ் நாடுகளுக்கு அதிகமாகச் செல்லலாயினர்கள். இந்தியா ஆங்கிலேயர் வசமாக வழிகாட்டியவர் காமா என்றால் மிகையில்லை.

பதினைந்தாவது நூற்றாண்டு சரித்திரத்தில் எத்தனை பிரசித்தி பெற்றதோ அத்தனை வைத்தியசரித்திரத்திலும் பிரசித்தி பெற்றதாக விளங்குகின்றது. நாகரிகத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இன்று நாம் எதிர்நோக்கி நிற்கும் அமெரிக்கா என்னும் நாகரிக தேசம் உலக முழுவதும் கொடியநோய் ஒன்றைப் பதினைந்தாம் நூற்றாண்டில் பரப்பிய கைங்கரியத்தை ஏற்று நிற்கின்றது என்றால் மிகையில்லை. நாகரிகமும், புதுக்கல்வி மறுமலர்ச்சியும் உலக முழுவதும் எப்படிப் பரவியதோ அதேபோன்று ஒரு கொடிய நோய் உலக முழுவதும் பதினைந்தாம் நூற்றாண்டில் பரவியது. அதைப் பரப்பும் புண்ணியத்தை ஏற்றுக் கொண்டவர்கள் சரித்திரப் பிரசித்திபெற்ற கொலம்பஸ், வாஸ்கோடிகாமா என்னும் மாலுமிகள்.

பதினைந்தாம் நூற்றாண்டில் பரவ ஆரம்பித்து இன்றுவரை நாகரிக மனிதனை விடாது பின்பற்றி ஓடிவரும் இந்த நோய்க்குப் பெயர் ஸிபிலிஸ் என்பதாகும். ஆண் பெண் இருபாலரையும், தவறான வாழ்க்கை நடத்துவதினால் பாதிக்கும் இந்த நோயை மேக நோய் என அழைக்கின்றார்கள். மேற்கிந்தியத் தீவுகளை கொலம்பஸ் கண்டுபிடிக்கும் காலம் வரை இந்த மாதிரியானதொரு நோயை ஐரோப்பிய நாட்டிலும் சரி மற்ற எந்த நாட்டிலும் வைத்தியர்கள் கண்டதேயில்லை. கேப்ரீல் பெல்லோடியஸ் என்னும் உடற்கூறு சாஸ்திரப் பேறிஞர் இவ்வியாதியின் தொடக்கத்தைப் பற்றி எழுதியுள்ளார். 'கிரிஸ்டோபர் கொலம்பஸ் என்னும் அதிபுத்திசாலியான ஓர் மாலுமி துணிவுடன் செய்த கடற் பிரயாணத்தின் முடிவில் மேற்கு இந்தியத் தீவுகளில் வந்து இறங்கினன். அங்கே தங்கம் நிறைந்து கிடந்தது. முத்துக்களும் நிறைந்து

கிடந்தன. இந்தச் செல்வங்களை அள்ளிக்கொண்டு அவனும் மாலுமிகளும் திரும்பி வந்தார்கள். தங்கம் முத்து போன்ற செல்வத்தின் நடுவில் ரோஜாவில் முள் இருப்பது போன்று கொலம்பஸ் தனது கப்பலை ஒரு புது நோயாலும் நிரப்பிக்கொண்டு வந்தான். 'இந் நோய் அட்டையைப் போன்று மனிதனது தேகத்தில் ஒட்டிக் கொண்டு மெதுவாக மனிதனது ஆயுளை உறிஞ்சி முடிவில் அவனைச் சின்னபின்னப் படுத்துகின்றது' என்று குறித்திருக்கிறார்.

ஹாய்டி, எஸ்பானேலா முதலிய மேற்கிந்தியத் தீவுகளில் வசித்த புராதன ஜாதி ஆண் பெண்ணிடம் ஸ்டாலிஸ் என்ற ஓர் வித நோய் இருந்தது அங்கு வந்து இறங்கிய கொலம்பஸின் மாலுமிகள் அங்கு வசித்த சிவப்பு இந்தியப் பெண்களுடன் கொஞ்ச நாட்கள் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினர். இதன் விளைவாக ஒவ்வொருவரும் இந் நோயால் பீடிக்கப்பட்டு இந் நோயைத் திரும்பிச் செல்லும்பொழுது தம்முடன் ஐரோப்பாவிற்குள் எடுத்துச் சென்றனர். இதற்குப் பின்பு தேச முழுவதும் இந் நோய் எப்படிப் பரவியதுஎன்று பார்ப்போம். 1493-ம்வருஷம்பிரான்ஸ்தேசத்து எட்டாவது சார்லஸ் என்பவன் மெயின் கோமகன் இறந்ததும் நேபிள் தனக்குச் சொந்தமென வாதாடினான். நேபிள் மக்கள் அதை ஆட்சேபிக்கவே எட்டாவது சார்லஸ் ஒரு படை திரட்டி 1494-ல் இதாலிக்குள் நுழைந்து நேபிளைப் பிடித்துக்கொண்டான். கொஞ்ச நாட்கள் கழித்து கில்பர்ட் என்னும் கோமகனிடம் நாட்டை சில சிப்பாய்களுடன் ஒப்படைத்து விட்டு தன் நாட்டிற்கு திரும்பி விட்டான். அந்த சமயம் பெர்டிஞண்ட் என்னும் ஸ்பெயின் மன்னன் சார்லஸுடன் செய்த உடன்படிக்கையை ரத்து செய்து விட்டான். நேபிளைத் தான் கை பற்றிக்கொள்ள ஒரு படையை அனுப்பினான். இந்தப் படையில் கொலம்பஸுடன் சென்ற மாலுமிகளில் பலர் இருந்தனர்.

ஸ்பானியரிடமிருந்து இந்த நோய் நேபிள் நகரத்து விபசாரப் பெண்களுக்குப் பரவியது. பிரஞ்சுக்காரர்களும் ஸ்பானியர்களும் இந்தச் சண்டையில் பிடித்த ஊர்களையே மாறி மாறி பிடித்துக் கொண்டிருந்தனர். இதற்குள் நேபிள் நகரத்து விலை மாதர்கள் ஸ்பானியர்கள் வாயிலாக அடைந்த நோயை பிரஞ்சு சிப்பாய்களுக்கும் அளித்தார்கள்.

1496-ல் கில்பர்ட் கோமகன் இறந்துவிட்டான். அவன் கீழ் இருந்த படை சிதறிப் போயின. மிஞ்சியிருந்த சிப்பாய்கள் தங்கள் தாய் நாட்டிற்குத் திரும்பினார்கள். அவர்கள் தாங்கள் திரும்பிச் சென்ற யாத்திரை மார்க்கத்தை சரியாகக் குறிப்பிட்டு காட்டுகின்றவர்கள் போன்று இந் நோயை பல பாகங்களிலும் பரப்பிச் சென்றனர். பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்விட்சர்லாண்ட், ஹாலந்து, கிரீஸ் முதலிய நாடுகளில் இந் நோய் 1496-ல் தீவிரமாகப் பரவிவிட்டது. 1497-ல் ஸ்காட்லாண்டில் தலை காட்ட ஆரம்பித்தது. 1499-ல் ருஷ்யா, ஹங்கேரி முதலிய நாடு

களில் இந் நோய் தோன்ற ஆரம்பித்தது.

உலகத்தின் மற்ற பாகங்களில் இதைப் பரப்பும் தொண்டு வாஸ்கோடிகாமாவிற்கு வந்துசேர்ந்தது. 1498-ம் வருஷம் இவர் இந்நோயை தமது கப்பலில் இந்தியாவிற்கு ஏற்றிக்கொண்டு வந்தார். 1505-ல் ஐரோப்பியர் கால் வைத்ததினால் சீனாவில் இந் நோய் பரவியது. பிறகு அங்கிருந்து 1506-ல் ஜப்பானுக்குள் புகுந்தது இந்த நோய்.

அதே வருஷம் ஸ்பெயினிலிருந்து விரட்டி யடிக்கப்பட்ட யூதர்களும் மகம்மதியர்களும் இந்நோயை ஆப்பிரிக்காவிற்கு எடுத்துக்கொண்டோடினார்கள். குறுகிய காலத்தில் உலக முழுவதும் தீயைப் போன்று பரவிவிட்ட பெருமை ஸிபிலிசைத் தவிர வேறு எந்த வியாதிக்கும் கிடையாது. எஸ்பானோலா என்னும் மேற்கிந்திய தீவின் புராதன மக்கள் அளித்த இந்த வரப்பிரசாதம் நவயுக மனிதனின் மானக் கேடாக வாய்த்துள்ளது. நாகரிகம் முன்னேறுவதைப் போல் இந்நோயும் தடுக்கமுடியாது முன்னேறிக்கொண் டிருக்கிறது.

பஞ்சில் பட்ட நெருப்புப் போல் பரவிச் சென்ற இந்நோயை தடுக்க மக்கள் பலவிதத்திலும் கஷ்டம் எடுத்துக் கொண்டனர். நோய் எதனால் பரவுகின்றது, எப்படி வருகிறது என்ற உண்மை தெரியாததினால் முதலில் இதை அடக்கவே முடியவில்லை.

இந்நோய் ஒருவருடன் ஒருவர் பேசினால் தொத்திக் கொள்ளும் நோய் என்ற ஒரு தப்பான கொள்கை முதலில் மக்களிடையே பரவி இருந்தது. ஆகவே 1499-ல் பாரிஸ் பார்லிமெண்ட் ஒரு சட்டம் கொண்டு வந்தது. இந்நோயினால் பீடிக்கப்பட்ட ஜனங்கள் மற்றவர்களுடன் வார்த்தையாடினாலும் மரணதண்டனையடைவார்கள் என்பது அச்சட்டத்தின் சாரம்சம். இதைத் தவிர செயிண்ட் ஜெர்மெயின்என்னுமிடத்தில் நோயாளிகள் என ஊகிக்கப் பட்ட எல்லோரையும் ஒருமிக்க சேர்ந்து வசிக்கும்படி கூறி சட்டபூர்வமாக கட்டுப் படுத்தவும் செய்தனர். இப்படி ஒருங்கு சேர்க்கப்பட்ட நோயாளிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட இலவச விடுதிகளின் ஒழுங்கு முறைகளை அனுசரித்து நடக்க மறுத்து புரட்சி செய்தனர். ஒழுங்குமுறை தவறி நடப்பவர்களை நதியில் தூக்கியெறியப்படும் என்ற மற்றொரு பயமுறுத்தல் சட்டம் அமுலுக்கு வந்தது.

கொஞ்ச நாட்களில் பிரஞ்சு மக்களுக்கு உண்மை புரிந்துவிட்டது. பேசினாலும், ஒருவரை ஒருவர் பார்த்தாலும், ஒருவர் தொட்ட பாத்திரங்களை மற்றவர் தொட்டாலும் இந்நோய் பற்றிக் கொள்ளாது என்பதுதான் அந்த உண்மை. ஸ்திரீ புருஷ சேர்க்கை ஒன்றினால்தான் இந்நோய் பரவுகின்றது என்ற உண்மையைத் தெரிந்து மேற்கண்ட சட்டங்களை ரத்து செய்தனர். ஐரோப்பாவிற்குள் நுழைந்த இப்புது நோய்க்கு நாமகரணம் செய்ய பல நாட்டவர்களும் முன்வந்தார்கள். ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டிற்கு அழைக்காது நுழைந்த இந்த நோயிற்கு இன்னொரு நாட்டின் பெயரை வைத்து அழைத்து வஞ்

சும் தீர்த்துக்கொண்டது. ஸ்பெயி னில் இதற்கு 'எஸ்பனேலா' நோய் என்று பெயர் கொடுக்கப் பட்டது. இதாலியர்கள் இதை பிரஞ்சு நோய் என்று குறிப் பிட்டார்கள். ருஷ்யா இதைப் போலந்து வியாதி என அழைத் தது. இந்தியர்களும் ஜப்பானியர் களும் போர்த்துகீஸியர் நோய் என அழைத்தனர். இப்படி பல நாடுகளும் பல பெயரில் வழங்கிய நோய்க்கு கடைசியில் உலக முழு வதும் ஒரே பெயரால் அழைக்க உதவி செய்தவர் பிரகாஸ்டிகோ என்னும்வைத்தியர்.இவர்வைத்திய ரோடு அல்லாமல் ஒரு கவியும்கூட. 1530-ம் வருஷம் வெனிஸ் நகரத் தில் தாம் எழுதிய ஒரு கவிதை யைப் பிரசுரித்தார். அந்தக் கவி தையின் கதாநாயகன் 'ஸிபிலிஸ்' என்னும் ஆட்டிடையன். நோயின் ஆரம்பமும், அதன் லீலைகளும் அக்கவிதையில் வர்ணிக்கப்பட்டி ருந்தன. அது வெளியானதும் பிரகாஸ்டிரோவின் பெயர் இன்று வரை அவரது கதாநாயகன் பெயர் மூலம் உலகில் நிலைத்து நின்று விட்டது. பலநாடுகளின் பெய ரைத் தாங்கித் திரிந்துகொண்டி ருந்த இந்த நோய் 'ஸிபிலிஸ்' என்ற பெயரால் இன்றுவரை அழைக்கப்படுகின்றது.

ஐரோப்பாவில் ஸிபிலிஸ் நுழைந்த சமயத்தில் மக்களின் வாழ்க்கை மிகவும் கடுமையான நியதிகள்கொண்டதாக இல்லாது, அதிகச்சுதந்திரமுள்ளதாக இருந்த தினுல், வியாதி வேகமாகப் பரவ அனுகூலமாக இருந்தது என்பது ஆராய்ச்சியாளரின் அபிப்ராயம். பதினேழாம் நூற்றாண்டு வரை இந்த நோய் உள்ளவனின் கௌர வமும் அந்தஸ்தும் நோயினுல் சிறி தும் பாதிக்கப்படவில்லை. ஸிபி லிஸை வாழ்க்கையில் ஒரு தடவை அடைந்திராத மனிதன் ஆண்மை யற்றவன் எனக் கருதப்பட்டா னும்! 17-ம் நூற்றாண்டில் இம் மூடக் கொள்கை மறையத் தலைப் பட்டது. இந்த நோய் ஏழைக்கும் பணக்காரனுக்கும் சமமாகப் பரவி வந்ததினுல் அநேக அரசர்களும், ராணிகளும் நோயினுல் பீடிக்கப் பட்டிருந்தார்கள் என்று வைத்திய சாஸ்திரத்தில் ஆதாரம் உள்ளது. பிரான்ஸ் தேசத்து மூன்றுவது ஹென்றி, பதினுன்காவது லூயீ, ஐந்தாவது சார்லஸ், மெயின் கோமகன், ருஷ்யாவின் கொடூர மிக்க ஐவான் என்னும் மன்னன், இங்கிலாந்தின் எட்டாவது ஹென்றி, டியூடர் வமிசத்து கொடுமை மிகுந்த மேரி அரசி முதலிய ராஜ குடும்பத்தினர் தாங் கள் வாழ்ந்த விபரீத வாழ்க்கை யினுல் இந்நோயில் பீடிக்கப்பட் டிருந்தார்கள் என சரித்திர ஆரா ய்ச்சி கூறுகின்றது.

வியாதி எப்படி ஏற்படுகின்றது என்ற ரகசியம் தெரிந்ததும் எத னுல் ஏற்படுகின்றது என்ற உண்மை பலகாலம் தெரியாதிருந் தது.ஓர்வித நூலாடை அணிந்தால் ஏற்படுகிறது என சிலர் எண்ணி னர்கள். ஓர்வித விஷத்தினுல் ஏற் படுகிறது என்று சிலர் அபிப் ராயப் பட்டார்கள். அநேகர் குஷ்டரோகத்தையும் ஸிபிலிஸை யும் ஒரே நோய் எனத் தவருக எண்ணிக்கொண்டார்கள்.பல்லியை உணவாக உண்ணுவதினுல் ஏற்படு கின்றது என்று சில அறிவாளிகள் எண்ணினர்கள்.

இந்நோய் பரவி இருநூற்று ஐம்பது வருஷங்களுக்குப் பின் லூயி பாஸ்டியர் என்னும் அறிஞர் தொத்து நோய்கள் எல்லாம் கண்களுக்குத் தெரியாத சிறு உயிருள்ள கிருமிக் கூட்டங்களால்தான் உண்டாகின்றன என்பதை கண்டு பிடித்து நிரூபித்தார். இந்த உண்மை தெரிந்ததும் ஒவ்வொரு நோயையும் உண்டாக்கும் தனித் தனி கிருமிகளைப்பற்றி தீவிர ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் நுழைந்தனர். எல்லா நோய்க் கிருமிகளைக் கண்டுபிடித்தும் இந்த நோயின் காரண கர்த்தாவான கிருமியை மட்டும் விஞ்ஞானிகள் இருபதாம் நூற்றூண்டுவரைக் கண்டுபிடிக்க முடியாதிருந்தது. ருஷ்ய அறிஞரான மெட்சினிகாப் முயற்சி செய்தார். ஆனல் அவராலும் கிருமிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஸிபிலிஸ் கிருமி சாதாரணமாக பூதக்கண்ணுடியில் காண முடியாதது. அதனுல்தான் பலகாலம் அறிஞர்கள் கண்களுக்குப் புலப்படாது மறைந்து கிடைந்தது. கடைசியில் ஷாடின், ஹாப்மேன் என்ற இருவர் ஆராய்ச்சி செய்ததின் பலனுக ஸிபிலிஸ் கிருமியை பூதக்கண்ணுடியில் காண முடிந்தது. சூரியகிரணம் பூதக்கண்ணுடியின் அடிபாகத்தில் விழாது நான்கு புறமும் மறைத்து இருட்டான சூழ்நிலையில் ஒரு புறத்தில் மட்டும் வெளிச்சத்தின் கிரணங்கள் வருமாறு செய்து அந்த மாதிரி பூதக் கண்ணுடியில் பரிசோதித்தனர். இதை ஆங்கிலத்தில் 'டார்க் கிரவுண்ட் இல்லூமினேஷன்' என்பார்கள். இந்த பரிசோதனையில் கருமையான நடு இரவு ஆகாயத்தில் மின்னும் தாரகைகள் எத்தனை அழகாக காட்சி யளிக்குமோ அதுபோல் கருமையான சூழ் நிலையில் மெல்லிய வெள்ளி கார்க் ஸ்க்ரூ போன்று சிறு அணுக்கள் இங்குமங்கும் பூதக் கண்ணுடியில் தெரியும் வட்டத்தில் நீந்தி விளையாடிக்கொண்டிருக்கும். இவைகள்தான் ஸிபிலிஸ் வியாதியை உண்டாக்கும் கிருமிகள்.

இந் நோய்க்கிருமிகளைப் பற்றிய சில உண்மைகள் பின்வருமாறு ஆகும். ஸிபிலிஸ் நோயை உண்டாக்கும் கிருமிக்கு 'டிரிப்போனீமா பாலிடா' என்று பெயர். இக் கிருமிகள் மிக சுகவாசிகள் ஆதலினுல் மனித உடலைவிட்டு வெளி வந்ததும் அதிக உஷ்ணத்தையோ குளிரையோ தங்க சக்தியின்றி நசித்துப் போகின்றன.

ஒருவரிடமிருந்து இன்னெருவரிடம் இந்நோய் பரவுவது ஆண் பெண் சேர்க்கை ஒன்றினுல்தான். வியாதி வந்தவனுடன் பேசினுலும் அவன் உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்தாலும் நோய் ஒட்டிக் கொண்டு விடாது. காயமில்லாத தோலின் வழியே இக் கிருமிகள் உடலுக்குள் செல்ல முடியாது. ஆனுலும் வாயில் ஸிபிலிஸ் புண் உள்ளவன் எச்சில் செய்த பாத்திரத்தை மற்றவர் உபயோகித்தாலும் நோய் பரவலாம். இதைப் போலவே கை விரல்களில் காயம் ஏற்பட்டிருக்கையில் கவனிக்காது ஸிபிலிஸ் நோயாளியைப் பரிசோதிப்பதினுலும், இந்த நோயாளிக்கு ஆபரேஷன் செய்கையில் கத்தி காயம் ஏற்பட்டாலும் அதன்

வழியாகவும் நோய் டாக்டர், நர்ஸ் முதலியவர்களுக்கு ஏற்படலாம்.

ஸிபிலிஸ் நோய்க் கிருமிகள் உடலை யடைந்ததும் உடனே தமது லீலையைத் துவங்குவதில்லை. குறைந்தது ஒரு மாதம்வரை கிருமிகள் தமது ரூபத்தைக் காட்டாது கம்மென்றிருக்கும். இந் நோய் மூன்று கட்டங்களாக மனிதன் தேகத்தில் தோன்றுகிறது. முதல் கட்டத்தை ஆங்கிலத்தில் 'பிரைமரி ஸ்டேஜ்' என்பார்கள். முதலில் மறைவிடத்தில் ஏற்பட்டிருக்கும் சிறு குழிப் புண்ணைப் பற்றி நோயாளி அதிகம் கவனிக்காது அசட்டையாக இருக்கலாம். இந்தப் புண்ணுக்கு மருந்து போடா விட்டாலும் தானாக ஆறிவிடும். ஆனால் இதனுடைய விஷம் உடலில் உள்ள ரத்தத்தில் பரவி நிற்பதினால் வியாதி உள்ளே இருப்பதை நோயாளி அறிவதில்லை. முதற்புண் ஏற்பட்டு மறைந்த இரண்டு அல்லது ஆறுமாதங்களுக்குபின் இரண்டாவது கட்டம் ஆரம்பிக்கிறது. இதை 'செகண்டரி ஸ்டேஜ்' என்பார்கள். உடல் முழுவதும் அம்மை போன்ற புள்ளிகள் ஏற்பட ஆரம்பிக்கின்றது. இதை அம்மை என்று சிலர் தவறாக எடுத்துக்கொள்ளலாம். இதைத்தவிர இந்த கட்டத்தில் கூந்தல் தனது செழிப்பை இழந்துவிடுகின்றது. கைகால் முட்டி எலும்புகளில் விவரிக்க முடியாத ஓர்வலி ஏற்படுகின்றது. மூன்றுவது கட்டம் எனப்படும் 'டெர்ஷியரி ஸ்டேஜ்' இரண்டாவது கட்டத்தை உடனே தொடருவதில்லை. இதை நோயின் நாடகச் சிகரம் என வைத்தியர்கள் அழைக்கின்றனர்கள். இரண்டாவது கட்டம் தொடங்கி மறைந்து ஐந்து அல்லது ஆறு வருஷங்கள் கழித்து மூன்றுவது கட்டம் தொடங்கலாம். இந்த கடைசி கட்டத்தில் நோயின் விஷம் உடலில் உள்ள ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கலாம். எலும்பு, சர்மம், இருதயம், மூளை, ரத்தக் குழல்—எந்த உறுப்பேனும் இதனால் பாதிக்கப்பட்டு, தனது நிலை குலைந்து மனிதனின் வாழ்க்கைக்கு முடிவு ஏற்படுத்தக் கூடும்.

இந் நோயை கண்டுபிடிக்கும் விதம் தற்காலத்தில் சுலபமாகி விட்டது. நோய் இருக்குமென சந்தேகம் இருந்தால் இரத்தத்தை எடுத்து 'வாசர்மேன்' என்னும் பரீக்ஷை செய்து பார்த்தால் உண்மை புலப்பட்டுவிடும். இந்தப் பரீக்ஷை வைத்தியர்களுக்கு மிகவும் உபயோகமாக உள்ளது. நோய் இருக்கிறதா என்பதையும், நோய் சிகிச்சைக்குப் பின் மறைந்துவிட்டதா என்பதையும் இதன் உதவியாலே தெரிந்து கொள்கின்றனர்.

ஸிபிலிஸ் நோயைத் தீர்க்க உபயோகிக்கும் இரு வித மருந்துகள் இரண்டு வித உலோகங்களால் ஆனவை. ஆர்ஸினிக் என்பதினாலும், பாதரசத்தினாலும் தயாரிக்கப்பட்ட சில மருந்துகளை மாற்றி மாற்றி வாரத்துக்கு இரு முறையென குறைந்தது பதினெட்டு மாதங்கள் ஊசி மூலமாக உடலில் செலுத்தவேண்டும். இவ்வளவு காலம் வைத்தியம் செய்து கொள்ள நோயாளிகளுக்குப் பொறுமை இருப்பதில்லை. ஆகவே நோயாளிகள் குறை வைத்தி

# பட்டினியிலிருந்து
# நம்மை டீ எப்படிக்
# காப்பாற்றுகிறது?

அயல்நாட்டு நாணயச் செலாவணி நம் நாட்டுக்கு இன்று மிகவும் அவசியமாக இருக்கையில், நாம் ஏற்றுமதி செய்யும் 40 கோடி பவுண்டு தேயிலை, அவசியமான உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஏராளமான தொகையை அளிக்கிறது. டீ நம் நாட்டு கலாசாரத் தூதர்மட்டுமல்ல, பட்டினியைத் தடுக்க உத்திரவாதமும் அளிக்கிறது. ஏற்றுமதித் தொழிலில் இரண்டாவதாக நிற்கும் டீத்தொழில் நாட்டின் பொருளாதாரத் துறையில பிரதான ஸ்தானம் வகிக்கிறது.

**டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்**

- ஏழு லக்ஷம் ஏக்ரா நிலத்தில் வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு டீ உற்பத்தி செய்கிறோம்.
- இத் தொழிலில் 10 லக்ஷம ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.
- உள் நாட்டில அருந்தும டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணா வரியும், ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணா வரியும் சர்க்காருக்குக் கிடைக்கிறது. நாட்டு கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- மேலும டீ கம்பெனிகள் செலுத்தும வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.



# டீ

ஒரு மகத்தான இந்திய கைத்தொழில்

இந்தியன டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன போர்டாரால வெளியிடப்பட்டது. ITX 314 TM




# லிப்டன்ஸ்

## என்றால்

## முதல்தரமான டீ

LTX-151-TM

யத்தினால் பூரண குணமடைவதில்லை.

இரண்டு வருஷ காலம் விடாது வைத்தியம் செய்துகொண்டு இரத்தம் பரிசுத்தமாகிவிட்டது என்பதை பரிசோதித்து வைத்தியர் உறுதியாகச் சொன்னால் ஒழிய வியாதியை அடைந்தவன் மணம் செய்துகொள்ளக் கூடாது. ஏன் எனில் இந்த நோய் உள்ள ஆணிடமிருந்து மணம் செய்துகொண்ட மனைவிக்கும் நோய் ஏற்படும். அந்த நோய் பிறக்கும் குழந்தையையும் பாதிக்கும். தாய் தந்தையர் செய்த அறியாமையான செய்கைக்காக ஒரு பாவமும் அறியாத பச்சிளங் குழந்தைகளை இயற்கை என்னும் மாற்றாந்தாய் மிகவும் கொடுமையாகத் தண்டிக்கின்றாள்!

நோய் வந்தவுடன் ஆண் பெண் இரு பாலரும் ஒருவித தயக்கமும் இன்றி உடனே வைத்தியம் செய்துகொள்ளாவிடில் மிகவும் கெடுதல் ஆகும். ஸிபிலிஸ் நோய் கருவை எப்படிப் பாதிக்கின்றது என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணை விளக்கும்.

| | |
|---|---|
| 1939வது வருஷம் | ஆரோக்யமான குழந்தையைத் தாய் பெற்றாள். |
| 1941வது வருஷம் | இரண்டாவது குழந்தையையும் ஆரோக்யமாக பெற்றாள். |
| 1942வது வருஷம் | கணவனிடமிருந்தும் மனைவிக்கு நோய் வருகின்றது. |
| 1943வது வருஷம் | கருச் சிதைவு. |
| 1944வது வருஷம் | கருச் சிதைவு. |
| 1945வது வருஷம் | இறந்த குழந்தை வியாதி நிறைந்த உடலுடன் பிறக்கின்றது. |
| 1946வது வருஷம் | பிறவி நோய் கொண்ட பலஹீனமான உயிருடன் பிறக்கும் குழந்தைக்குத் தாயாகின்றாள். |
| 1947-ம் 1948-ம் | சிகிச்சை செய்து கொள்கின்றாள் |
| 1948ன் இறுதியில் | மறுபடி ஆரோக்கியமான குழந்தை பிறக்கின்றது. |

✲

**சரித்திரமென்பது 'டயரி'க் குறிப்பல்ல; மனித குலத்தின் கதை. இந்தியராகிய நமது கதையை அரசியல் கண்ணோட்டத்தோடு அளவிட்ட ஒரு சிறந்த நூலின் விமர்சனமே இது.**

# சுதந்திரமும் சுபிட்சமும்

○

கண. முத்தையா

நம் நாடு விடுதலையடைந்து விட்டது.

ஆனால் இந்நாட்டு பிரஜைகளாகிய நாம் எல்லோரும் சுதந்திரப் பிரஜைகளுக்குரிய சுக வாழ்வையும், பொறுப்புணர்ச்சியையும் அடைந்திருக்கிறோமா, என்றகேள்விக்கு "இல்லை" என்ற தீர்க்கமான பதில்தான் கொடுக்க முடியும்.

அன்னிய ஆட்சி ஒழிக்கப்பட்டுவிட்டதென்றால், நமது சுக வாழ்க்கையையும் சுபிட்சத்தையும் நாம் தேடிக்கொள்வதற்கு இடையூறுயிருந்த ஒரு பெரிய தடை நீக்கப் பெற்றுவிட்டது என்றுதான் அர்த்தம். தடையின்றி திறந்திருக்கும் வாழ்க்கைப் பாதையில் நமது முயற்சியின் மூலமும் உழைப்பின் மூலமும் முன்னேறி, நமது அபிலாஷைகளுக்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப் பாடுபட வேண்டியது நமது கடமை. அவ்விதம் நமது வாழ்க்கையை சுபிட்சமும் கண்ணியமும் நிறைந்ததாய் அமைத்துக் கொள்வதற்கு, நமது நாட்டின் கடந்தகால அரசியல், பொருளாதாரச் சரித்திரத்தை சரியாகப் புரிந்து கொள்வதுடன், நமது நாட்டின் மூலப் பொருள்வளம், நமது உற்பத்தி சக்தி இவைகளையும் சரியாக மதிப்பிட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றை நாம் நன்கு உணர்ந்து கொள்ளப் பெரிதும் துணை செய்கிறது ஸ்ரீ ரஜனிபாமிதத் எழுதிய இன்றைய இந்தியா* என்ற நூல். சரித்திரம் என்றால் சில சம்பவங்களின் கதைகளாகவும், தேதிகளைக் கூறும் பஞ்சாங்கமாகவுமே படித்து வந்தவர்களுக்கு ரஜனிபாமிதத்தின் இந்த நூல் புதுமாதிரியாகவும் படிப்பதற்குச் சிறிது சிரமமாகவும் கூட இருக்கலாம். ஆனால் சிரத்தையோடு படிப்பவர்களுக்குமிக உபயோகமான விஷயங்கள் நிறையக் கிடைக்கின்றன.

பிரிட்டிஷார் இந்தியாவைச் சிறிது சிறிதாகத் தங்கள் ஆட்சிக்குக்கீழ் கொண்டுவந்தபோது தங்களையறியாமலேயே மேலை நாட்டு நிர்வாக முறையையும் புகுத்தினார்கள். ஓரளவு வரி செலுத்துவதைத் தவிர மத்திய அரசாங்கத்துடன் எவ்விதத் தொடர்பு மற்றதாய், பக்கத்திலுள்ள மற்றக் கிராமங்களுடன் கூட எந்தவித இணைப்புமில்லாததாய் தனித்து இயங்கிக்கொண்டிருந்த கிராம ராச்சியங்கள் பிரிட்டிஷாரின் வியாபார நலனுக்காக உடைக்கப் பெற்றபொழுது பிரிட்டிஷார் தங்களையறியாமலே தாங்கள் விரும்பாத ஒரு காரியத்தைச் செய்தார்கள். அதாவது

* இன்றைய இந்தியா: ஆங்கிலத்தில்எழுதியவர்; ரஜனி பாமிதத். தமிழாக்கியவர்: எஸ், ராமகிருஷ்ணன். வெளியிட்டவர்: ஜனசக்தி பிரசுராலயம், பிராட்வே, சென்னை. விலை: இரண்டுபாகங்களும் ரூபா 7.

பிரதேச ஒற்றுமைக்கும் இந்தியாவின் தேசீய ஐக்கியத்திற்கும் அடிகோலி விட்டார்கள் என்ற விபரத்தை முதற் பகுதியில் ஆசிரியர் விளக்கிக் கூறும் முறை பாராட்டத்தக்கது. முதலாவது உலக யுத்தத்தின் காரணமாக இந்தியாவில் இயந்திரத் தொழிலை வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டதையும், அதன் காரணமாக ஏராக்க முதலாளித்வம் புகுத்தப்பட்டதையும், அந்த நிர்ப்பந்தமான சூழ்நிலையிலும் இயந்திர உற்பத்தி போன்ற கனரகத் தொழில் முயற்சிகளை நிர்த்தாட்சண்யமாக சர்க்கார் தடுத்துவிட்ட விபரங்களையும் படிக்கும் போது திடுக்குறாமலிருக்க முடியாது.

இந்தியாவின் மிக முக்கியமான பிரச்னையான விவசாயப் பிரச்னையை மிகத் தெளிவாக ஆராய்ச்சி செய்திருக்கிறார். நில உரிமை முறையிலே பிரிட்டிஷார் கொண்டுவந்த ஒரு பெரிய மாற்றத்தை விவரிக்கிறார். சுய தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் கிராமங்களின் கண்டமாக விளங்கிய இந்தியாவில், ஒவ்வொரு கிராமத்திலும் விளை நிலம் யாவும் கிராமச் சொத்தாகவே கருதப்பட்டது. அதாவது நிலம் விற்பனை செய்ய முடியாததாய் இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவாய் நிலவிற்பனை உரிமையும், நில பிரபுத்துவ முறையும் அமுலுக்கு வந்தன. இதன் பயனாக விவசாயக் கூலிகளின் எண்ணிக்கை பயங்கரமான முறையில் வளர்ந்து வருவதைப் புள்ளி விபரங்களுடன் விவரிக்கிறார்.

பிற்பகுதியில் இந்திய தேசீய வளர்ச்சியுடன் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியையும், பிரிட்டிஷ் நலன்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பாக நின்ற போதும் தேசீய உணர்ச்சியின் பாதுகாப்பிலே இந்தியத் தொழில்களும் வளர முயன்றதையும், இரண்டாவது உலக மகா யுத்தம் இந்தியாவின் தொழில் வளர்ச்சியைத் தடுக்க முடியாதபடி அரசாங்கத்தை நிர்ப்பந்தித்துவிட்ட விபரத்தையும் புள்ளி விபரங்களுடன் விவரிக்கிறார். இந்தியாவில் தொழில் வளர்ச்சியோடு கூடவே முதலாளி—தொழிலாளி வர்க்கப் பிரிவினையின் வளர்ச்சியையும், தொழிற் சங்க இயக்கங்களின் தோற்றம், சோஷலிஸ அறிவின் வளர்ச்சி, தொழிலாளர்களின் போராட்ட சக்திகளின் வளர்ச்சி ஆகியவற்றையும் விவரித்திருக்கிறார்.

ஒவ்வொரு நிலைமையையும், உலக சூழ்நிலையுடனும், பிற நாட்டின் வளர்ச்சிகளுடனும் ஒப்பிட்டு, ஒரு சிறிய அம்சத்தைக்கூட விட்டு விடாதபடி நன்கு கவனித்து விளக்குகிறார். மிகைப்படவோ, அன்றிக் குறைத்தோ எதையும் மதிப்பிடாமல் எல்லா விஷயங்களையும் சரியானபடி எடைபோட முயன்றிருக்கிறார். ஆதாரத்துடன் இந்தியாவின் மூலப் பொருள் வளத்தையும், மனித உழைப்புச் சக்தியையும் கணக்கிட்டுக் கூறுகிறார். இவ்வளவு செல்வமும், சக்தியுமிருந்தும் நாம் ஏழைகளாயிருப்பதை நினைத்து ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. இவ்விதம் இந்தியர்களில் பெரும்பாலோர் ஏழைகளாயிருப்பதற்குரிய காரணத்தையும், அதற்குரிய பரிகாரத்தையும் தெளிவாகவும் நிச்சயமான முறையிலும் விளக்குகிறார்.

மொழிபெயர்ப்பு மொத்தத்தில் நன்றாகவே இருக்கிறது. கஷ்டமான பொருளாதார விஷயத்தை முடிந்தவரை புரியக்கூடிய தமிழிலே கொண்டுவந்திருக்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணன். தமிழ் நடை இன்னும் கொஞ்சம் சரளமாயிருந்தால் வாசகர்களுக்கு சிரமம் தோன்றாமலிருக்கும். இந்தமாதிரி முக்கியமான நூல்களை யாவது விலைமலிவைக் குறியாகக் கொள்ளாமல், பெரிய எழுத்துக்களில் நல்ல முறையில் அச்சிட்டு வெளியிட்டிருந்தால் படிப்பவர்களுக்கு மிக்க சௌகரியமாயிருக்கும்.

அறம் பாடுவது புலவர் தொழில். ஆனால் நாட்டு மக்கள் சொல்லும் வசைச் சொற்கள் தத்துவப் பிரகாசனையும், ஆண்டான் கவிராயனையும் தோற்கடித்து விடும். நீங்கள் அதைக் கேட்டதுண்டா?

# நாட்டுப்பாடல்கள்

o

சு. ரா. ஆதிமூலம்

ஈயாத லோபியைப்பற்றிய அழகான பாட்டு. மிகைபடக் கூறி பாட்டை இனிமையாக்குவதைப் பாருங்கள். நாள் வழிப் பேச்சிலேயே கிராமவாசிகள் அடுக்குத் தொடராகப் பேசுவதுதான் வழக்கம்.

மாபாவி தீபாவி
வாயெடுத்தா(ல்) பெரும்பாவம்
தவிச்சதண்ணீ(ர்) கொடுக்கமாட்டாள்
அவிச்சகீரை ஈயமாட்டாள்
அறுத்த கைக்குச்
சுண்ணும்புதரா(ள்)
ஆண்டிவந்தா(ல்)
பிச்சைபோடா(ள்)
அவளைத் தொட்டுப் படப்பைத் தொட்டால்
தீப்பிடிக்கும் அட்டியில்லாம(ல்)

அவள் பெயரைச் சொல்ல வாயெடுத்தாலே பெரும் பாவம். தாகத்துக்குத் தண்ணீர் இல்லையென்பாளாம். மிகவும் 'சல்லி' சான விலையுள்ள கீரையைக்கூட கொடுக்கமாட்டாளாம். (கிராமங்களிலே ஒரு வீட்டுக்காரர் மற்றொரு வீட்டில் கறி வாங்கிச் சாப்பிடுவது வழக்கம். நாடோடி மக்கள் அரிவாள் கத்தியுடன் பழகுவதால் அடிக்கடி கோரை ஏற்பட்டு இரத்தம் வந்தால் சுண்ணும்பைத் தடவுவது வழக்கம். அதில் மூக்குப் பொடி, மண் பொடி இவைகளைப் போடுவதும் உண்டு) ஆண்டி வந்தால் பிச்சையும் போடமாட்டாளாம். அப்பேர்ப்பட்டவளைத் தொட்டுவிட்டு வைக்கோற் படப்பைத் தொட்டால் உடனே தீப் பற்றும் என்று சொல்கிறாள்: உண்மையில் மெய்யாலும் மனத்தாலும் சொல்லாலும் 'தீண்டப்படாதவள்' ஈயாத 'அவள்' தான் என்று பாடிவிடுகிறாள்.

* * *

ஒரு கிழவியை எவனோ துன்புறுத்தியிருக்கிறான். அவள் மனம் நொந்து ஏசுகிறாள் அவனை. இந்த 'ஏச்சு'களைச் சர்வ சாதாரணமாகப் பட்டிகளில் கேட்கலாம்.

(கையிலே) கறையான் அரிக்க!
கட்டெறும்பு கொட்ட!
தைமாசப் பேதியிலே
தப்பாமல் போக!
மஞ்ச(ள்)நீ தேய்க்காம(ல்)
மாலைசூடிப் பார்க்காம(ல்)
போ(கி)ற இடத்திலே
புல்முளைச்சுப் போக!
பாம்பு கடிச்சு
'படக்'கென்று போக!

கும்பி யெரிவதுபோல்
நீயெரிஞ்சு போக!
குலே துடிப்பதுபோல்
நீதுடிச்சு போக!
இடிஞ்சு தகர!
எள்ளு விதைக்க!
எருக்கும் குறுக்கும்
இணங்கி முளேக்க!
காணமும் பயறும்
கலந்து முளேக்க!

ஐயோ, பாவம்! கிழவியை மிகவும் அதிகமாக—அத்துக்கு மீறி—துன்புறுத்தி யிருக்க வேண்டும். 'அறம் பாடுதல்' போலல்லவா திட்டுகிறுள். இவ்விதம் திட்டி அழுவதை "அறம் வைத்து"த் திட்டுதல் என்றே மக்கள் சொல்கிறுர்கள். மஞ்சள் தேய்த்தல் என்ருல் மணமாகுதல் என்று பொருள். அவனேத் திட்டினவள் இறுதியில் அவன் வீடு இடிந்து தகர்ந்து எள்ளும் பயறும் காணமும் விதைக்கும் புஞ்சையாகவோ 'எருக்கும் குறுக்கும்' முளேக்கும் காடாகவோ போகவேண்டும் என்று சபிக்கிருள்.

* * *

**நோயாளி மகனேப்பற்றி வருந்தி சொல்லும் தாய்.** தண்ணீர் எடுக்கப் போகிருள். அவளிடம் ஒருத்தி மகன் சுகத்தைக் கேட்கிருள். தாய் சொல்கிருள்.

வாளே மீன்போல
வயிறு ஒண்டிப்போச்சு
சுக்கா(ய்) உல(ர்)ந்திட்டான்
துரும்பா(ய்) கரைஞ்சிட்டான்
அன்னம்தண்ணீ(ர்) என்று
ஆறுமாச மர்ச்சு
குலே ஒண்டிப்போச்சு
குடல் ஒண்டிப்போச்சு
வெங்காயக் கூடுபோல
நெஞ்சொட்டிப் போச்சு
பார்க்கக் கண் கூசுது
பாவிமனம் கேட்கலே
பெற்றமனம் பித்து
பிள்ளேமனம் கல்லு
அல்லும் பகலும்
அவனேடு தொல்லேயக்கா!

ஒரு நோயாளியை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிருள், பாருங்கள். சுக்காய் உலர்தல்—ஈரம் அதாவது இரத்த சத்து என்பதே இல்லாமல் போதல் என்று பொருள். வெங்காயக் கூடு என்பது வெங்காயம் போடுவதற்கு உபயோகப்படுத்தப்படும் பிரம்பிஞல் செய்யப்பட்ட கூடு. உயரமாய் குறுகி யிருக்கும்; அதைப்போல் குறுகி எலும்பு தெரியும்படி நெஞ்சு ஒட்டிப் போய்விட்டதாம். தாய்மை உள்ளத்தை அப்படியே 'பிட்டு' வைக்கிருள் அம்மாது. இவ்வகையான பாட்டுகள் நிறைந்து கிடந்திருந்தன அந்நாளில். "நாகரிகம் வளர வளர கவிதை தானகவே குறைவடையும்" என்று ஆங்கில சரித்திராசியர் மெக்காலே கூறியது நாட்டுப் பாடல்களேப் பொறுத்தவரை முற்றிலும்சரியாகவே இருக்கிறது.

*

## மன்னிப்பு

பலஹீனமானவர்கள் எப்பொழுதும் மன்னிப்பது கிடையாது; மன்னிப்பது என்பது பலசாலிகளுடைய இயல்பாகும். மன்னிக்கும் காரியம்தான் போர்வீரனுடைய ஆபரணமாகும்.

—மகாத்மா காந்தி

# புத்தக உலகம்

**பதில் கூறுங்கள் :** [ஆசிரியர் : ரா. தணலன். கிடைக்குமிடம் : எரிமலைப் பதிப்பகம், துறையூர். விலை அணா 8]

ஜனங்கள் படும் பல்வேறு அல்லல்களைச் சித்திரித்துப் பாடல்களாகப் புனைந்திருக்கிறார் ஆசிரியர். இதைப் படித்த பிறகு பதில் கூறவேண்டிய சந்தர்ப்பமே ஏற்படுவதில்லை. கடவுளின் குணாதிசயங்களைப் பற்றிய விசாரணைகளும், தற்காலத்து இன்னல்களைப் போக்க ஆசிரியர் தேடும் வழிகளும் ஆழ்ந்த சிந்தனையின் சின்னங்களாகக் காணப்படவில்லை.

**திப்பு சுல்தான் :** [ஆசிரியர் : வைத்தண்ணா. கிடைக்குமிடம் : நவபாரதி பிரசுராலயம் லிமிடெட், திருநெல்வேலி & சென்னை. விலை அணா 8.]

கையில் எடுத்தது முதல் படித்துக் கீழே வைக்கும் வரையில் சற்றும் சுவை குன்றாது, சமவேகத்தில் ஓடி முடியும் இந்நாடகத்தை நாம் அவசியம் படிக்க வேண்டும். வைத்தண்ணாவின் முயற்சி வெற்றி பெற்றுள்ளது.

**மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்**

**காந்திஜீயின் இராமன் :** [தொகுத்தவர் : எம். கிருஷ்ணசாமி. கிடைக்குமிடம் : "மோஹன்" பிரசுராலயம், துறையூர், திருச்சி ஜில்லா. விலை அணா 6.]

காந்தியடிகள் தம் வாழ் நாளின் பிற்பகுதியில் இராம நாம மகிமையைப் பற்றி பல்வேறு கூட்டங்களில் எடுத்துக் கூறிவந்தார். கூட்டத்தில் சிலர் இதை விரோதித்ததும் உண்டு. அவர்களுக்கு அளிக்கப் பட்ட பதில்களுடன், இராம நாமமே உத்தம சஞ்சீவி என்று ஆணித்தரமாக உரைக்கப் பட்டுள்ள உபதேச மொழிகள் பலவும் இதில் சேகரிக்கப் பட்டுள்ளன.

**செஞ்சியைப் பார் :** [ஆசிரியர் : மா. கோவிந்தசாமி. கிடைக்குமிடம் : மா. கோவிந்தசாமி, ஆசிரியர், செஞ்சி. விலை அணா 10.]

இந்நூலைப் படிக்கையில் செஞ்சிக்கே போய், பிரசித்தி பெற்ற இத்தலத்தை நேரிலே கண்டு காணவேண்டுமென்று அவா உந்துகிறது. தமிழர்களின் மனத்தில் அமரத்துவம் பெற்றுள்ள தேசிங்கு ராஜனின் சரித்திரமும், செஞ்சியின் பண்டைய வரலாறுகளும், நகர அமைப்பும் பற்றி இதிகாச ஆதாரத்துடன் விவரமாக விளக்கும் இந்நூல் தமிழர்களுக்கு உதவியாக இருக்கும். முக்கியமாகச் செஞ்சியைக் காணச் செல்லும் பிரயாணிகளுக்கு இதனால் மிகுந்த பிரயோஜனம் உண்டு. இவ்விடமுள்ள கோட்டைகளின் 8 புகைப் படங்களும் இதில் கொடுக்கப் பட்டுள்ளன.

**பகவான் அரவிந்தர் பத்தினியாருக்கு எழுதிய கடிதங்கள் :**

[கிடைக்குமிடம் : லோகோபகாரி காரியாலயம், 7. கிடங்குத் தெரு, சென்னை-1. விலை அணா 8.]

சமஉரிமை வேண்டும், சமத்துவம் வேண்டும் என்று பெண்கள் போராட முன் வந்துள்ள இக் காலத்தில் பகவானின் இப் பழைய கடிதங்களுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. கணவன் மனைவியின் சம்பந்தம் எவ்வாறிருக்க வேண்டும் என்பதைக் கூறுகையில் பின் வருமாறு குறிப்பிடப்படுகிறது : "ஈசா! எனது கணவனுக்கு நான் ஒரு தடையாக இராமல், அவனுடைய ஜீவ லட்சியத்திலேயும் அவன் முக்திக்குச் செய்யும் முயற்சியிலேயும் அவனுக்கு உதவி செய்து துணை நிற்கும்படி அருள் செய்

வீராக......" (பக்கம் 26) "இப்பொழுது எனக்கு மிகுந்த கெட்ட காலம். என்னை எல்லாப் பக்கங்களிலும் இழுக்கிறார்கள். அது எனக்குப் பைத்தியம் பிடிக்கும்படி செய்துவிடும். இந்த சமயத்தில் நீ அமைதியற்றிருந்தால், எனது கவலைகள் அதிகமாய்விடும். அவ்வாறன்றி நீ ஊக்கமும் சாந்தியுமுள்ள செய்தி அனுப்பிக்கொண்டிருந்தால், அது எனக்கு உறுதியும் சாந்தியும் அளிக்கும்; எல்லாத் தொல்லைகளையும் மகிழ்ச்சியுடன் எதிர்த்துப் போராட நான் வல்லவனாயிருப்பேன்." (பக்கம் 29)

கல்யாணம், கணவன், மனைவி என்ற சம்பிரதாயத்தை நாம் தொடர்ந்து அனுஷ்டித்து வர வேண்டுமென்று நம்பினோமாயின் பகவானின் இப்பொன்மொழிகளை பலதடவை மனனம் செய்து, நடைமுறையில் கடைப்பிடிக்கவும் வேண்டும். பெண்மணிகள் ஒவ்வொருவருக்கும் ஏற்ற வேதவாக்குகளாகும் இவை. இந்நூல் நாலாவது பதிப்பாக வெளி வந்துள்ளது சந்தோஷத்தை அளிக்கிறது என்றாலும், இன்னும் 40 பதிப்புக்கள் வெளி வந்து என்றென்றும் தமிழர்கள் கைக்கெட்டக் கூடிய கிரந்தமாக இருந்து வரவேண்டும். இந்நூலை ஸ்ரீ பரலி சு. நெல்லையப்ப பிள்ளை மொழி பெயர்த்துள்ளார்.

**மலரும் தமிழகம்:** [ஆசிரியர்: சாமி. பழனியப்பன். கிடைக்குமிடம்: புதுமை அலுவலகம், வலையபட்டி Po., புதுக்கோட்டை. விலை: அணா: 12.]

நாட்டு நடப்பைப் பற்றி அவ்வப்பொழுது மனத்திலெழுந்த விஷயங்களைப் பற்றி பொருமுகிறோம். காது கொடுத்துக் கேட்பவர்களிருந்தால் புலம்பியும் தீர்த்துக் கொள்கிறோம். எழுத்து மூலம் வெளியிடச் சௌகர்யமிருந்தால் பத்திரிகைகளில் எழுதி, திரும்பத் திரும்ப நாமே படித்து ஆனந்தமடைகிறோம். அதேபோல ஆசிரியர் மனத்தி லெழுந்தவைகளை பாடல்களாகப் புனைந்து இதில் திரட்டி அளித்திருக்கிறார்.

**தமிழுலகு:** [ஆசிரியர்: எஸ். எம். மகாலிங்க முதலியார். கிடைக்குமிடம்: தென்னவர் நிலையம், கோட்டாறு, தென் திருவிதாங்கூர். விலை ரூபாய் 2]

"தமிழ் வாழ வேண்டும். தமிழ்க்கலை ஓங்க வேண்டும். தமிழர் பழக்கமும் தமிழ் நாட்டு வழக்கமும் மிளிர்ந்திலங்க வேண்டும்" என்பதே இந்நூலை ஆக்கியோரின் உயர் நோக்கங்கள். அதற்கொவ்வ தமிழர் நாடு, தமிழ், தமிழர், தமிழர் கடமை என்ற நான்கு தலைப்பின் கீழ் பல்வேறு புராதன ஆராய்ச்சிகளின் முடிவை எடுத்துக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு தமிழனும் படித்துப் பயன் பெறக் கூடிய நூல்.

உயர்வான காகிதத்தில் நேர்த்தியான முறையில் அச்சிடப்பட்டு, மென்மையான பைண்டுடன் வெளி வந்துள்ளது.

—மீ. வி.

**உலகம் உருப்படுமா?** [ஆசிரியர்: சக்திமோஹன். வெளியிட்டோர்: தியாகக் கொடி பதிப்பகம், துறையூர், திருச்சி ஜில்லா. விலை அணா 6.]

இந்தப் புத்தகம் உலக அரசியலை அலசிப் பார்க்கும் நோக்கத்தோடு எழுதப் பெற்றது. படாடோபமான சொற்களையும், உணர்ச்சி வேகம் கொண்ட வாக்கியங்களையும் எழுதினால் தான் அரசியலைப் புரிய வைக்க முடியும் என்று எண்ணுகிறார் ஆசிரியர். ஒவ்வொரு நாட்டின் உள் நாட்டு அயல் நாட்டுக் கொள்கைகளைப் பற்றி ஒன்றும் கூறாது, வாசகர்கள் ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் துவேஷ உணர்ச்சி கொள்ளும்படி காரண காரியமின்றித் தூற்றுகிறார். உலக அரசியலை இந்தச் சிறிய நூலிலேயே எழுதிவிடலாம் என்று எழுத முற்பட்ட ஆசிரியரின் திறமையைப் பாராட்டத்தான் வேண்டும்!

**சென்னை ஷாப் சட்டம்:** [சென்னை அரசாங்கத்தின் 1947-ம் வருஷத்திய 33-வது சட்டம். வெளியிட்டோர்:

தியாகக் கொடி பதிப்பகம், துறையூர், திருச்சி ஜில்லா. விலை அணா 6.]

சென்னை அரசாங்கத்தாரின் கடைகள், கடை சிப்பந்திகள் சட்டத்தின் தமிழ்மொழி பெயர்ப்பே இந்தப் புத்தகம். இந்தச் சட்டம் யாருடைய நன்மைக்காக ஏற்படுத்தப் பட்டதோ அவர்கள் படித்தறிந்து கொள்ளுமாறு தமிழில் வெளியிட்டிருப்பது வரவேற்கத் தக்கது.

**நெசவுத் தொழில் குறிப்புகள்:** [ஆசிரியர்: K. வாசுதேவ ராவ், வெளியிட்டோர்: K. வாசுதேவ ராவ் வீவிங் சுபர்வைசர், மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ்மில், மேட்டூர் அணை. விலை அணா 8.]

தொழிலில் அபிவிருத்தி அடைய வேண்டிய நம் நாட்டில் இம்மாதிரி புத்தகங்கள் வெளிவருவது மகிழ்ச்சிக்கு உரிய விஷயம். ஆசிரியர் நெசவு மில்லில் பல வருஷங்கள் இருந்து அனுபவம் பெற்றவர். இந்த நூல் சிறப்பாக நெசவுத் தொழிலாளிகளுக்குப் பெரிதும் பயன்படும்.

**ஜெயப்பிரகாஷ்:** [ஆசிரியர்: புரட்சிநேசன். வெளியிட்டோர்: தியாகக்கொடி பதிப்பகம், துறையூர், திருச்சி ஜில்லா. விலை அணா 4.]

இந்திய சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணனின் வாழ்க்கை வரலாற்றை மேலெழுந்தவாரியாகக் கூறுகிறது இப் புத்தகம். 1942 கிளர்ச்சியில் ஜெயப்பிரகாஷ் செய்த வீரச் செயல்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

—க. ப

**முத்தமிழ்வாணர்:** [ஆசிரியர்: பண்டித இராம சுப்பிரமணிய நாவலர், கிடைக்குமிடம்: செந்தமிழ் நிலையம் நூற் பதிப்பகம், பத்மநாபபுரம், நாகர்கோவில் (வழி). விலை அணா 8.]

சங்ககாலப் புலவர்களான கபிலர், பரணர், நக்கீரர் முதலியோர் பாடியுள்ள பாடல்களில் சிலவற்றுக்கு சந்தர்ப்ப விளக்கமும், பொருள் விளக்கமும் தந்து இந் நூல் புனையப் பெற்றிருக்கிறது. எனினும் ஆசிரியர் உபயோகித்துள்ள தமிழ் நடை மிகவும் கரடு முரடாய், சங்க காலத்துக்கும் அப்பால் செல்லுவதாகத் தோன்றுகிறது. பண்டித நடையின் படாடோபத்தைக் காட்டிலும் பாமர நடையின் எளிமைதான் உலகுக்குப் பயன் தரும்.

**Indigestion. Its Cause and Cure:** [ஆசிரியர்: எல். ராமச்சந்திர சர்மா, கிடைக்குமிடம்: Nature cure Publishing House, Ltd., Pudukkottai, S. India. விலை ரூ. 1-8-0.]

வயிற்று உபத்திரவத்திற்கு வைத்தியரின் உதவியை எதிர்பாராமல், இயற்கை முறைகளில், அந் நோயை நிரந்தரமாகக் குணப்படுத்துவதற்குரிய ஆசன முறைகளையும், அப்பியாச முறைகளையும் இந் நூலில் விளக்கி யிருக்கிறார் ஆசிரியர். ஆசனமுறைகளைப்பற்றிய புகைப்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வயிற்று உபத்திரவம் உள்ளவர்களும், வைத்தியர்களும், இந்நூலைப் படிக்கலாம்.

—தொ. மு. சி.

## பிறகு பழி ஏது?

தூயவரைத் துணிந்த பின்பு பழிவந்து தொடர்வதுண்டோ?

—கம்பர்

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.

## அமெரிக்கன் மாடல் ரிவால்வர்

**NO LICENCE NEEDED**



**உங்கள் வாழ்க்கை, ஆஸ்திகள், மரியாதை முதலியவற்றை திடீரென எதிர்க்கும் முரடர்களிடமிருந்தும். கொடிய விலங்குகளிடமிருந்தும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்**

வீட்டிலும், வனபோஜனம் அல்லது பிரயாணத்திலும், உறுதியும் இலேசானதுமான இந்த ரிவால்வர் எப்பொழுதும் உங்கள் உற்ற துணைவன் என்பதை நிரூபிக்கும். தானாகவே சுற்றிவரும் 6 ரவைகள் வைக்கக்கூடிய அறையுடன் கூடியது. அமெரிக்காவில் செய்யப்படும் உண்மைப் பிஸ்டலைப் போலவே தோற்றமளிக்கிறது. இதன் எடை 15 அவுன்ஸ்கள். நீளம் 9 அங்குலம். அதிபயங்கரமான சப்தத்துடன் நீளமாகக் கோடுபோல் ஒளிகக்கிக்கொண்டு வெடிக்கிறது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் அனுப்புங்கள். செலவில்லாத இம் மெய்க்காப்பாளன் இல்லாதிருக்காதீர்கள்.

**விலை ரவைகளுடன்**

நெ-111 ரூ. 5/-　　நெ-333 ரூ. 7/8

நெ-222 ரூ. 6/8　　நெ-444 ரூ. 8/8

B-555 ஸ்பெஷல் வெள்ளி முலாம் விலை ரூ. 10—0—0

அலாதியாக 4 டஜன் ரவைகள் விலை ரூ. 4—8—0

பிஸ்டல் பெட்டி பில்டுடன் விலை ரூ. 5—0—0

உபயோகிக்கும் எண்ணெ புட்டி 1-க்கு விலை ரூ. 1—0—0

**HINDUSTAN TRADERS**

**P. Box No. 286—KANPUR (U. P)**

## கேசரியின் மூன்று பிரசித்த மருந்துகள்

★

## லோத்ரா

**கர்ப்பாசய நிவாரணி**

மலடு, சங்காதோஷம், கீல்வாயு, தூக்கமின்மை, ஆஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றை குணப்படுத்தும்.

★

## அம்ருதா

**ரத்த சுத்தி டானிக்**

ரத்த சோகை, அஜீரணம், மலச்சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலைசுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றை குணப்படுத்தும்.

★

## அர்க்கா

**சிறந்த ஜுர நிவாரணி**

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல்குலைக் கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்

**கேசரி குடீரம் லிட்,**

**ராயப்பேட்டை, மதராஸ் 14.**

# சக்தி வெளியீடுகள்

**செல்வம்** — க. சந்தானம்

பொருளாதாரத்தைப் பற்றிய நூல். பாமரரும் புரிந்து கொள்ளக்கூடியவாறு எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற புத்தகம். 1 8 0

**லெனின் பிறந்தார்** — ஆர். ராமநாதன்

ருஷ்யாவின் தந்தை லெனின் வரலாறுதான் இந்த நூல். இந்த நூலைப் படிப்பதால் ருஷ்யப் புரட்சி சரித்திரத்தையும் கூடவே படிப்பது போல இருக்கும். 3 8 0

**உலோகங்களும் நாமும்** — மு. அருணசலம்

உலோகமும் நாமும், உலோக உலகம், உலோகத்தாது, உலோகங்கள் கிடைக்கும் விதம், இரும்பு, மற்ற முக்கிய உலோகங்கள், உலோகத் தொழில் பற்றிய அரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. ரூ. 5 0 0

**உணவுப் பஞ்சம்** — மு. அருணசலம்

உணவுப் பஞ்சம் ஏன் ஏற்பட்டது? உணவுப் பஞ்சத்தைத் தடுப்பது எப்படி? உணவுப் பஞ்சமே இனி வராதபடி எப்படிச் செய்வது என்பது பற்றிய புத்தகம். ரூ. 1 8 0

**ஐந்தாவது சுதந்திரம்** — ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

இதில் பதினன்கு கட்டுரைகள் இருக்கின்றன. சமூகத்தில் ஊறிக்கிடக்கும் ஊழல்களைப் பாரபட்சமின்றிக் கண்டிக்கும் கட்டுரைகள், நம்மவரோடு உலகத்தவரை ஒப்பிட்டு நோக்கும் கட்டுரைகள், நாட்டின் முற்போக்கு பற்றிய கட்டுரைகள், தெரியாத விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் கட்டுரைகள் இதில் அடக்கம். நமது அருமை தேசபக்தர் காலஞ் சென்ற சத்தியமூர்த்தியின் மகள்தான் இதன் ஆசிரியர் ஸ்ரீமதி லக்ஷ்மி. ரூ. 1 8 0

## சக்தி காரியாலயம், சென்னை 14

# சக்தி வெளியீடுகள்

**இனி நாம் செய்ய வேண்டுவது யாது?** — டால்ஸ்டாய்
உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்னும் அரிய சித்தாந்தம். ரூ. 3 0 0

**அபேதவாதம்** — ராஜாஜி
பொது உடமைத் தத்துவத்தை இந்திய முறையில் ராஜாஜி விளக்கி இருக்கிறார். ரூ. 1 0 0

**அறிஞர் மார்க்ஸ்** — ஆர். ராமநாதன்
உலகத்தை உய்விக்கத்தோன்றிய மகான் மார்க்ஸின் கொள்கையும் வரலாறும் ரூ. 1 8 0

**ஏசுநாதர் போதனை** — ஜே. ஸி. குமரப்பா
ஏசுபெருமான் இந்த உலகத்தில் அவதரித்ததின் தத்துவம் யாது? அவருடைய போதனையால் மக்கள் அடையக்கூடிய பயன்களையும் விளக்குகிறது இந்நூல். மகாத்மாவின் அருமையான முன்னுரையும் இருக்கிறது. ரூ. 1 8 0

**ரத்தக் களரி** — நேதாஜி
இந்திய தேசிய ராணுவத்தினருக்கு அவ்வப்பொழுது பேசிய பிரசங்கங்களின் தொகுப்பு, உக்ரமிக்க பேச்சுக்கள் சக்தி மோஹன் மொழி பெயர்த்தது. ரூ. 1 8 0

**சூரிய நமஸ்காரம்** — டி. வி. திருவேதி
சூரிய நமஸ்கார முறைகள், மந்திரங்கள், நியமங்கள் இவைகளால் ஏற்படும் நன்மைகள் அடங்கியிருக்கின்றன. ரூ. 1 0 0

**பாரதியார் சரித்திரம்** — செல்லம்மா பாரதி
மகாகவி பாரதியாரைப் பற்றி அவருடைய மனைவி சொல்லும் வரலாறு. ரூ. 2 0 0

## சக்தி காரியாலயம் சென்னை, 14

வருகிறது!



பக்ஷிராஜாவின்

# பவளக்கொடி

மஹாலிங்கம்... ராஜகுமாரி... வரதன்... ஸரோஜினி
கிருஷ்ணன்... மதுரம்... லலிதா... பத்மினி நடித்தது—

*Directed by* **SRIRAMULU NAIDU**
**NARAYANAN Co** *Release..*

# உங்கள் வியாபாரம்

★

உங்கள் வியாபாரம் செழிக்க வேண்டுமானால் காகிதம், கவர், ரசீதுப் புத்தகம் விசிடிங் கார்டு எல்லாம் அழகாக இருக்க வேண்டும். அவைகளை அழகுடன் செய்து தருவதற்கு சென்னையில் பெயர் பெற்ற அச்சுக்கூடம் நடைபெறுகிறது. அதன் பெயர் :

## சக்தி பிரஸ் லிமிட்டெட்

**115-E, மோபரீஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை 14.**

டெலிபோன் : 8135



அழகும் மணமும் பொருந்திய
புஷ்பம் "ரோஜா"
சுவையும் மணமும் பொருந்திய
பாக்குத்தூள் "அசோகா"

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூர்